
ஆபரண மாளிகை
நகைசேமிப்புத் திட்டத்தில் இணைந்து அதிஷ்டசாலிகள் ஆகுங்கள்.
அதிஷ்டசாலி தொடர்ந்து பணம் கட்டத் தேவையில்லை.
நியூ ரூபி
7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05

NORD OPTICAL

லாச்சப்பலில் முதல் முறையாக கண் பார்வைக்குரிய கண்ணாடி, லென்ஸ், என்பன இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
Horraires d'ouverture 2 4 5 B D E
Lundi au Samedi 10h à 19h30 TEL: 01.75.42.92.30



ஐரோப்பியப் பதிப்பு

# ஈழமுரசு®

முரசு 04 | 29 மே - 11 யூன் 2018 | முழக்கம் 074



உங்கள் வீடுகளை
விற்க | வாங்க
i@D IMMOBILIER
Bondyயில் புத்தம் புது வீடு விற்பனைக்கு
✔45m² அளவு கொண்ட F2 வீடு
✔மார்ச் மாதம் குடியமரக்கூடியது
✔விலை. 179 000€
110% கடன்
எந்தவித முதலீடும் இன்றி 110% வீதக் கடன் செய்து தரப்படும்
Gare de Bondyயில் இருந்து 1 நிமிட நடைதூரத்தில்
தொடர்பு: சுதன் 07 64 08 93 83




## சீனாவிற்குத் தடை சிறீலங்காவிற்கு அனுமதி

### உலகின் மிகப் பாரிய கடற்படைக் கூட்டுப் பயிற்சியில் அமெரிக்காவின் அதிரடி

## முள்ளிவாய்க்காலில் படையினர் கையாண்ட புதிய யுக்தி!

## இனப்பாகுபாட்டுடன் நடக்கும் பேரினவாத அரசாங்கம்

### எல்லைக் கிராமங்களில் அடிப்படை வசதிகளின்றி தமிழ் மக்கள் பாதிப்பு

## இனப்படுகொலையை திட்டமிட்டு செய்வதற்கென்றே பாதுகாப்பு வலயம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது

## தமிழீழ விடுதலைக்கான போராட்டம் தோற்றுவிட்டதா? அல்லது அந்த இலக்கை நோக்கி நகருகின்றதா..?


BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com

V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

எங்கேயும்... எப்போதும்...
Kingstravels
A Better way to fly!
நியாயமான கட்டணம்....
நம்பிக்கையான பயணத்திற்கான உத்தரவாதம்...
30, rue Philippe de Girard - 75010 Paris
Tél: 01 42 09 19 09 - 01 40 38 18 27
M°: La Chapelle / Gare du Nord email: kingstravels@orange.fr

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான்
சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்

64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

Rani Restaurant
Spécialités Cuisines Indiennes & Srilnakaises
Rani Restaurant - Traiteur
உங்கள் இல்ல விழாவிற்கு வேண்டிய சைவ-அசைவ உணவுகள்
Tél.:01 49 44 01 28
09 80 58 20 60
Port.:06 27 51 29 50
Rani Restaurant Traiteur www.ranirestaurant.fr
8 Ave. Victor Hugo - 93360 Neuilly Plaisance
email: ranirestaurant@hotmail.com

Crédits - Solutions
வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்
திரு.சிவா: 0973255923 - 0665660305
Fond de Commerce மற்றும் Mur Commerciaux
ஆகியவற்றிற்கு கடன் உதவிகள் செய்து தரப்படும்
2-4 rue de l'Orillon - 75011 Paris
email: creditssolutions@gmail.com

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

# ASCES

28 ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை

வீதி விதிமுறைகள் (Code de la Route) தமிழில் வகுப்புகள் ஆரம்பம்

விபரங்கள் அறிய எமது இணையத்தளம் www.asces.fr Tél : 07 82 88 59 16 E-mail : asces@free.fr

குறைந்த கட்டணத்தில் வீதி விதிமுறைகள் (Code de la Route) தமிழில் வகுப்புகள் ஆரம்பம்

**Grande Section, CP, CE,CM, Collège, Lycée** வகுப்புகள்

**Maths, Français, Physique, Chimie, SVT, Histoire**

**பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்**

பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்
08-04-2018 சனி ஞாயிறு மாலை 5.30 மணி
20-03--2018 செவ்வாய் வியாழன் மாலை 5 மணி
14-04-2018 சனி ஞாயிறு காலை 9 மணி
05-03-2018 திங்கள் செவ்வாய் காலை 9 மணி
18-04-2018 சனி பி.ப 3.30 மணி (**Nationality** வகுப்பு)
16-05-2018 புதன் பி.ப 3.30 மணி
20-04-2017 செவ்வாய் வெள்ளி பி.ப 2 மணி (Bobigny)

**LA COURNEUVE இல்**
**35, rue Maurice Lachâtre - 93120 La Courneuve**

**BOBIGNY**
**38, rue Gaston Crépin 93000 Bobigny**

**PARIS**
**3, place de Joinville 75019 Paris M° Crimée**

**Epinay sur seine** 42, rue Félix Merlin 93800 Epinay sur Seine

**Cambridge University** ஆல் நடாத்தப்படும்
**Starters, Movers,Flyers, Ket, Pet** பரீட்சைக்கான வகுப்புகள்
திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன

எமது வெளியீடுகள்
நடைமுறை பிரஞ்சு – பிரஞ்சு இலக்கணம் பயில சிறந்தநூல்
பிரஞ்சு – தமிழ், தமிழ் – பிரஞ்சு அகராதி
பிரஞ்சு பேசுவோம் பகுதி 1 & 2 CD உடன்

**Bridal makeup & cake icing**
மணப்பெண் அலங்காரம்,
கேக் அலங்காரம் சனி காலை 9.30 மணி ஆரம்பம்
பதிவுகள் இப்போதே செய்யுங்கள்

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ், நடனம், சங்கீதம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம்,
வயலின், ஓர்கன், கிட்டார் வகுப்புகள்
தையல் வகுப்புகள் ஆரம்பம்




**ஆதிபராசக்தி கலைப்பள்ளி**
நடாத்தும்
**10வது ஆண்டு நிறைவு விழா**
பல கலை நிகழ்வுகளுடன்...
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!
நேரம்: 15:30
காலம்: 10.06.2018
இடம்: Espace Germinal
2, Avenue du Mesnil,
95470 Fosses
RER D Survilliers-Fosses

**SEREE MAHAL**
ARTICLES DE CADEAUX, BRICOLAGE



வீட்டு விழாக்களுக்குத் தேவையான
தரமான அன்பளிப்புப் பொருட்கள் மலிவு விலையில்!
100% எலி, பூச்சி கொல்லி மருந்துகள்
எம்மிடம் கிடைக்கும்!
14, rue Cail, 75010 Paris
Tel: 06 69 58 61 61
09 51 15 82 03
M La Chapelle ou Gare du Nord

**கபறினா இறைச்சிக்கடை**
தினமும் உடன் இறைச்சி
வகைகளையும்,
விசேடமாக
ஆட்டிறைச்சிப் பங்கையும்
பெற்றுக்கொள்ள...



BOUCHERIE GABARINA
62, Rue Louis Blanc
75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76
207, rue fbg st Denis
75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30

**S.P.Raju Jewellery**



பழைய நகைகளுக்கு
புதிய நகைகள் வழங்குகிறோம்!!!!
199 rue du Fbg St Denis,
75010 Paris
Tél: 01 58 20 17 33
13 rue cail, 75010 Paris
Tél: 01 46 07 43 42

ஈழமுரசு®
mediacentre ஊடகமையம்
முரசு 04 29 மே 2018 – 11 யூன் 2018 முழக்கம் 074

"எமது இனத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கல்வி ஆதாரமானது. எமது சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அடித்தளமானது. நீண்ட காலமாகவே, எமது கல்விவாழ்வைச் சிதைத்துவிட எதிரியானவன் முனைந்து வருகிறான். இதனால் தமிழரின் கல்வி பாரதூரமான அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது."

– தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்



# சீனாவிற்குத் தடை சிறீலங்காவிற்கு அனுமதி

## உலகின் மிகப் பாரிய கடற்படைக் கூட்டுப் பயிற்சியில் அமெரிக்காவின் அதிரடி

*(29.05.2018, செவ்வாய்க்கிழமை)*

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அமெரிக்கா நடாத்தி வரும் ரிம்பாக் எனப்படும் (RIMPAC - Rim of the Pacific Exercise) உலகின் மிகப் பாரிய கடற்படைக் கூட்டுப் பயிற்சியில் முதல்முறையாக இனப்படுகொலையில் ஈடுபட்ட சிறீலங்கா கடற்படையும் பங்கேற்கவுள்ளது. ஹவாயில் பசுபிக் விளிம்பு ஒத்திகை என்ற பெயரில், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பாரிய கடற்படைக் கூட்டுப் பயிற்சியை அமெரிக்கா நடத்தி வருகிறது. 1971ம் ஆண்டு அமெரிக்கா, அவுஸ்ரேலியா, கனடா உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்தக் கூட்டுப் பயிற்சியில் தற்போது பிரான்ஸ், பிரித்தானியா, சீனா, ஜப்பான், இந்தியா உட்பட 24 நாடுகள் பங்கேற்று வருகின்றன.

40ற்கும் மேற்பட்ட பாரிய போர்க் கப்பல்கள், 10 வரையான நீர்மூழ்கிக் கப்பல்கள், 100ற்கும் மேற்பட்ட போர் விமானங்கள், 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் பங்கேற்கும் இந்தப் பிரமாண்டமான பயிற்சி, இந்த ஆண்டு வரும் யூன் 27ம் திகதி ஆரம்பமாகி, 29ம் திகதி வரை மூன்று நாட்கள் நடைபெறவுள்ளன.

இம்முறை கூட்டுப் பயிற்சியில் 27 நாடுகள் பங்கேற்கவுள்ளன. இதில் சிறீலங்கா, இஸ்ரேல், பிரேசில் மற்றும் வியட்நாம் ஆகிய நான்கு நாடுகள் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்க சிறீலங்கா கடற்படையின் போர்க் கப்பல் ஒன்றும் கடற்படையின் சிறப்பு தாக்குதல் படைப்பிரிவின் அதிகாரிகள் உள்ளிட்ட படையணியுடன் ஹவாய் தீவிற்கு செல்லவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பசுபிக் கூட்டுப் போர் பயிற்சியிலிருந்து இம்முறை சீனாவை நீக்குவதாக அமெரிக்கா அதிரடியாக அறிவித்துள்ளது. தென் சீன கடற் பகுதியை தனது கட்டுப்பாட்டுக்குள் வைக்க சீன அரசாங்க கப்பல்கள், அதிநவீன ஏவுகணைகள், தகவல் தொடர்புகளை கண்காணிக்கும் கருவிகள் ஆகியவற்றை தென் சீனகடற்பரப்பில் நிறுத்தி அங்குள்ள தீவில் பிரமாண்டமான

தொடர்ச்சி 04ம் பக்கம்




மே 17 இயக்கம் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நாள். தடையை மீறி மெரினாவில் கூடிய ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுகிக்கப்பட்டனர்.

விரைவில்...
மாணவர்முரசு®
www.eelamurazu.com

மக்கள் கடை
NEW CASTEL
உங்கள் தேவைகளே
எங்கள் சேவை
61, rue Louis Blanc,75010 Paris.
Tel: 01 42 05 13 67 Fax: 01 42 05 99 02



Drancyயில் பசுமை இறைச்சிக் கடை
BOUCHERIE PASUMAI
HALAL
உங்கள் வீடுக்குத் தேவையான மளிகைப் பொருட்களும் இங்கு கிடைக்கும்
Tél: 09 81 99 36 40
150, Ave. Henri Barbusse, 93700 Drancy



ARC PRIX MARCHE
மலிவு விலைகளில் மரக்கறிவகைகள்...
50€ க்கு மேல் பொருட்கள் வாங்கினால் குறிப்பிட்ட இடங்களுக்கு விநியோகம் இலவசம்!*
10 AV HENRI BARBUSSE
93150 LE BLANC MESNIL
Tél: 09 81 46 34 39



ARC EUROPE DRANCY
TAXI
PHONE
138 AV. HENRI BARBUSSE
93700 Drancy
Tél: 09 53 43 32 35
Fax: 01 39 32 23 24



# ஈழமுரசு

"உண்மையின் முன்னால்
நடுநிலைமை என்பது இல்லை"

"MEDIACENTRE"
JOURNAL TAMOUL
bimensuel **Gratuit**



MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France
Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com



**Le Président:** S.Pulenthiran
தலைவர்: சு.புலேந்திரன்

**Redacteur:** K.Jeisanthar
பொறுப்பாசிரியர்: கி.ஜெய்சந்தர்

**ஆசிரியர் பீடம்**
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

**விளம்பரம் / விநியோகம்**
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

Impression:
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard

**பிரித்தானியா**
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

**சந்தா விபரம்**
**வருட சந்தா**
பிரான்ஸ் 75€
ஐரோப்பா 85€
ஏனைய நாடுகள் 99€



**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.



**லாச்சப்பலில்**
**ஈழமுரசுடனான விளம்பரத் தொடர்புகளுக்கு**
**பாலன்:**
29, rue Philippe de Girard,
75010 Paris
Port: 06 63 01 75 80


## கற்கால தமிழர் வரலாற்று எச்சங்கள்

# இராணுவத்தினரால் அழிக்கப்படுகின்றதா?

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவில் உள்ள ஊற்றுப்புலம் கிராமத்தில் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெரும் கற்கால தமிழர் வரலாற்று எச்சங்கள் நிறைந்து காணப்படுகின்ற பிரதேசத்தில் அதனை அழிக்கும் நடவடிக்கையினை சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தினர் மேற்கொள்கின்றனரா என்ற சந்தேகம் பொது மக்களால் எழுப்பபட்டுள்ளது.

இந்த வரலாற்று எச்சங்கள் காணப்படும் காட்டுக்குள் கடந்த சில தினங்களாக இராணுவத்தினர் மாலை வேளைகளில் சென்று வருவதனை பொது மக்கள் அவதானித்துள்ளனர். அத்தோடு கடந்த 22ம் திகதி பிரிகேடியர் தர இராணுவ அதிகாரிகள் சகிதம் சென்று குழுவினர் நீண்ட நேரமாக குறித்த பிரதேசத்தில் இருப்பதனை கேள்வியுற்ற மக்கள் அங்கு சென்று அவதானித்த போது பெருங் கற்கால வரலாற்று எச்சங்களான கருங்கல் தூண்கள், மற்றும் செங்கல் மேடுகள் உள்ள பகுதியில் குழிகள் தோண்டப்பட்டுள்ளதனை கண்டு அதிர்ச்சியுற்றுள்ளனர்.

குறித்த பிரதேசம் தொல்லியல் திணைக்களத்திற்கு சொந்தமானது இங்கு அகழ்வு பணிகள் உள்ளிட்ட எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ள முடியாது என அறிவித்தல் பலகையும் காணப்பட்ட நிலையில் இராணுவத்தினர் அகழ்வுப் பணிகளில் ஈடுப்பட்டமையானது மக்களிடம் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன் பௌத்த துறவியுடன் இராணுவத்தினர் சில தடவைகள் குறித்த பிரதேசத்திற்கு வருகைதந்து பார்வையிட்டு சென்றதாக மக்கள் தெரிவித்துள்ளனர். அப்போது தாங்கள் இதனை பெரிதுபடுத்தவில்லை என்றும், ஆனால் இந்த வரலாற்று எச்சங்கள் உள்ள பகுதிகள் அகழப்பட்டுள்ளது எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். பல இடங்களில் குழிகள் தோண்டப்பட்டு காணப்படுகிறது. இந்த இடங்களில் காணப்படுகின்ற தமிழர் வரலாற்று எச்சங்களை அகற்றிவிட்டு அந்த இடங்களில் பௌத்த பண்பாட்டை பிரதிபலிக்கும் பொருட்களை புதைக்கும் நடவடிக்கையினை மேற்கொள்கின்றனரா எனவும் தமக்கு பாரிய சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மக்கள் தம்மால் காட்டின் உட்பகுதிக்கு சென்று பார்வையிட முடியாத நிலை இருப்பதாகவும் அங்கு என்னவெல்லாம் நடக்கிறது என்று தெரியவில்லை என்றும் குறிப்பிடுகின்றனர். ஊற்றுப்புலம் கிராமத்தில் ஊற்றுப்புலம் என பெயர் வரக் காரணமான வற்றாத அதிசய கிணறு, கருங்கல் தூண்கள், பல நூற்றாண்டுகள் பழமையான செங்கல் மேடுகள், போன்றன கிராமத்தின் எல்லை புறத்தில் காணப்படுகிறது. கிராமத்தின் காட்டுப்பகுதிக்குள் மேலும் பல வரலாற்று எச்சங்கள் இருக்கலாம் என கிராம மக்கள் குறிப்பிடுகின்றனர். இதுவரை காலமும் ஊற்றுப்புலம் கிராமத்தின் காடுகளுக்குள் சென்று மக்கள் கூறுவது போன்று ஏதேனும் வரலாற்று எச்சங்கள் உள்ளனவா என அடையாளப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை

இந்த நிலையில் இராணுவத்தினரின் இச் செயற்பாடுகள் தமது மூவாயிரம் ஆண்டுகள் பழமையான வரலாற்று எச்சங்களை இல்லாது அகற்றிவிட்டு பௌத்த வரலாற்று எச்சங்களை புதைத்துவிட்டு இது பௌத்த பண்பாட்டு பிரதேசங்கள் இங்கு பௌத்தர்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன என எதிர்காலத்தில் தெரிவித்து எமது வரலாற்றையே மாற்றிவிடக்கூடிய நிலைமைகளை திட்டமிட்டு மேற்கொள்ளும் வகையில் இராணுவத்தினரால் இச் செயற்பாடுகள் முன்னெடுக்கின்றன எனவும் பொது மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## இனப்படுகொலை இராணுவத்தின்

# முள்ளிவாய்க்கால் நினைவில் மொழிப்படுகொலை!

சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தின் அழிப்பில் உயிரிழந்த மக்களின் நினைவேந்தலுக்காக முள்ளிவாய்க்கால் சென்று திரும்பிய மக்களுக்கு புதுக்குடியிருப்புப் பகுதியில் கூடாரம் அமைத்து நீராகாரம் வழங்கியுள்ளனர் முல்லைத்தீவில் நிலைகொண்டுள்ள இனப்படுகொலை இராணுவத்தினர். குறித்த ஏற்பாட்டை 682 படைப்பிரிவினர் ஏற்பாடு செய்திருந்தனர். இதன்போது அவர்களால் எழுதித் தொங்க விடப்பட்டிருந்த அறிவித்தலில் தமிழ் மொழிப் படுகொலையையும் தயவு தாட்சண்யம் இன்றி மேற்கொண்டிருந்தனர். அத்துடன், தாக சாந்தி செய்வதாகக் கூறி போய் வந்த மக்களை தங்கள் கமெராக்களிலும் பதிவு செய்துகொண்டனர்.






# சீனாவிற்குத் தடை...

இராணுவ தளத்தை அமைத்து போர் பதற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. இந் நிலையில் சீனாவின் இந் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து அமெரிக்காவின் தலைமையில் பசுபிக் கூட்டு போர் பயிற்சியிலிருந்து சீனாவை அமெரிக்கா அதிரடியாக நீக்கியுள்ளது. 2016ம் ஆண்டு இவ்வாறான ஒரு நிலைமை இருந்தபோதும் சீனாவிற்கு ஒபாமாவின் ஆட்சியில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது டிரம்பின் ஆட்சியில் சீனாவிற்குத் அழைப்பு மறுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, உலகின் பலம்பொருந்திய இன்னொரு நாடான ரஷ்யா இதில் இணைத்துக்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சீனாவை நீக்கியுள்ள அமெரிக்க, இனப்படுகொலையில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்படும் சிறீலங்காவை இணைத்துக்கொண்டுள்ளது பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுடன் சிறீலங்காவுடனான இராணுவ உறவுகளை குறைத்திருந்த அமெரிக்கா, தற்போது சிறீலங்கா இராணுவ பலத்தை அதிகரிப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

அடிக்கடி அமெரிக்க போர்க் கப்பல்கள் சிறீலங்கா சென்று வரும் நிலையில் கடந்த மாதம் 25ம் திகதி அமெரிக்காவின் பசுபிக் ஒத்துழைப்பு ஒத்திகைத் திட்டத்தின் ஒரு கட்டமாக, அமெரிக்க



கடற்படையின் பாரிய மிதக்கும் மருத்துவமனை திருகோணமலைக்கு சென்று சில நாட்கள் நிலைகொண்டுவிட்டுச் சென்றிருந்தது. அதேவேளை, சிறீலங்கா ஏற்றுமதிப் பொருட்களுக்கு ஜி.எஸ்.பி வரிச் சலுகையையும் அமெரிக்கா வழங்கியது.

சிறீலங்காவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்புகளை விரிவுபடுத்துவது குறித்து இந்தியா, அமெரிக்கா மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகள் பல அண்மைக்காலமாக தீவிரமாக செயற்பட ஆரம்பித்துள்ளன. இந்நிலையில் சிறீலங்காக் கடற்படைக்கு அமெரிக்கா முதல்முறையாக உலகின் மிகப் பாரிய கூட்டுப் பயிற்சிக்கான அழைப்பை விடுத்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சிறீலங்காவிற்கான புதிய அமெரிக்க தூதுவராக அலய்னா பி. டெப்லிடஸ்ஸின் பெயரை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்மொழிந்துள்ளார். தூதுவர் சேவையில் சிரேஷ்ட அதிகாரியான அலய்னா பி. டெப்லிடஸ் தற்போது நேபாளுக்கான அமெரிக்க தூதுவராக கடமையாற்றி வருகின்றார். அவரை சிறீலங்காவிற்கான அமெரிக்க தூதுவராக நியமிக்க டொனால்ட் ட்ரம்பினால் முன்மொழியப்பட்ட பரிந்துரைக்கான அனுமதியை பெற வெள்ளை மாளிகையின் ஊடாக குறித்த பரிந்துரை அமெரிக்க செனட் சபையிடம் சமர்பிக்கப்பட்டுள்ளது. அந்த அனுமதி கிடைக்கபெற்ற பிறகு தற்போதைய சிறீலங்காவிற்கான அமெரிக்க தூதுவர் அதுல் கேசப்பிற்கு பதிலாக அலய்னா பி. டெப்லிடஸ் நியமிக்கப்பட உள்ளார். 2015 ஆண்டு ஓகஸ்ட் மாதம் தொடக்கம் சிறீலங்காவிற்கான அமெரிக்க தூதுவராக அதுல் கேசப் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பிரகாசமான எதிர்காலம் என்ற சிறீலங்காவின் கனவை நனவாக்குவதற்காக சிறீலங்காவுடன் கைகோர்த்து பயணிப்பதற்கு அமெரிக்கா விரும்புகின்றது என்று கூறியுள்ள அமெரிக்க தூதுவர் அதுல் கெசப், சிறீலங்கா வெற்றியடைய வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம், சிறீலங்காவுடனான எங்கள் உறவுகள் விஸ்தரிக்கப்படுவதற்காக பெருமளவு முதலிட்டுள்ளோம் என்றும் கூறியுள்ளார்.


அடுத்த இதழ் முதல்
உலக கோப்பை
கால்பந்து
சிறப்புப் பக்கம்
FIFA WORLD CUP
RUSSIA 2018

ஈழமுரசு®

# தாயகக் கனவு அழியாது தமிழீழம் சாத்தியமே

தமிழர்கள் மீதான இனப்படுகொலையின் வெற்றியை இராணுவ வெற்றி விழாவாக கடந்த எட்டு ஆண்டுகளாகக் கொண்டாடி வந்த சிங்களப் பேரினவாத அரசு, இந்த ஆண்டு அவ்வாறான வெற்றி விழாவை கொண்டாடவில்லை. கொண்டாடவில்லை என்பதை விட அவர்களால் கொண்டாட முடியவில்லை என்பதுதான் சாலப்பொருத்தமாக இருக்கும். முள்ளிவாய்க்கால் பேரழிவு இடம்பெற்ற மே மாதத்தை, பூமிப்பந்தெங்கும் வாழும் தமிழர்கள் வலி நிறைந்த மாதமாக நினைவுகொள்கின்றனர். இவ்வேளையில் சிங்களப் பேரினவாதம் அதனை வெற்றி விழாவாகக் கொண்டாடுவது, இரு இனங்களுக்கும் இடையிலான மனக்கசப்பை மேலும் அதிகரித்துவிடும் என்று கருதிய ஐ.நா., சிறீலங்காவிடம் இராணுவ வெற்றிவிழாக் கொண்டாடுவதை நிறுத்துமாறு கொடுத்த அழுத்தம்தான் இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் 'இராணுவ வெற்றி விழா' என்ற பெயருடன் ஒரு பெரும் கொண்டாட்டத்தை சிங்களப் பேரினவாதிகளால் நடத்தமுடியாமல் போனது.

எனினும், 'விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த 9வது ஆண்டு நிறைவு', 'தேசிய இராணுவ தின நிகழ்வு' என்ற பெயர்களில் இராணுவத்தைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் பெருமெடுப்பில் பல்வேறு இடங்களிலும் நடத்தப்பட்டிருக்கின்றன. கொழும்பு சிறி ஜெயவர்த்தனபுர கோட்டையில் உள்ள, படையினரின் நினைவுச் சின்னத்தில் நடந்த நிகழ்வில் சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன கலந்துகொண்டு உரையாற்றியிருக்கின்றார். அவர் தனது உரையில் 'இராணுவம் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரினால் முன்வைக்கப்பட்டுள்ள சிபாரிசுகளிலும் தமது பாதுகாப்பு படையினர் மீது யுத்தக் குற்றங்கள் சுமத்தப்படவில்லை என்றும் கூறியதுடன் இவ்வாறான குற்றச்சாட்டை விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்களே கூறுகிறார்கள் என்றும் தெரிவித்திருந்தார்.

அத்துடன் நின்றுவிடாமல், விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்களின் கொள்கைகள் இன்னும் முற்றாக அழிக்கப்படவில்லை என்றும் வெளிநாடுகளில், இன்றும் தனிநாடு பற்றிய கனவுகளைக் கொண்டுள்ள பிரிவினைவாதிகள் உள்ளனர். அவர்களின் கனவு நிறைவேற ஒருபோதும் இடமளிக்க மாட்டேன் என்றும் சூளுரைத்திருக்கின்றார்.

வெளிநாடுகளில் மட்டுமல்ல தாயகத்திலும் தமிழ் மக்கள் தங்களுக்கான தமிழீழ தேசத்தை அமைக்கும் கனவுடனேயே இருக்கின்றார்கள். துப்பாக்கி முனையில் அவர்கள் உணர்வுகள் கட்டிவைக்கப்பட்டிருந்தாலும் அவ்வப்போது தங்கள் தாயகக் கனவை அவர்களும் வெளிக்காட்டியே வருகின்றார்கள். கடந்த வாரம் கூட யாழ்ப்பாணத்தின் கோண்டாவில் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் மகோற்சவத்துக்காக வீதியில் வடிவமைக்கப்பட்டிருந்த வளைவில் தமிழீழ வரைபடம் பொறிக்கப்பட்டிருந்துள்ளது. பின்னர் அதனை சிறீலங்காக் காவல்துறை ஓடோடிச்சென்று அகற்றியுள்ளது.



தமிழரின் தாயகக் கனவை அழித்து, சிங்களத்தின் ஒற்றையாட்சிக் கனவுக்காக உழைத்துவரும் சம்பந்தன், முள்ளிவாய்க்கால் நினைவில் கலந்துகொண்டு பேசும் போது, விடுதலைக் கனவுகளுடன் உயிர் நீத்தவர்களின் கனவு நனவாகும் என்று மக்கள் முன் கூறுகின்றார். 'விடுதலைக் கனவுடன் ஆயிரமாயிரம் வேங்கைகளும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களும் தங்களின் உயிர்களை முள்ளிவாய்க்கால் மண்ணில் ஆகுதியாக்கியுள்ளார்கள். அவர்களின் கனவு என்றோ ஒரு நாள் நனவாகும் என்பதை முள்ளிவாய்க்கால் மண்ணில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் பெருந்திரளான தமிழர்கள் ஓரணியில் உணர்வெழுச்சியுடன் பங்கேற்றமை எடுத்துக் காட்டுகின்றது' என்று தான் விரும்பாவிட்டாலும் உணர்வெழுச்சியுடன் நிற்கும் அந்த மக்கள் முன் தமிழீழக் கனவை நியாயப்படுத்தவேண்டிய சங்கடமான நிலையில் சம்பந்தனும் இருக்கின்றார்.

எனவே, இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு அவ்வாறான சிந்தனை இல்லை என்பதுபோலவும் வெளிநாடுகளில் மட்டும்தான் அவ்வாறான சிந்தனை இருப்பதாகவும் கூறி மைத்திரி உலகை ஏமாற்றி உண்மையை மறைக்கப்பார்க்கின்றார்.

சிங்களப் பேரினவாத சக்திகளும், அவர்களுடன் முண்டுகொடுத்து நிற்கும் வெளிநாட்டு சக்திகளும் ஒன்றிணைந்து தமிழீழத்திற்கான தமிழ் மக்களின் கனவு நனவாவதை தள்ளிப்போட முடியுமே தவிர, அந்தக் கனவு நனவாவதை ஒருபோதும் தடுக்கமுடியாது. தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை கொண்ட ஓர் இனத்தின் தாயகக் கனவை உலகின் எந்த அழிவு ஆயுதத்தைக் கொண்டும் அத்தனை இலகுவில் யாராலும் அழித்துவிட முடியாது.

ஒன்று பத்தாகி, பத்து நூறாகி, நூறு ஆயிரமாகி, ஆயிரம் பத்தாயிரமாகி தமிழர் படையான விடுதலைப் புலிகள் பலம்பெற்று எழுந்ததுபோன்று, நாளை புலம்பெயர்ந்த தமிழர்களின் அரசியல் பலமும் நூறு, ஆயிரம், பத்தாயிரம் என்று அதிகரிக்கும் என்பது திண்ணம். புலம்பெயர்ந்த இந்தத் தலைமுறைத் தமிழர்களே தாங்கள் வாழும் நாடுகளின் அரசியல் நடவடிக்கைகளில் இத்தனை அளவிற்கு உள்நுழைந்து ஈடுபட முடிகின்ற நிலையில், அடுத்து அடுத்து வரும் தலைமுறைகள் குறித்து இங்கு குறிப்பிடத்தேவையில்லை. அரசியலிலும் பொருளாதாரத்திலும் பலம்பெற்ற இனமாக புலம்பெயர்ந்த தமிழர்கள் வளர்ந்து வருவதை சிங்களப் பேரினவாத சக்திகளால் அத்தனை இலகுவில் தடுத்து நிறுத்திவிட முடியாது. இந்த யதார்த்த நிலைமையைப் புரிந்துகொண்டதனாலேயே புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் நாடுகள் இப்போது தமிழர்களின் கருத்துக்களை உள்வாங்கத் தொடங்கியுள்ளன. தமிழர்களின் நியாயத்தின் பக்கம் நிற்கத் தலைப்பட்டுள்ளன.

தங்கள் தாயக மண்ணை முற்றுமுழுதாக இழந்து நாடோடிகளாக உலகெங்கும் அலைந்தும், அழிந்தும் திரிந்தபோதும் தங்கள் தாயகக் கனவை யூத மக்கள் தொலைத்துவிடவில்லை. தலைமுறை தலைமுறையாக அந்தக் கனவைச் சுமந்தபடியே அவர்களின் தலைமுறைகள் நடந்தன. ஆயிரம் ஆண்டுகளின் பின்னர்தான் யூதர்கள் இஸ்ரேல் என்ற தங்கள் தாயகத்தை நிறுவினார்கள். தாங்கள் வாழ்ந்த நாடுகள் எங்கும் தங்கள் அரசியல், பொருளாதார பலத்தைப் பெருக்கி, அதனூடாக அந்தந்த நாடுகளின் உதவிகளைப் பெற்றே புலம்பெயர்ந்து வாழ்ந்த யூதர்கள் தங்கள் தாயக் கனவை அடைந்தார்கள். இது கடந்த நூற்றாண்டில் நிகழ்ந்த வரலாறு. இந்த வரலாறு தமிழர்களுக்கு ஒரு பாடம் மட்டுமல்ல, வழிகாட்டியும் கூட.

உலக வரைபடத்தில் தமிழர்களுக்கு ஒரு தாயகம் இருந்தது என்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் இரத்தத்தினால் வரைந்து காட்டிவிட்டார்கள். அந்தத் தாயகத்தை நிறுவ சர்வதேச அங்கீகாரத்தை நோக்கி நகரவேண்டியதே உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு இப்போதுள்ள பொறுப்பு.

---

நிலவன்

## நாங்கள் அத்தனை பேரும் உத்தமர் தானா சொல்லுங்கள்...




அடுத்த தலைவர் நீயா – நானா என்று குடுமிச் சண்டையில் இறங்கியுள்ளதாக வர்ணிக்கப்படும் சிறீலங்காவின் முக்கிய தலைவர்கள் மூவர் ஒன்றாக இருந்து ஒரே மேசையில் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கின்றனர். இது இவர்கள் ஒன்றாகக் குடித்தனம் நடத்திய சில வருடங்களுக்கு முன் எடுக்கப்பட்ட நிழற்படம் அல்ல. கடந்த 24ம் திகதி வியாழக்கிழமை, கொழும்பு ஞாயிறு வார மஞ்சரி ஒன்றின் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவரின் மகளின் திருமண வைபவம் கொழும்பு சினமன் கிராண்ட் விடுதியில் இடம்பெற்றது. அதில் கலந்துகொள்வதற்கு வருகை தந்த சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவும் வாய்விட்டுச் சிரித்து உரையாடிக்கொண்டிருந்தபோது எடுக்கப்பட்டது.

கீரியும் பாம்புகளுமாக வர்ணிக்கப்படும் இவர்களால் இது எப்படி முடிகின்றது...!

### செஞ்சிலுவை சங்கத்துடன் ஒப்பந்தம்

இலங்கையிலுள்ள தடுப்பு முகாம்களை பார்வையிடுவது தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்துடன் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட உள்ளது. சிறீலங்கா அமைச்சரவை இதற்கு அனுமதி வழங்கியுள்ளது. யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் தோற்றம் பெற்றுள்ள தடுப்பு முகாம்கள் மற்றும் சிறைச்சாலைகளை பார்வையிடுவது தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் யோசனையொன்றை முன்வைத்துள்ளது. அதனடிப்படையில், சுய சுதந்திரத்தினை இழந்த நபர்களுக்கு விடிவினை ஏற்படுத்துவதற்கான ஒத்துழைப்புகள் மற்றும் மனிதாபிமான செயற்பாடுகள் தொடர்பில் செஞ்சிலுவை சங்கத்துடன் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட உள்ளது. இதில் சிறீலங்கா சார்பில் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன கைச்சாத்திடவுள்ளார்.

### கோத்தபாயவைக் காப்பாற்றும் மைத்திரி

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை கைதுசெய்ய மிகவும் தெளிவான காரணங்கள் இருக்கும் போதும் அவர் கைது செய்யப்படுவதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தடுத்து வருவதாக கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார். லசந்த விக்ரமதுங்கவை கொலை செய்தவர்களை மாத்திரமல்ல ஊடகவியலாளர்களுக்கு தொந்தரவுகளை கொடுத்தவர்களையும் கைதுசெய்ய ஜனாதிபதி இடமளிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

### ஞானசார தேரர் குற்றவாளி!

2016 ஆண்டு ஜனவரி 25ம் திகதி ஹோமாகம நீதவான் நீதிமன்றில் வைத்து காணமற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலகொடவின் மனைவி சந்தியா எக்னெலகொடவை தாக்க முற்பட்டமை, அச்சுறுத்திய குற்றச்சாட்டிற்காக கலகொட அத்தே ஞானசார தேரர் குற்றவாளியாக இனங்காணப்



பட்டுள்ளார். ஹோமாகம நீதவான் நீதிமன்றம் கடந்த 24ம் திகதி கலகொட அத்தே ஞானசார தேரர் குற்றவாளியாக இனங்காண்டதுடன், இந்த வழக்கிற்கான தீர்ப்பை யூன் 14ம் திகதி அறிவிப்பதாகவும் தெரிவித்துள்ளது.


ஞானசார தேரரால் தொந்தரவுக்கு உள்ளான அனேகமானோர் இந்த நாட்டில் உள்ளார்கள். அவர்கள் அனைவருக்கமான வெற்றி இது, அவர்களுக்கும் நீதி கிடைக்கவேண்டும் என ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொட, நீதிமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்களுக்கு மேற்கண்டவாறு கருத்து தெரிவித்திருந்தார்.

## அழியும் தமிழர் தேசம் 10

# மண்டைதீவு முழுமையாகப் பறிபோகப் போகிறது

சிறீலங்கா இனப்படுகொலைக் கடற்படையினரின் ஒரு பிரிவான வெலு சுமன பிரிவினருக்கென மண்டைதீவில் விவசாய நிலங்களைச் சுவீகரிப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மண்டைதீவு கிழக்கு பகுதியில் உள்ள விவசாய நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்துள்ள கடற்படையினர், தற்போது அந்த நிலங்களைச் சுவீகரிப்புச் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர். இதற்கான அறிவிப்புக்களை காணி சுவீகரிப்பு அதிகாரி வேலணை பிரதேச செயலகம் ஊடாக விடுத்துள்ளார். இவ்வறிவித்தலின் பிரகாரம் 29 விவசாயிகளுக்கு சொந்தமான 18 ஏக்கர் காணிகள் சுவீகரிப்புச் செய்யப்படவுள்ளன.

மண்டைதீவுக் கிராமம் யாழ்ப்பாணத்துக்கு மிக அண்மிய தூரத்தில் இருப்பது. யாழ்ப்பாணத்தின் எல்லையில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் மண்டைதீவின் எல்லை ஆரம்பிக்கிறது. கூடவே பண்ணைக் கடல் பரப்பில்



இருக்கக்கூடிய சிறுத்தீவு, குருசுத்தீவு என்பனவும் மண்டைதீவுக் கிராமத்துக்குட்பட்டவை.

ஆக, யாழ்ப்பாணத்துக்குள் அடங்கக்கூடிய ஓர் ஊராக மண்டைதீவைக் குறிப்பிடலாம். மிகச் சிறிய இவ்வூர் 1991ம் ஆண்டில் ஏற்பட்ட இராணுவ ஆக்கிரமிப்பின் காரணமாக சின்னாபின்னமாயிற்று.

யுத்த சூழ்நிலையில் இடம்பெயர்ந்த இவ்வூர் மக்கள் புலம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் வாழவேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகினர். 1991ல் ஏற்பட்ட இடப்பெயர்வுக்குப் பின்னர் மண்டைதீவு உள்ளிட்ட தீவகம் வழமைக்குத் திரும்ப முடியாமல் தத்தளிக்கிறது. இவ்வாறான அவலநிலைக்கு தமிழ் அரசியல்வாதிகள் தீவகத்தை ஒதுக்கிக் கொண்டதும் முக்கிய காரணம் எனலாம்.

அதாவது வலி.வடக்கு, வலி.கிழக்கு ஆகிய பிரதேசங்களில் மீள்குடியமர்வையும் காணி விடுவிப்பையும் வலியுறுத்திய அளவுக்கு தீவகத்தில் இருந்து இராணுவத்தை வெளியேறுமாறு கோருவதிலோ அல்லது தீவகத்தில் மக்களைக் குடியமர்த்துவதிலோ கவனம் செலுத்துவதில் தமிழ் அரசியல் தலைமை அறவே கருசனை கொள்ளவில்லை. இதன்காரணமாக தீவகம் தனது முழு வளத்தையும் இழந்து கைவிடப்பட்ட பிரதேசத்துக்குரிய அடையாளங்களை மட்டும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்நிலையில் மண்டைதீவு கிழக்கில் இருக்கக்கூடிய 18 ஏக்கர் விவசாய நிலத்தை கடற்படைக்குச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதெனும் போது, மிகச்சிறிய கிராமமாகிய மண்டைதீவு முழுமையாக கடற்படையின் கட்டுப்பாட்டுக்குள் வரப் போகிறது என்பது மட்டும் உறுதியாகிறது.

அதாவது 18 ஏக்கர் விவசாய நிலத்தை சுவீகரிப்புச் செய்வதனு?டாக மண்டைதீவுக் கிராமத்தை கடற்படை தனக்குரியதாக்கப் போகிறது.

எனினும் இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுப்பதாகத் தெரியவில்லை. வட மாகாணத்தில் படையினருக்கான காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளின் போதெல்லாம் அந்த மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் கூடிநின்று அதனைத் தடுத்து நிறுத்த போராடுகின்றனராயினும் மண்டைதீவில் நடக்க இருக்கும் காணி சுவீகரிப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனமாக இருப்பதன் பின்னணியில், மண்டைதீவை கடற்படைக்குத் தாரைவார்த்துக் கொடுக்க அரசுடன் உடன்பட்டு விட்டனரோ என்று எண்ணத் தோன்றுகிறது. எதுஎவ்வாறாயினும் மண்டைதீவில் கடற்படைக்கென 18 ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்பட்டால் அவ்வூர் மக்கள் அங்கிருந்து வெளியேறுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

# அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

### முல்லைத்தீவில் இளைஞன் வெட்டி படுகொலை

முல்லைத்தீவு – செல்வபுரம் பகுதியில் வெட்டிக்கொலை செய்யப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் கடந்த 23ம் திகதி இரவு மீட்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் கள்ளப்பாடு வடக்கு முல்லைத்தீவினை சேர்ந்த 28 வயதான வரதராஜா சதாநிசன் ஆவார். மகனை காணாத குறித்த இளைஞரது தந்தை பல இடங்களிலும் தேடித் திரிந்துள்ளார். இந் நிலையில் செல்வபுரம் – கள்ளுத்தவறணை பகுதியில் உள்ள பனங்கூடலுக்குள் உந்துருளி ஒன்று நெடு நேரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை அவதானித்த சிலர் முல்லைத்தீவில் நிலைகொண்டுள்ள சிறீலங்காக் காவல்துறைக்கு தகவல் கொடுத்துள்ளார்கள். தகவல் கிடைத்தவுடன் சம்பவ இடத்திற்கு விரைந்த காவல்துறையினர்,?அருகில் உள்ள பனங்கூடலுக்குள் கழுத்து அறுபட்ட நிலையில், வெட்டுக்காயங்களுடன் இளைஞனின் உடலை கண்டெடுத்துள்ளனர். கொலை தொடர்பில் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை, கொலைக்கான காரணங்களும் கண்டறியபடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### கொள்ளையனின் கத்திக்குத்துக்கு இலக்கான முதியவர் மரணம்

கொள்ளையனின் கத்திக் குத்துக்கு இலக்காகிய முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி கடந்த 14ம் திகதி உயிரிழந்தார். தாவடி வடக்கு பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள வீட்டுக்குள் கடந்த 10ம் திகதி வியாழக்கிழமை அதிகாலை கொள்ளையன் ஒருவன் புகுந்துள்ளான். அந்த வீட்டில் தம்பதியரான சிவலோகநாதன் செல்வராசா (வயது – 62) செல்வராசா இராஜேஸ்வரி (வயது – 58) வசித்து வந்தனர். கொள்ளையனை பிடிக்க முற்றபட்டபோது, அவனின் கத்திக் குத்துக்கு இலக்காகி இருவரும் படுகாயமடைந்தனர். அவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிசிச்சை பெற்று வந்தனர். எனினும் சிகிச்சை பயனின்றி முதியவர் உயிரிழந்தார்.

### மின்னல் தாக்கியதில் மாணவன் பலி

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டுப் பகுதியில் மின்னல் தாக்கி பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளார். கடந்த 14ம் திகதி மாலை 3.00 மணியளவில் முத்துஐயன்கட்டு ஜீவநகர் அம்மன் கோவில் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த பகுதியில் வசிக்கும் மாணவனான 14 அகவையுடைய பி.தினேஸ்குமார், முத்துஐயன்கட்டு இடதுகரை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தரம் 9ல் கல்வி கற்று வந்துள்ளான். பாடசாலை முடிந்து வீடு திரும்பிய மாணவன் உணவு உண்பதற்காக சமையல் அறையில் உணவு தட்டில் உணவினை எடுத்துக் கொண்டு நின்ற வேளை மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி மயங்கி நிலத்தில் வீழ்ந்துள்ளான். ஒட்டுசுட்டான் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக மாஞ்சோலை மருத்துவமனை கொண்டுசெல்லப்பட்டபோது அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த மாணவனின் தந்தை போரின்போது உயிரிழந்துள்ளதுடன் வறுமை கோட்டின் கீழ் வாழ்ந்து வந்த மாணவனுக்கு அண்மையில் பாடசாலை நிர்வாகத்தின் உதவியுடன் புதிய துவிச்சக்கர வண்டி ஒன்றும் வழங்கிவைக்கப்பட்டுள்ளது. முத்துஐயன்கட்டு ஜீவநகர் பகுதியில் மின்னல் தாக்கம் அதிகரித்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

### மின்சாரம் தாக்கி தந்தையும் மகனும் பலி
### கரணவாய் கிழக்கில் சோகம்






யாழ்ப்பாணம் கரவெட்டி, கரணவாய் கிழக்கில் கடந்த 23ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை வேளையில் மின்சாரம் தாக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பலியாகியுள்ளனர். வீட்டில் டிஷ் தொலைக்காட்சி வேலை செய்யாத காரணத்தால், கேபிள் தொலைக்காட்சி இணைப்பிலில் வயரைப் பொருத்த முற்பட்டபோது, அதி உயர் மின் அழுத்தம் தாக்கியதிலேயே தந்தையும் மகனும் உயிரிழந்தனர். கேபிள் தொலைக்காட்சி வயருடன் மின் விநியோக இணைப்பும் தொடர்புபட்டிருந்ததால் இந்த அவலம் நேர்ந்துள்ளது. இதன்போது, யாழ்ப்பாணம் நகரில் வானகம் அலைபேசி விற்பனை நிலையத்தை நடத்தும் ஜெகனாந்தன் (வயது– 50), சஞ்சீவன் (வயது–29) ஆகிய இருவருமே உயிரிழந்தனர்.

### தவில் வித்துவான் சடலமாக மீட்பு

யாழ்., நல்லூர் யமுனா ஏரியில் இருந்து பிரபல தவில் வித்துவான் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். யாழ்., செம்மணி வீதியைச் சேர்ந்த இராமையா ஜெயராசா (ஜெயம்) வயது (66) என்பவரே.

தொடர்ச்சி 14ம் பக்கம்



சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
Tél: 06 58 75 05 09
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis

# முள்ளிவாய்க்காலில் படையினர் கையாண்ட புதிய யுக்தி!

'தாயகத்தில் இருந்து'
காந்தரூபன்



தாங்கள் பீனிக்ஸ் பறவைகள் என்பதை தமிழ் மக்கள் மீண்டும் ஒரு தடவை சிங்கள தேசத்திற்கு நிரூபித்திருக்கின்றனர். கடந்த வாரம் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் போது தமிழரின் மீள் எழுகை வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது.

இறுதி யுத்தம் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் மண்ணில், தமிழ் மக்கள் மீண்டும் ஒரு தன்னெழுச்சியை வெளிப்படுத்தியிருக்கின்றனர். எந்த அதிகார வர்க்கத்தாலும் எங்களை அடிபணியவைக்க முடியாது என்பதை மே-18 ஆம் திகதி தமிழ் மக்கள் சிங்கள தேசத்திற்குச் சொல்லியிருக்கின்றனர்.

எங்களைச் சுட்டெரித்தாலும் சுதந்திரம் ஒன்றே எமது உரிமை என்பதை, இரத்த ஆறு ஓடிய அந்த மண்ணில் நின்று அவர்கள் உரத்துக் கூறியிருக்கின்றனர். எமது உரிமைகளை வழங்க நடவடிக்கை எடுக்காவிட்டால் மீண்டும் கிளர்ந்தெழ வேண்டிய



நிலை ஏற்படும் என்பதையும் அவர்கள் சர்வதேசத்திற்கு இடித்துரைத்திருக்கின்றனர்.

சரியா, பிழையா என்ற விவாதங்கள், தவறா, தப்பா என்ற விமர்சனங்களுக்கு அப்பால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மிகவும் உணர்வெழுச்சியாக நடைபெற்று முடிந்துள்ளது. தாயகத்தில் மட்டுமன்றி, இப்பூமிப்பந்தில் தமிழர் வாழுத் தேசம் எங்கும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுட்டிக்கப்பட்டுள்ளது.

தாயகத்திலே, முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். இறுதி யுத்தத்தின்போது அந்த மண்ணில் இரத்தம் சிந்திய தமிழர்கள் ஒன்பது ஆண்டுகள் கழிந்த பின்னர் அங்கு கண்ணீர் சிந்தினர். அவர்கள் அனைவரும் ஆக்ரோசமாகக் காணப்பட்டனர். உணர்ச்சிக் கொந்தளிப்பில் நின்றனர்.

யுத்தத்தின்போது இழப்புக்கள் என்பது தவிர்க்கப்பட முடியாதவை. சில உயிர்கள் மடிவது மரபுதான். ஆனால், இங்கே எமது தேசத்தில் அது முற்றிலும் வித்தியாசமாகவே நடைபெற்றது. இறந்தவர்களை விடவும் எஞ்சியவர்கள் குறைவு என்ற அடிப்படையில் இந்த யுத்தம் எமது மக்களைக் கொன்று தின்றிருக்கின்றது. இறுதி யுத்தம் தமிழர்களின் இருப்பையே கேள்விக்குறி ஆக்கியிருக்கின்றது.

சிங்கள தேசம் தமிழர்களுக்கு எந்தளவிற்கு அநீதி இழைக்க முடியுமோ அந்தளவிற்கு இழைத்திருக்கின்றது. அநீதிகளைக் கண்டு தாம் அடங்கமாட்டார்கள் என்பதை தமிழர்கள் அவ்வப்போது வெளிப்படுத்தியே வந்திருக்கின்றனர். அதைப் போலவே இப்போதும் நடைபெற்றிருக்கின்றது.

இந்த வருடம் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கடந்த வருடங்களைப் போல அன்றி மிகவும் வித்தியாசமாக இருந்தது. புலம்பெயர் தேசத்திலுள்ளவர்களே தாயகத்திலுள்ள தமிழ் இளையோரை மெச்சினர். அந்தளவிற்கு மிகத் துணிவுடன் நினைவேந்தல் இடம்பெற்றது.

கடந்த வருடங்களில்
இறுக்கமான தடைகள்
போடப்பட்ட முள்ளிவாய்க்கால்
நிகழ்வு இந்த வருடம் இவ்வளவு
நெகிழ்ச்சியுடன்
கடைப்பிடிக்கப்பட
அனுமதிக்கப்பட்டது ஏன்?

எனினும், சிங்கள தேசம் தமிழ் மக்களை ஆற்றுப்படுத்த முனைந்ததை இந்த வருடம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் அவதானிக்க முடிந்தது. ஏனெனில், கடந்த வருடங்களைப் போல இந்த வருடம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு வலுவான எதிர்ப்பு இருக்கவில்லை. மாறாக சிங்கள தேசத்தில் இருந்து ஆதரவுக் குரல்கள் மேலெழுந்ததைக் காண முடிந்தது.

எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற் போல, முள்ளிவாய்க்கால் நினைவு அனுட்டிக்கச் சென்று திரும்பிய மக்களுக்கு சிங்களப் படைகள் குளிர்பானம் வழங்கியிருந்தன. யாழ். மாவட்டத்தில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் முள்ளிவாய்க்கால் சென்றிருந்தனர். பேருந்துகளில் சென்றவர்களை விடவும் மோட்டார் சைக்கிள் பவனியாக ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சென்றனர்.

இவர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முடித்துவிட்டு யாழ்ப்பாணம் நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தபோது, ஆனையிறவில் தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து முகாம் அமைத்திருக்கும் படையினர் தமது படை முகாமில் வைத்து குளிர்பானம் வழங்கினர். இராணுவ முகாமினுள் தயார் செய்யப்பட்ட குளிர்பானத்தை கொண்டு வந்து வீதியால் வந்தவர்களை மறித்துக் கொடுத்தனர்.

அரசாங்கமும் படையினரும் ஏன் இப்படிச் செய்தார்கள்? கடந்த வருடங்களில் இறுக்கமான தடைகள் போடப்பட்ட முள்ளிவாய்க்கால் நிகழ்வு இந்த வருடம் இவ்வளவு நெகிழ்ச்சியுடன் கடைப்பிடிக்கப்பட அனுமதிக்கப்பட்டது ஏன்? அதுவும் படையினர் குளிர்பானம் வழங்கியது ஏன்? இந்த வினாக்களுக்கு விடைகள் இல்லாமல் இல்லை. எல்லாவற்றிற்கும் காரணம் உண்டு.

தொடர்ச்சி 18ம் பக்கம்

## ருவாண்டாவுடன் சிறீலங்கா ஒப்பந்தம்

ருவாண்டா நாட்டின் உத்தியோக பூர்வ அழைப்பினை ஏற்று அங்கு பயணம் மேற்கொண்ட சிறீலங்காப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன அந்நாட்டுடனான பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார். ருவாண்டாவின் தலைநகர் கிஹாலியில் வைத்து ருவாண்டாவின் தரப்பில் ஜெனரல் ஜேம்ஸ் கபா ரிபே இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்போது சிறீலங்காவில் நடைமுறையில் காணப்படுகின்ற பாதுகாப்பு திட்டங்களில் புதிய தொழினுட்ப முறைமைகளை உள்ளடக்குவது உட்பட பல விடயங்கள் இந்த உடன்படிக்கை ஊடாக சிறீலங்காவிற்கு கிடைக்கவுள்ளது.

## சிறீலங்கா - பிரான்ஸ் ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கையின் கடல் வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் நிலைபேறான கடல்சார் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் என்ற பெயரில் சிறீலங்கா – பிரான்ஸ் நாடுகளுக்கிடையில் இரு தரப்பு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப் பட்டுள்ளது.

அந்த வகையில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அநுர திஸாநாயக்க, சிறீலங்கா மற்றும் மாலைதீவுக்கான பிரான்ஸ் தூதுவர் ஜோன் மரின் (Jean-Marin Schuh) ஆகியோருக்கிடையிலேயே இந்த ஒப்பந்தம் கடந்தவாரம் கைச்சாத்திடப்பட்டது. இலங்கையின் கடல் வளத்தை பாதுகாத்தல், அதன் மூலம் நிலைபேறுடைய பொருளாதாரத்தை உருவாக்குதல் கடல்நீர் மாசாக்கத்தை தடுத்தல், மீன்பிடி மற்றும் மூலோபாய அடிப்படையிலான முதலீடுகள் என்பவற்றை ஊக்குவித்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

## சவூதி அன்பளிப்பைக் கைவிட்டது!

முஸ்லிம்களின் நோன்பு கால பாவனைக்காக சவூதி அரேபியா அரசாங்கம் வருடாந்தம் புனித நோன்பு அன்பளிப்பாக பேரீச்சம்பழங்களை இலவசமாக வழங்கி வந்தது. ஆனால் இவ்வருடம் சவூதியின் அன்பளிப்பு அந்நாட்டிடம் வாய்விட்டுக் கேட்டும் வழங்கப்படவில்லை.முஸ்லிம்சமய விவகார அமைச்சு கடந்த 6 மாதங்களுக்கு முன்பே பேரீச்சம் பழங்களை காலதாமதமின்றி வழங்குமாறு சவூதி அரேபியாவை கடிதம் மூலம் கோரியிருந்தும் அது வழங்கப்படவில்லை. கடந்த வருடம் சவூதி அரசாங்கம் 150 மெட்றிக்தொன் பேரீச்சம்பழங்களை இலவசமாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையில் அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடியதன் பின் கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சரவைப் பத்திரம் ஒன்றினைச் சமர்ப்பித்து 250 மெற்றிக்தொன் பேரீச்சம்பழம் பணம் கொடுத்து கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவையிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

பரிஸ்தமிழ்.கொம்
www.ParisTamil.Com
● பிரான்ஸ் செய்திகள்
● பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

## மாணவிகள் துஷ்பிரயோகம் ஆசிரியருக்கு விளக்கமறியல்

யாழ். தெல்லிப்பளை பாடசாலையொன்றில் கணிதம் கற்பிக்கும் ஆசிரியர், அப் பாடசாலையில் கல்வி கற்கும் 7 மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கடந்த 24ம் திகதி செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 39 வயதுடைய கொக்குவில் பகுதியைச் சேர்ந்தவராவார். கைது செய்யப்பட்ட இவரை மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தியபோது நீதிவான் அவரை எதிர்வரும் யூன் 7ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## கிளிநொச்சியில் மாணவியிடம் தவறாக நடக்க முயன்ற ஆசிரியர்!

கிளிநொச்சி பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் மாணவியிடம் ஆசிரியர் ஒருவர் தகாதமுறையில் நடக்க முற்பட்டார் என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் பாடசாலையின் அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட ஆசிரியர் ஆகியோரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் சிறுவர் நன்னடத்தை அதி



காரியால் நடத்தப்பட்டுள்ளன. கிளிநொச்சி கரைச்சி கல்வி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவியொருவரை அந்தப் பாடசாலையில் கற்பித்தலில் ஈடுபட்டு வரும் ஆசிரியர் ஒருவர் கடந்த வாரம் பாடசாலை நேரத்தில் தகாத முறையில் நடத்த முற்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் மாணவி வகுப்பாசிரியரிடமும் அவரது பெற்றோரிடமும் முறைப்பாடு செய்தார் என்றும், அதைத் தொடர்ந்து குறித்த முறைப்பாடு தொடர்பில் பெற்றோர் பாதிக்கப்பட்ட மாணவி, மற்றும் சம்பந்தப்பட்ட ஆசிரியரிடம் விசாரணைகளை மேற்கொண்டு சம்பவம் தொடர்பில் வலயக் கல்விப்பணிப்பாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் பாடசாலை அதிபரை மேற்கோள்காட்டிச் செய்திகள் வெளியாகியுள்ளன.

## பௌத்த விகாரையில் பாலியல்!

விகாரைக்குதானம் கொண்டுசென்ற மூன்று பிள்ளைகளின் தாயொருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் தேரர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவின் பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் முன்னணி செயற்பாட்டாளரான சீகிரியே தம்மிந்த தேரரே கைது செய்யப்பட்டுள்ளார். இந்த பிக்கு இதற்கு முன்னரும் 2016ம் ஆண்டில் பெண்ணொருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டதால், நீதிமன்றத்தினால் கடுமையாக எச்சரிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## 'கிழக்கில் இருந்து' எழுவான்

# இனப்பாகுபாட்டுடன் பேரினவாத அரசாங்கம்

# எல்லைக் கிராமங்களில் அடிப்படை வசதிகளின்றி தமிழ் மக்கள் பாதிப்பு

தமிழ் இன விடுதலைக்கான முப்பது வருடகால ஆயுதப் போராட்டத்தினால் ஆக்கிரமிப்பு படைகளின் கெடுபிடிகளினால் கிழக்கு மாகாணத்தின் தமிழர் வசிக்கும் எல்லைக் கிராமங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டவர்களை இன்று வரைக்கும் மீள்குடியேற்ற கொழும்பு அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

போர் முடிவடைந்த பின்னர், காடுகள் மண்டிக்காணப்படும் தமது சொந்த இடத்திற்கு மக்கள் மீள்குடியேற செல்கின்ற போது வனப்பாதுகாப்பு அதிகாரிகள் தடுக்கின்றார்கள். மறுபுறத்தில் இப்பகுதி தொல்பொருள் திணைக்களகத்திற்கு சொந்தமானது எனத் தடுக்கின்றார்கள். அதுமாத்திரமின்றி சில பகுதிகளில் முன்னர் பௌத்த விகாரைகள் இருந்ததாக கூறி பௌத்த பிக்குகள் போராட்டங்களை நடாத்துகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்கள் வாழ்ந்த பூர்விக நிலங்கள் இன்று இலங்கையிலுள்ள மாற்றினத்தவர்களினால் சூறையாடப்படுகிறது. போரதீவுப்பற்று, பட்டிப்பளை, வவுணதீவு, ஏறாவூர்பற்று செங்கலடி போன்ற படுவான்கரையில் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள எல்லைக்கிராமங்களில் தமிழ் மக்கள் இன்றும் மீள்குடியேற முடியாதுள்ளது.

யுத்தகாலத்தில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட மத்திய முகாம், 39 கொலனி, வக்கியல்ல, கெவிளியாமடு, தெவிலாணை, மரப்பாலம், பெரியபுல்லுமலை, கோப்பாவெளி, போன்ற கிராமங்களில் மக்கள் தமது சொந்த முயற்சியினால் மீள்குடியேறினாலும், ஒரு கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் கொழும்பு அரசாங்கம் தொடர்ந்து புறக்கணிக்கின்றது.

மட்டு - அம்பாறை மாவட்டத்தின் எல்லை பகுதியில் ஊர்காவல்படையினருக்கென வயல்காணிகளையும், மேட்டுநிலக்காணிகளையும் வழங்கி சிங்களவர்களை குடியேற்றுகின்றனர். இக்குடியேற்றம் தமிழர்கள் வாழ்ந்த பகுதிகளையும் தாண்டி மட்டக்களப்பு மாவட்டத்தின் நிர்வாகப் பகுதிக்குள் அத்துமீறி நுழைகின்றனர். இது தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகள் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட குறிப்பாக தமிழர் பூர்விக கிராமங்களை மீளக் கட்டியெழுப்புவதற்காக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புக்கள் கூடுதலான நிதிகளை கடனாகவும், மானியமாகவும் வழங்குகின்ற போதிலும், இவற்றின் அதிகமான நிதியானது பெரும்பான்மைச் சமூகம் வாழ்கின்ற மாவட்டத்தின் எல்லைக் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதுடன், தென்பகுதியில் வசிக்கும் சிங்கள மக்களை குடியேற்றுவதற்கான நடவடிக்கையை கொழும்பு அரசாங்கம் முன்னெடுத்துவருகிறது.

தமிழர் வசிக்கும் எல்லைக் கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடு, ஒழுங்கான வீதி இல்லை, வைத்தியசாலை வசதிகள் இல்லை, போக்கவரத்துவசதிகள் இல்லை, காட்டு மிருகங்களின் தாக்கம், பாடசாலைகள் அபிவிருத்தியில்லை இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிப்படைகிறது. ஆனால், சிங்கள மக்கள் வசிக்கும் கிராமங்களில் ஆண்டு ஐந்துக்குட்பட்ட பாடசாலையாக இருந்தாலும் அனைத்து வசதிகளையும் கொழும்பு அரசாங்கம் செய்து கொடுக்கிறது.

எனவே, போர் ஏற்பட்டு முடிவடைந்தும் ஆட்சிக்கு வரும் அரசாங்கம் இனப்பாகுபாட்டுடனே நடந்துகொள்கின்றது. சிங்கள இனத்துக்கும், தனது இனத்துடன் சார்ந்து நிற்கும் முஸ்லீம்களுக்கும் அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கும் நிலைமையே காணப்படுகின்றது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த தமிழ் கிராமங்களின் உட்கட்டுமானப்பணிகளை மேற்கொள்வதில் கொழும்பு அரசாங்கம் கவனம் எடுக்கவில்லை.

தமிழ் கிராமங்களில் காணப்படும் வீதிகள் மழைகாலங்களில் மாத்திரமின்றி இயல்பான காலங்களிலும் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் என பலரும் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பயணிக்கின்றனர்.

தேர்தல் காலங்களில் இக்கிராமங்களுக்கு வாக்குகேட்டுவரும் தமிழ் அரசியல்வாதிகள் கூட சேதமடைந்து காணப்படும் இவ்வீதியை புனரமைத்துத் தருவதாக வாக்குறுதிகளை வழங்குகின்ற போதிலும், தேர்தல் முடிவடைந்த பின்னர் இப்பகுதிக்கே வருவதில்லை.

கடந்த காலங்களில் இக்கிராமம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிருந்தமையினால், இப்பகுதியில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு கொழும்பு அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. எனினும் தற்போது யுத்தம் முடிவடைந்து 10 வருடங்கள் கடந்த போதிலும், தமிழர் பகுதிகளில் உட்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் பகுதியில் காணப்படும் காடுகளை பொருளாதார நோக்கத்திற்காக கொழும்பு அரசாங்கம் அழிப்பதனால் காட்டு மிருகங்கள் அனைத்தும் மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி படையெடுக்கின்றன.

கடந்த மூன்று மாத காலமாக யானைகள் குடியிருப்பு பகுதிக்குள் வந்து வாழைமரம், தென்னைமரம், நெல் மூட்டைகளை உட்கொள்வதுடன் உடமைகளையும் சேதப்படுத்துகின்றன. சம்பூர் பகுதியில் 12க்கும் மேற்பட்ட யானைகள் கொண்டுவந்து விடப்பட்டுள்ளன. மூன்று வாரங்களுக்கு முன்னர் மூதூர் வைத்தியசாலைக்கு பின்பக்கமாக வந்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2006 ஆம் ஆண்டு சம்பூர் பகுதியில் இடம்பெற்ற உக்கிர போர் நடவடிக்கையினால் அப்பகுதி மக்கள் முற்றாக இடம்பெயர்ந்து 9 வருடங்களுக்கு பின்னர் மீள்குடியேறினர். போர் நடவடிக்கையினால் அனைத்து பொருளாதாரங்களையும் இழந்த சம்பூர் மக்களை சிங்களப் பகுதியில் இருந்து சிங்களவர்களினால் கொண்டுவந்து விடப்படும் யானைகளும் பல இழப்புக்களை ஏற்படுத்துகின்றன.

யாானைகளின் வருகையைக் கட்டுப்படுத்துவதற்காக காட்டு பகுதி ஊடாக செல்லும் வீதியில் உள்ள மின்கம்பங்களில் வீதி விளக்குகளை பொருத்துவதன் மூலம் ஓரளவு குடியிருப்புப் பகுதிக்கு வரும் யானைகளை கட்டுப்படுத்த முடியும் என சம்பூர் கிராம பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்த போதிலும் அதனை அரச அதிகாரிகள் செவிமடுப்பதாக இல்லை.

**சம்பூர் பகுதியில் 12க்கும் மேற்பட்ட யானைகள் கொண்டுவந்து விடப்பட்டுள்ளன. மூன்று வாரங்களுக்கு முன்னர் மூதூர் வைத்தியசாலைக்கு பின்பக்கமாக வந்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.**



## ஒப்பரேசன் டபிள் எட்ஜ்: 10

# மடையுடைக்கும் இரகசியங்கள்

கலாநிதி சேரமான்

இலண்டனில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சொத்துக்களை அடையாளம் காண்பதற்கு கே.பி, விநாயகம், ராம், நகுலன், தவேந்திரன் ஆகியோரின் கையாட்கள் மேற்கொண்ட தேடுதல் வேட்டை, கனடாவில் இருந்து ஒரு மில்லியன் பவுண்களைப் பெற்றுக் கொண்டதாகக் கூறப்பட்ட மணி என்ற பெயருக்குரிய நபருடனும், ஈஸ்ற்ஹாம் பகுதியில் ஐந்து இலட்சம் பவுண்கள் பெறுமதியுடைய தமிழீழ விடுதலைப் புலிகளின் வீட்டின் உரிமையாளரான உருத்ராபதி சேகர் அவர்களுடனும் நின்று விடவில்லை.

பிரித்தானியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பணத்தில் மளிகைக் கடைகள், வீடுகள், எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் போன்றவற்றை வைத்திருந்ததாகக் கருதப்பட்ட தமிழின உணர்வாளர்கள் மற்றும் பொட்டு அம்மானின் நேரடி வழிகாட்டலில் தன்னை விநாயகம் இயக்குவதாகவும், அம்மானின் பணிப்பிற்கு அமையவே தமிழீழ விடுதலைப் புலிகளின் சொத்துக்களைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் தான் இறங்கியிருப்பதாகவும் கதை புனைந்து வந்தார்.

★★★★ ★★★★

'இவர் ஒரு நீதிபதியா? கேட்கிறவன் கேணையன் என்றால் எலியும் ஏரோப்பிளேன் ஓட்டுமாம் என்பது போல் அல்லவா இது இருக்கின்றது' என்று எண்ணிக் கொண்ட அவருடன் கரகரத்த குரலில் சுகி அல்லது சுபன் என்று இன்பத்தால் அறிமுகம் செய்யப்பட்டவர் பேச்சுக் கொடுத்த சுகி எனப்படும் சுபனை தர்மசங்கடத்தில் அவுஸ்திரேலியாவில் இருந்து வந்திருந்தவர் ஆழ்த்தி விட்டார் என்ற தோரணையே இன்பம் அவர்களின் முகத்தில் காணப்பட்டது.

அப்பொழுது சுகி எனப்படும் சுபன் பேசினார்: 'இல்லை நான் இஞ்சை சட்டம் படிக்க வந்திருந்தாலும், இயக்க வேலைகளில் நேரத்தைச் செலவழித்ததால் முழுமையாகப் படிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.'

★★★★ ★★★★

2009ஆம் ஆண்டு ஆனி மாதத்தின் முதலாவது வாரத்தின் ஒரு கிழமை நாளின் மாலைப் பொழுதில் பிரித்தானியாவில்



## வடகொரிய தூதரகத்தில் மண்டியிட்ட கே.பி



தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களையும் இவர்கள் வலைவீசித் தேடினார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால் விநாயகத்தின் சார்பில் இலண்டனில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சொத்துக்களை அடையாளம் காண்பதற்கான முயற்சியில் ஈடுபட்ட திரு என்பவரின் பெயரில் பல மில்லியன் பவுண்கள் பெறுமதியான சொத்துக்கள் இருந்தது தான்.

யுத்தம் நிறைவு பெறுவதற்கு முன்னரான காலப்பகுதியில் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர் ஒருவருடன் உரையாடும் பொழுது, பிரித்தானியாவில் பொட்டு அம்மானின் பணிப்புரையின் பேரில் கொள்வனவு செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் சொத்துக்களைத் தானே மேற்பார்வை செய்து பராமரித்து வருவதாகவும் கூட திரு அவர்கள் தெரிவித்திருந்தார்.

இறுதிப் போரில் பொட்டு அம்மானுக்கு என்ன நடந்தது என்பது மிகப்பெரும் மர்மமாக இருந்தது திரு போன்றவர்களுக்கு வரப்பிரசாதமாகவே அமைந்தது. இறுதிப் போரில் தனது ஒரு காலை இழந்த பொட்டு அம்மான், இந்தியாவில் சிகிச்சை பெற்று வருவதாகப் புதுக்கதையளந்த இவர், தார்.

'நான் தான் தமிழீழ சட்டக்கல்லூரியில் முதல் முதலாக சட்டம் படித்து வெளியேறியவன். தமிழீழ நீதி நிர்வாகத்துறையில் நீதியாளராக நீண்ட காலம் பணிபுரிந்த அனுபவம் எனக்கு இருக்கு. சமாதான காலத்தில் மேற்கொண்டு சட்டம் படிப்பதற்காக என்னை அண்ணை மலேசியாவிற்கு அனுப்பி வைச்சவர். என்னை மாதிரி அனுப்பப்பட்ட இன்னும் கொஞ்சப் போராளியள் நீங்கள் இருக்கிற அவுஸ்திரேலியாவிலும் இருக்கீனம்.'

தான் எதுவுமே பேசாமல் இருந்த பொழுது தன்னைப் பற்றிய சுய அறிமுகத்தை சுகி அல்லது சுபன் என்பவர் மேற்கொண்டது கே.பியின் பிடியில் சிக்கியிருந்தவருக்கு மிகவும் வேடிக்கையாகவே இருந்தது.

'நீங்கள் மலேசியாவில் சட்டத்துறையில் என்ன பீல்டில் (துறையில்) மாஸ்ரேர் (முதுமாணி) பட்டம் முடிச்சிருக்கிறீங்கள்?' இவ்வாறு கே.பியின் பிடியில் சிக்கியிருந்தவர் கேட்டதும் ஒரு கணம் அவரின் எதிர்ப்புறத்தில் அமர்ந்திருந்த சுகி எனப்படும் சுபன் அவர்கள் திகைத்துப் போனார்.

இடக்கு முடக்கான கேள்வியைக் கேட்டு இருந்து சர்வே என்றழைக்கப்படும் தர்மலிங்கம் சர்வேந்திரா அவர்களின் கைபேசி எண்ணிற்கு (00 47 90 29 01 90) அந்த அழைப்பு எடுக்கப்படுகின்றது.

மாறன் என்று தான் கருதியிருந்த செயற்பாட்டாளர், தனது இரண்டு நண்பர்கள் ஊடாகத் தான் விடுத்த கோரிக்கையை ஏற்றுத் தனக்கு அழைப்பு எடுத்தமையையிட்டுப் பெரும் மகிழ்ச்சியில் சர்வே பேசினார்:

'ஏன்ராப்பா சனத்தை ஏமாத்திறியள்?' இப்படித் தொடங்கிய சர்வே அவர்களின் பேச்சு, ஏதோ முள்ளிவாய்க்காலில் தமிழீழத் தேசியத் தலைவரின் அருகில் இருந்து எல்லாவற்றையும் அவதானித்தவர் போன்ற தொனியில் நகர்ந்து கொண்டிருந்தது. தான் பேசிக் கொண்டிருந்த ஒவ்வொரு வினாடியும் தமிழீழத் தேசியத் தலைவரின் இருப்பை மறுதலிப்பதிலும், கே.பியைத் தமிழீழ மக்களின் அடுத்த தேசியத் தலைவராக முன்னிறுத்துவதிலுமே சர்வே குறியாக இருந்தது அவரது பேச்சில் தொனித்ததை மறுமுனையில் இருந்தவரால் உணர முடிந்தது.

'நாங்கள் இருக்கும் போது இயக்கம் கேட்ட ஆயுதங்களை எல்லாம் அனுப்பி வைச்சனாங்கள். ஆயுத விநியோகத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. எல்லாம் ஒழுங்காக நடந்தது. எப்ப கே.பி அண்ணையை இயக்கம் விலக்கி வைச்சுதோ, அதுக்குப் பிறகுதான் ஆயுத விநியோகம் எல்லாம் தடைப்பட்டது. எங்கடை போராட்டம் தோற்றுப் போனதுக்கு கே.பி அண்ணையை இயக்கம் விலக்கி வைச்சது தான் காரணம்.'

இவ்வாறு கே.பி பற்றிய சுப்ரபாதத்தை சர்வே பாடிக் கொண்டிருந்தது மறுமுனையில் அதனை செவிமடுத்துக் கொண்டிருந்த தமிழ்த் தேசிய செயற்பாட்டாளருக்கு எரிச்சலூட்டும் வகையிலேயே அமைந்திருந்தது. ஏனென்றால்....

தொடர்ச்சி 14ம் பக்கம்

**கே.பியின் இந்தக் கையாலாகாத்தனம் களமுனையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. தீச்சுவாலை எதிர்ச்சமரின் விளைவாக ஏறத்தாழ முதுகெலும்பு முறிந்தது போன்ற நிலையில் காணப்பட்ட சிங்களப் படைகளுக்கு எதிராக எந்தவொரு வலிந்த தாக்குதலையும் மேற்கொள்ள முடியாத நிலையையே கே.பியின் கையாலாகத்தனம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஏற்படுத்தியிருந்தது.**

### குமுதினிப் படுகொலை நினைவிடத்தில் அஞ்சலி

1985ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து 64 பயணிகளுடன் குமுதினி படகு தனது பயணத்தை வழமை போல ஆரம்பித்தது. படகு அரை மணி நேரம் தனது பயணத்தை மேற்கொண்டிருந்தவேளை சிறீலங்கா இனப்படுகொலைக் கடற்படையால் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டு குழந்தைகள் பெண்கள் முதியவர்கள் என 36 பேரை வெட்டி படுகொலை செய்யப்பட்டனர். இப்படுகொலையின் 33வது ஆண்டு நினைவு நாள் நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள குமுதினிப் படகு படுகொலை நினைவுத் தூபிக்கு முன்பாக நடைபெற்றது. சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்துடன் இணைந்து படுகொலைகளில் ஈடுபட்ட ஈ.பி.டி.பியும் இந்நினைவு நிகழ்வில் பங்கேற்றது அங்குள்ள மக்களுக்கு அதிர்ச்சியளிப்பதாக அமைந்திருந்தது.

### கழுத்து வெட்டி குறித்து பிரித்தானிய நாடாளுமன்றில் கேள்வி

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொது மக்களை நோக்கி அச்சுறுத்தும் விதத்தில் கழுத்தை வெட்டுவதுபோல் சைகை செய்து சர்ச்சையில் சிக்கிய பிரித்தானியாவிற்கான சிறீலங்காத் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரியான பிரியங்கர



பெர்ணான்டோ குறித்து பிரித்தானிய நாடாளுமன்றத்தில் மீண்டும் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹைவெல் வில்லியம்ஸ் குறிப்பிட்ட விவகாரம் குறித்து மீண்டும் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். இதற்கு பதில் அளித்துள்ள பிரித்தானியாவின் ஆசிய விவகாரங்களிற்கான அமைச்சர் மார்க் பீல்ட், பொதுநலவாய மாநாட்டின் போது சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சருடன் இது குறித்து ஆராய்ந்ததாக தெரிவித்துள்ளார். ஏப்பிரல் 15ம் திகதியுடன் அந்த அதிகாரியின் பணியை சிறீலங்கா அரசாங்கம் முடித்துக்கொண்டுள்ளது என தெரிவித்துள்ள அமைச்சர், புதிதாக எவரையும் நியமிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

### 140 மில்லியன் ரூபா செலுத்த மகிந்தவுக்கு அவகாசம்

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு செலுத்தவேண்டிய 140 மில்லியன் ரூபாய் நிதியை எதிர்வரும் யூலை 4ம் திகதிக்கு முன்னர் செலுத்துமாறு, சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு கொழும்பு வணிக மேல் நீதிமன்றில் அறிவித்துள்ளது. 140 மில்லியன் ரூபாய் நட்டத்தை மீளப் பெற்றுத் தருமாறு கோரி இலங்கை போக்குவரத்துச் சபையால் மகிந்தவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2015ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது முன்னாள் மகிந்த ராஜபக்சவின் தேர்தல் பணிகளுக்காக இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துகளை பயன்படுத்தியிருந்தார்.




# தமிழீழ விடுதலைக்கான போராட்டம் தோற்றுவிட்டதா? அல்லது அந்த இலக்கை நோக்கி நகருகின்றதா..?

**கேள்வி:–** தமிழர்களின் கொண்டாட்டங்களுக்குப் போனால் ஒரு நாளே விரையமாகி விடுகிறதே. இதனை தவிர்க்க என்ன வழி..?

பி.கண்ணுத்துரை பிரான்ஸ்

**பதில்:–** தவிர்க்க நினைத்தால், உறவுகளின் அன்பை, நட்பை இழக்கவேண்டி வரும் பரவாயில்லையா..? 'கலாச்சார நிகழ்வுகளாக இருந்தவை இன்று கமெராவின் நிகழ்வுகளாக மாறிவிட்டதால்' வந்த வீண் நேர விரையம் இது. ஆனால் கவலைப்படாதீர்கள்... இன்றைய தலைமுறையுடன் இவை முடிந்து போய்விடக்



கூடும். காலத்தின் தேவையைப் புரிந்துகொண்ட இங்கு வாழும் அடுத்த தலைமுறை இவற்றைக் காவிச் செல்லப் போவதில்லை என்று நம்பிக்கை கொள்ளலாம்.

அதுசரி... இந்த இயந்திர வாழ்விற்குள் உறவுகளைச் சந்தித்து, உணர்வுகளைப் பகிர்ந்து, மகிழ்வுடன் உற்சாகமாகக் கடக்க வேண்டிய ஒரு நாளை, ஏன்தான் தலைபோற காரியம் இருப்பதுபோல் இரத்தக் கொதிப்புடன் சிலர் கடந்து செல்கின்றார்கள் என்பதுதான் புரியவில்லை.

**கேள்வி:–** தமிழீழ விடுதலைக்கான போராட்டம் தோற்றுவிட்டதா? அல்லது இலக்கை நோக்கி நகருகின்றதா..?

மயில்வாகனம் வீரமணி பிரான்ஸ்

**பதில்:–** **'பிரான்ஸ் ஒரு சண்டையில்**
**தோற்றிருக்கின்றது.**
**ஆனால், பிரான்ஸ் போரில்**
**தோற்கவில்லை.'**

ஜேர்மன் நாசிப் படைகளின் ஆக்கிரமிப்பில் இருந்து பிரான்சை மீட்டெடுப்பதற்காகத் தலைமையேற்றுப் போராடிய ஜெனரல் சார்ள்ஸ் டு கொல், போரில் பிரான்ஸ் தோற்றுக்கொண்டிருந்தபோது கூறிய நம்பிக்கைக்குரிய வார்த்தைதான் மேலே உள்ளவை.



இன்றும் பிரெஞ்சு மக்களால் மட்டுமல்ல உலக மக்களாலும் நேசிக்கப்படுகின்ற வார்த்தை இது. ஏனெனில் தோற்றுக்கொண்டிருப்பவனிடம் எஞ்சியிருக்கக்கூடியது நம்பிக்கை மட்டும்தான். அந்த நம்பிக்கையையும் இழந்துவிட்டால் அவனுக்கு தோல்வி நிச்சயம். நம்பிக்கையை தக்க வைக்கும் வகையில் வெளிவந்த வார்த்தைகள் ஜெனரல் சார்ள்ஸ் டு கொல் உடையவை. அந்த நம்பிக்கைதான் பின்நாட்களில் பிரான்சை வெற்றிபெற வைத்தது என்றாலும் அது மிகையில்லை.

தமிழர்கள் ஆயுதம் தாங்கிய சண்டையில்தான் தோற்றிருக்கின்றார்கள். ஆனால் தமிழீழ விடுதலைக்கான போரில் அவர்கள் இன்னும் தோற்கவில்லை. இந்த நம்பிக்கை தமிழ் மக்களிடம் நிறையவே இருக்கின்றது. ஆனால், நம்பிக்கையுடன் மட்டும் நின்றுவிட முடியாது. இலக்கு நோக்கி நகரவேண்டும்.

கிட்லரின் கொடூரமான பக்கத்தை விட்டுவிடுவோம். தன் படையினருக்கு கிட்லர் எழுதிய சில வரிகள் மிக முக்கியமானவை. தமிழ் மக்களுக்கும் கூட இவை பொருந்துபவையாக இருக்கும். ஏனெனில் தடுமாறி நின்றுவிடாமல் இலக்கு நோக்கி நகர்வதென்பது மிக முக்கியமானது.



கிட்லர் தன் படையினருக்கு எழுதியது இதுதான்...

**'உங்களால் ஓட முடியவில்லையா?**
**நடந்து செல்லுங்கள்.**
**உங்களால் நடக்க முடியவில்லையா?**
**தவள்ந்து செல்லுங்கள்.**
**உங்களால் தவள முடியவில்லையா?**
**உருண்டு செல்லுங்கள்.**
**எனக்குத் தேவை நீங்கள் இலக்கை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றீர்கள் என்பதுதான்.'**

தமிழீழம் நோக்கிய பயணத்தில் தமிழ் மக்களுக்கும் இப்போது இதுதான் தேவை.

**கேள்வி:–** வீட்டில் அதிகாரம் யார் கையில் இருக்க வேண்டும்? கணவனிடமா, மனைவியிடமா? அரிச்சந்திரனே சுற்றி வளைக்காமல் நேர்மையாகப் பதில் சொல்லுங்கள்.

மேகலா சிவநாதன் பொபினீ பிரான்ஸ்

**பதில்:–** என்னை வம்பில் மாட்டிவிடும் கேள்வி போல் இது இருக்கின்றதே..? இருந்தாலும் ஒரு பதிலைச் சொல்லி வைக்கின்றேன். அண்மையில் நண்பர் ஒருவர் முகநூலில் வைப்பிலிட்டிருந்த வாசகம் இது.

'ஒரு வீட்டில் கணவனும், மனைவியும் குடும்ப வரவு-செலவு பற்றி விவாதித்துக் கொண்டு இருந்தார்கள்.

திடீரென கோபமடைந்த கணவன் 'என் பணம் இல்லை என்றால் இந்த வீடே இருக்காது' என்று கத்தியுள்ளார்.

அதற்கு அவர் மனைவி சற்றும் கோபப்படாமல் சொன்னாராம், 'அன்பே! உங்கள் பணம் இல்லை



என்றால் நானும் இங்கு இருக்கமாட்டேன்' என்று. இப்போது நீங்கள் சொல்லுங்கள் வீட்டில் யார் கையில் அதிகாரம் இருக்க வேண்டும்..?

**கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**
இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com
தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc
குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16



# செய்திகளும் எழும் கேள்விகளும்

தெய்வமகள்

**செய்தி:-** அமெரிக்காவில் சட்ட விரோதமாக குடியேறிவர்கள் மனிதர்கள் அல்ல, விலங்குகள். அவர்களை அமெரிக்காவை விட்டு வெளியேற்ற விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறினார்.

**எழும் கேள்வி:-** நாடுகளின் விருப்பமும், அனுமதியின்றி பல்வேறு நாடுகளிலும் ஆக்கிரமித்து நிலைகொண்டிருக்கும் அமெரிக்க இராணுவத்தை எப்படிச் சொல்வதாம்..?

★★★★ ★★★★

**செய்தி:-** 140 மில்லியன் ரூபாய் நட்டத்தை மீளப் பெற்றுத் தருமாறு கோரி இலங்கை போக்குவரத்துச் சபையால் சிறீலங்கா முன்னாள் ஜனாதிபதி மகிந்தவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், எதிர்வரும் யூலை 4ம் திகதிக்கு முன்னர் அத் தொகையைச் செலுத்துமாறு கொழும்பு வணிக மேல் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

**எழும் கேள்வி:-** மகிந்த ஏன் கோத்தா கூட ஆட்சிக்கு வந்தால் இலங்கை போக்குவரத்துச் சபையின் நிலை என்னாகுமோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாகி இதுவரை அந்த பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு அதற்கான தீர்வினைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளர்களுக்கு சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவுரை வழங்கியுள்ளார்.

**எழும் கேள்வி:-** அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளான தமிழ் அரசியல் கைதிகளுக்கு என்ன தீர்வாம்..?

★★★★ ★★★★

**செய்தி:-** மலேசியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதுபோல் இலங்கையிலும் விரைவில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.



**எழும் கேள்வி:-** மலேசியாவின் முன்னாள் பிரதமர் நஜிப் ரசாக் இற்கு ஏற்பட்டுவரும் நிலைமை மைத்திரிக்கும் ஏற்படுமோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** நேபாளத்தின் ஐக்கிய மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கொம்யூனிஸ்ட், நேபாள மாவோயிஸ்ட் கொம்யூனிஸ்ட் ஆகிய இரு கட்சிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, புதிதாக உருவாகியுள்ள கட்சி தற்போது நேபாளத்தின் மிகப் பெரிய கட்சியாக உருவெடுத்துள்ளது.

**எழும் கேள்வி:-** சீனாவைப்போல் நேபாளத்திலும் இனி ஒற்றை ஆட்சி தானோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** பௌத்த சாசனத்திற்கும் மகா சங்கத்தினருக்கும் நிறைவேற்ற வேண்டிய கடமைகளையும் பொறுப்புக்களையும் மகா சங்கத்தினரின் ஆசிகளுடன் தாமதமின்றி நிறைவேற்றுவதாக சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால உறுதி வழங்கினார்.

**எழும் கேள்வி:-** காணாமல்போன உறவினர்களுக்கு வழங்கிய உறுதியை எப்போது நிறைவேற்றப் போகின்றீர்கள்..?

★★★★ ★★★★

**செய்தி:-** காணாமல் போனோருக்கான பணியகம் எந்தவொரு அரசியல் அழுத்தங்களுக்கும் அடிபணியாது என்று, பணியகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** பணியகம் அடிபணியாது, பணியகத்தில் பணியாற்றுபவர்கள் பௌத்த மதத் தலைவர்களுக்கும், சிறீலங்கா ஆட்சியாளர்களுக்கும் அடிபணிந்துதானே ஆகவேண்டும்..?

★★★★ ★★★★

**செய்தி:-** முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கொல்லப்பட்ட பொதுமக்களே நினைகூரப்பட்டனர். விடுதலைப் புலிகளை எவரும் கௌரவிக்கவில்லை என சிறீலங்காவின் முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

**எழும் கேள்வி:-** யாரால் கொல்லப்பட்ட மக்கள் என்பதை சரத் பொன்சேகா சொல்லாமல் விட்டுவிட்டாரோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** இலங்கையில் ஒருநாய் கூட முதலீடுகளை மேற்கொள்வதில்லை என ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** சீனா நாய் இல்லைப் பேயோ..?

★★★★ ★★★★

# இனப்படுகொலையை திட்டமிட்டு செய்வதற்கென்றே பாதுகாப்பு வலயம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது

**முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 9ஆம் ஆண்டு நினைவேந்தல் நினைவுகளை சுமந்து நிற்கும் இந்த நாட்களில் முள்ளிவாய்க்கால் இறுதி நாள்வரை மக்களின் அவலங்களை சுமந்துசென்ற மருத்துவர்களின் பணி என்பதும் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாதவை. அந்தவகையில் முள்ளிவாய்க்கால் இறுதி நாள்வரை அந்த மண்ணில் இருந்து பணிசெய்து, இன்றும் அந்த அவலங்களை சுமந்து புலம்பெயர்மண்ணில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மருத்துவர் நா.வண்ணன் அவர்கள் ஈழமுரசுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலின் சென்ற இதழின் தொடர்ச்சி இது.**

சந்திப்பு
கந்தரதன்

***இறுதியுத்த காலத்தில் நீங்கள் பெற்ற மருத்துவ அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள்?***

எங்கெங்கு பாதுகாப்புவலயம் அறிவிக்கப்பட்டதோ அங்கெல்லாம் இராணுவம் தாக்குதல் நடாத்தியது. எங்கெங்கு வைத்தியசாலைகள் இருந்ததோ அங்கெல்லாம் இராணுவம் தாக்குதல் நடாத்தியது. அதுதான் முள்ளிவாய்க்கால் வரை நடைபெற்ற உண்மை. அதாவது ஓர் இனப்படுகொலையை திட்டமிட்டு செய்வதற்கென்றே பாதுகாப்பு வலயம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மக்களால் நம்பப்பட்ட இடமாக மக்களை உள்வாங்கிப் படுகொலை செய்யப்படும் இடமாக இந்தப் பாதுகாப்பு வலயம் எல்லா இடங்களிலும் இருந்து வந்துள்ளது. அதுவே தொடர்ச்சியாக முள்ளிவாய்க்கால் வரை வந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் வாகரை, கதிரவெளிப் பிரதேசங்களை சிறீலங்கா இராணுவம் முற்றுமுழுதாகக் கைப்பற்றியபின்னர், நாங்கள் வன்னிக்கு வந்துவிட்டோம். வன்னிக்கு வந்தபின்னர் அளம்பில் வைத்தியசாலையில் பணியாற்றி பின்னர் நட்டாங்கண்டல் வைத்தியசாலையில் பணியாற்றினேன். அந்தநேரத்தில் வைத்தியர் வரதராஜா அவர்கள் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பாளராக வருகிறார். அதேவேளை மல்லாவி வைத்தியசாலையின் சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்தியர் கதிர்ச்செல்வன் இருக்கின்றார். அப்போது மன்னார் பகுதியில் பெரும்

**பரவலாக ஒரு தாக்குதல் நடக்கின்றது. இயங்கிக் கொண்டிருந்த அனைத்து வைத்தியசாலைகளையும் இலக்குவைத்து. ஆனால், எமது உடையார்கட்டு வைத்தியசாலை மயிரிழையில் தப்புகின்றது.**

யுத்தம் இடம்பெறுகின்றது. மன்னாரில் இருந்து மக்கள் இடம்பெயர்கின்றனர். அந்தவேளையில் வன்னிப்பெருநிலப்பரப்பில் போதுமான இடம்இருந்ததனால், மக்கள் எங்கேயும் இருக்கலாம். முகமாலையில் யுத்தம் இடம்பெற்றதனாலும் ஏற்கெனவே மக்கள் அப்பகுதியில் இருந்து வெளியேறியிருந்தனர். அத்தோடு வவுனியா பகுதியில் இருந்தும் குறிப்பிட்டளவு மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். ஆனால், பெருமளவான மக்கள் இடம்பெயரவில்லை. தொடர்ந்து இராணுவத்தினர் பெரும் எடுப்பில் கண்மூடித்தனமாகத் தாக்குதல்களை மேற்கொண்டதனால் மேலும் மக்கள் இடம்பெயரும் நிலை ஏற்படுகின்றது. இராணுவத்தின் தொடர்தாக்குதல்களால் பெருமளவான பகுதிகளை இராணுவம் கைப்பற்றிக்கொண்டுவர விடுதலைப்புலிகளுடன் இணைந்து மக்களும் நகர்ந்துசெல்லவேண்டிய நிலை ஏற்படுகின்றது. விடுதலைப்புலிகளின் பிரிவுகள் எல்லாம் பின்னோக்கி நகர அவர்களுடன் மக்கள் உட்பட அனைவரும் பின்னோக்கி நகர்கின்றனர். அதுமட்டுமல்லாமல் அனைத்து நிறுவனங்களும் தமது அத்தியாவசியப் பொருட்களுடன் பின்னோக்கி நகரும் நிலை ஏற்படுகின்றது. சம நேரத்தில் பல பகுதிகள் விடுபடவேண்டிய நிலை ஏற்படுகின்றது. அங்கும் யுத்தம் உக்கிரமடைய, கிளிநொச்சி வைத்தியசாலை தருமபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்படுகின்றது. பின்னர் உடையார்கட்டு வைத்தியசாலைக்கு மாற்றப்படுகின்றது. கிளிநொச்சி பழைய மருத்துவமனையில் மல்லாவி மருத்துவமனை இயங்கிவந்தது. கிளிநொச்சி மருத்துவமனை இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பு மருத்துவமனையுடன் சேர்ந்து இயங்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இவ்வாறு சின்ன சின்ன மருத்துவமனைகள் பல ஒன்றாக இயங்கவேண்டிய சூழ்நிலை உருவாகியது. எங்கு தேவை உள்ளதோ, எங்கு இடம் உள்ளதோ அந்தந்தப் பகுதிகளுக்கு மருத்துவமனைகள் மாற்றப்பட்டன. அந்த நேரத்தில் வைத்தியர் கதிர்ச்செல்வன் அவர்களே எமக்கு வழிகாட்டியாக இருந்து எமது மருத்துவமனை மாற்றப்படவேண்டிய இடங்களை குறிப்பிட்டிருந்தார். நட்டாங்கண்டல் மருத்துவமனை இடம்பெயர்ந்த வழியைப் பார்த்தால்,


தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவர் நா.வண்ணனன்.

நட்டாங்கண்டல் பகுதியில் இருந்து நாங்கள் மல்லாவிக்கு வந்தோம். மல்லாவியில் இருந்து புத்துவெட்டுவானுக்கு போனோம். அங்கும் சில நாட்கள்தான் இருக்கமுடிந்தன. பல மருத்துவமனைகளும் இடம்பெயர்ந்து நெருக்கமாக இருந்ததனால், தொடர்ந்து சற்றுத்தொலைவில் உள்ள உடையார்கட்டுப் பகுதிக்கு மருத்துவமனையை மாற்றுகின்றோம். ஏற்கனவே உடையார்கட்டுப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்கிய இடத்தில் மருத்துவமனையை இயக்கினோம். அதற்கு பக்கத்தில் வனவளபாதுகாப்பு பிரிவின் மரக்காலை இருந்தது. அதனையும் எடுத்து, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவிகளுடன் பல கொட்டகைகளை அமைத்து, பெரியவைத்திய சாலையாக இயக்கினோம். காயமடைந்தவர்களை பெருமளவில் பராமரிக்கும் நிலையமாக அந்த வைத்திய சாலை உடையார்கட்டுப் பகுதியில் இயங்கியது. அதற்கு வைத்தியர் வரதன் அவர்கள் எமக்கு பல உதவிகளைச்செய்திருந்தார். யுத்தம் உக்கிரமடைய பல மருத்துவமனைகள் விடுபடவேண்டிய நிலை ஏற்படுகின்றது. கிளிநொச்சி மருத்துவமனை விடுபடும்போது அதனுடன் பல மருத்துவமனைகள் விடுபடவேண்டிய நிலைஏற்படுகின்றது. ஒவ்வொரு மருத்துவமனை மாற்றத்தின்போதும் நாங்கள் பல நெருக்கடிகளைச் சந்தித்தோம், நோயாளர்களுக்கான சிகிச்சையும் தாமதமாகவேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஏற்கெனவே திட்டமிடப்பட்ட சத்திர சிகிச்சைக்கு இருந்தவர்கள் கூட இடம்பெயரும் நிலை ஏற்பட்டது. அதுமட்டுமல்லாமல் ஒரு மாவட்ட வைத்தியசாலை என்னும்போது ஒருநாளைக்கு இருபதுக்கு மேற்பட்ட மகப்பேறுகளும் இருக்கும். அங்கே மகப்பேற்றுக்கு அனுமதிக்கப்பட்டவர்களும் இருப்பார்கள். சிசேரியன் என்றுசொல்லப்படுகின்ற மகப்பேற்று சத்திரசிகிச்சைகளும் இருக்கும்.


மாத்தளன் மருத்துவமனை 13.02.2009 இல்

வழமையான நோய்களும் இருக்கும், சின்னப்பிள்ளைகள் என பல நோயாளர்களும் இருப்பார்கள். ஒரு வைத்தியசாலை இடம்மாற்றம் எனும்போது காயமடைந்தவர்களை மட்டும் பார்க்கக்கூடாது. காயமடைந்தவர்களுடன், குறிப்பிடுகின்ற அனைத்து நோயாளர்களும் மாற்றப்படவேண்டிய தேவையும் உள்ளது. அப்படி வைத்தியசாலை பின்னோக்கி கொண்டுசெல்லப்படும்போது, அவசரமாக சத்திர சிகிச்சை செய்யப்படவேண்டியவர்களுக்கு உடன் சத்திரசிகிச்சை செய்யமுடியாத நிலை ஏற்படும். காரணம், சத்திரசிகிச்சை கூடங்களை அமைக்க வேண்டும். அதன்பின்னரே சத்திரசிகிச்சை மேற்கொள்ளமுடியும். அதுவரைக்கும் குறித்த அவசர நோயாளிகளையோ, காயமடைந்தவர்களையோ வைத்து பராமரிப்பதற்கு இடம்தேவைப்படுகின்றது. அவ்வாறானவர்களை இன்னொரு வைத்தியசாலை பொறுப்பெடுக்கவெண்டும். அதற்கென ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் பல உபவைத்தியசாலைகள் இயங்கிவந்துள்ளன. கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை என்று சொன்னால், அதற்கு கீழே ஒன்று இரண்டு வைத்தியசாலை இருந்தது. முல்லைத்தீவு வைத்தியசாலைக்கும் கீழே ஒன்று இரண்டு உப வைத்தியசாலைகள் இருந்தன. அப்படி இருந்ததனால்தான் நாங்கள் பரந்துபட்ட வேலையை எல்லா இடமும் செய்யமுடிந்தது. இல்லை என்றால் ஒரு வைத்தியசாலைக்கு அடிவிழுந்தால் மற்ற வைத்திய சாலையை நாங்கள் இயக்கி இருக்கமுடியாது. அப்படி இல்லாவிட்டால், அடுத்த வைத்தியசாலையை அமைக்கும் வரை நோயாளர்களை பராமரிக்கமுடியாத நிலைக்குப் போயிருப்போம். இதற்கு மருத்துவர்களின் தொய்வில்லாத பணியும் காரணமாக உள்ளது. அங்கு நின்று தமது மருத்துவ பணியைச் செய்த மருத்துவர்கள் அதாவது, ஒரு பொறுப்பு மருத்துவராக இருக்கட்டும், மக்களுக்கு சேவைசெய்கின்ற இடங்களில் இருக்கின்ற மருத்துவர்களாக இருக்கட்டும் அவர்கள் உண்மையில் திறப்படச் செய்தார்கள் என்பதே உண்மையாகும். வைத்தியசாலைகளை இடம்மாற்றும்போது – நோயாளர்களை இன்னொரு வைத்தியசாலைக்கு இடம் மாற்றும்போதும் பல இடர்பாடுகளை பாரதூரமான பிரச்சனைகளை நாங்கள் கணிசமான இடங்களில் சந்தித்தோம்.

உண்மையிலேயே வைத்தியசாலைகள் காயத்துக்காக இயங்கின என்றால் இல்லவே இல்லை. ஒரு மாவட்ட வைத்தியசாலை என்னும்போது வழமையான நோயாளர்கள், திட்டமிடப்பட்ட சத்திரசிகிச்சை நோயாளர்கள் எனப் பலரும் இருப்பார்கள். ஏன் திட்டமிடப்பட்ட சத்திரசிகிச்சை மேற்கொண்டவர்கள் கூட இருந்திருப்பார்கள். ஒரு வைத்தியசாலை இடம்மாற்றப்படும்போது நாங்கள் காயப்பட்டவர்களை மட்டும் பார்க்கமுடியாது. எல்லோரையும்தான் பார்க்கவேண்டும். இது மிகக்கடினமான வேலைதான். ஆனால், இதனை நாங்கள் இலகுவாக மேற்கொண்டோம். எனக்கு நேரடியாக மேலே நின்று செயற்பட்ட வைத்தியர் சிறப்பாக செயற்பட்டவர். அப்படியென்றால் நானும் அதைவிட சிறப்பாக செயற்படவேண்டும் என்ற தேவை உள்ளது. ஒவ்வொரு படிமுறையும் இவ்வாறுதான் ஏற்படுகின்றது. அதுதான் எனக்கு என்றும் அழுத்தமாக இருந்தது. இதனை ஒரு முக்கிய மையமாகக் கூறிப்பிடவிரும்புகின்றேன். ஒருவரை இயக்குவது என்பது முக்கியமான விடயமாக உள்ளது. அதனை இறுதி யுத்தத்தில் நேரடியாகவே அனுபவித்துள்ளேன். எத்தனையோ வழிமுறைகள் இருந்தாலும், மேலே பொறுப்பானவர்கள் அதனை திறம்பட வழிநடத்தினாலே, குறித்த வேலையை சிறப்பாக செய்யமுடியும். நான் எத்தனையோ பேருக்கு வைத்தியம் பார்த்தேன், மருத்துவமனையை இடம் மாற்றினேன் என்பதைவிட என்னை வழிநடத்தியவர்களின் வழிகாட்டலே முக்கியம் பெறுகின்றது.

***வைத்தியசாலைகளை இலக்குவைத்து கடும்தாக்குதல்கள் இடம்பெற்றமை குறித்து குறிப்பிடுங்கள்?***

2009 தை முதலாம் நாள் என்று நினைக்கின்றேன்.

தொடர்ச்சி 12ம் பக்கம்

# இனப்படுகொலையை திட்டமிட்டு...

உடையார்கட்டுப் பகுதியில் தொடர்ந்து வைத்தியசாலையை வைத்திருக்கமுடியாத நிலை ஏற்படுகின்றது. அந்தளவிற்கு அடிவிழுகின்றது. அதற்கு முன்னர்தான் சுதந்திரபுரம் பகுதியில் பாதுகாப்பு வலயத்துக்குள் கடும் எறிகணைத் தாக்குதல் இடம்பெற்று எமது மருத்துவமனை காயங்களுடன் நிரம்பியிருக்கின்றது. மேலதிகமானவர்களை அனுப்புவதற்கு நோயாளர் காவுவண்டி வசதிகள் அப்போது இருக்கின்றன. மேலதிகமான காயங்களை புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். அந்தநேரத்தில் பெரிய காயமடைந்தவர்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளும் அனுப்பிவைக்கும் வசதியும் இருந்தது. அதற்குப் பின்னர் அந்த வசதி இல்லை. சின்னக்காயங்களை நாங்கள் செய்துகொண்டு பெரிய காயங்களை அனுப்பிக்கொண்டும் இருந்தோம். சிறுசத்திரசிகிச்சை மற்றும் கிருமித்தொற்றுக் கெதிராக செய்யக் கூடிய சிகிச்சைகளை நாங்கள் செய்துகொண்டோம். இந்த நிலைமையில் எமது வைத்தியசாலையில் மகப்பேறுகளும் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. இதற்குரிய மருத்துவ தாதிகளும் இருந்தார்கள். இந்த நேரத்தில் உடையார்கட்டுப் பகுதிக்கு அடிவிழுகின்றது. எமது வைத்தியசாலைக்கும் அடிவிழுகின்றது. எமது வைத்தியசாலை இடம்பெயர்வதற்கு முன்னர் ஒரு 10 நாட்களுக்கு முன்னர் என நினைக்கின்றேன். பரவலாக ஒரு தாக்குதல் நடக்கின்றது. இயங்கிக் கொண்டிருந்த அனைத்து வைத்தியசாலைகளையும் இலக்குவைத்து. ஆனால், எமது உடையார்கட்டு வைத்தியசாலை மயிரிழையில் தப்புகின்றது. பெரிதாக இயங்கிக் கொண்டிருந்த முல்லைத்தீவு வைத்தியசாலைக்கும் அடிவிழுகின்றது. புதுக்குடியிருப்பு மற்றும் சிறிய சிறிய வைத்தியசாலைகள் எல்லாவற்றுக்கும் அடிவிழுகின்றது.

திடீரென பெரிய சத்திரசிகிச்சை செய்யக்கூடிய வைத்தியசாலைக்கு அடிவிழுகின்றது. அதனால் காயங்களை பொறுப்பெடுக்கவேண்டிய தேவை எங்களுக்கு வருகின்றது. அதற்கு பெரிய இடமும் அவசியமாகின்றது. அது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது. சுதந்திரபுர பாதுகாப்பு வலயத் தாக்குதலுடன் வைத்தியசாலைகள் மீதான தாக்குதலும் இடம்பெறுகின்றது. இவ்வாறான மருத்துவமனைத் தாக்குதலில் மயக்கமருந்து கொடுத்து சத்திரசிகிச்சை மேற்கொள்வதில் சிறப்பாக செயற்படும் அல்லி என்ற மருத்துவ போராளி வீரச்சாவடைகின்றார். ஒருவருக்கு மயக்க மருந்து கொடுத்து சந்திரசிகிச்சை மேற்கொண்ட நிலையிலேயே அவர் காயமடைந்து சாவடைகின்றார். அதேபோன்ற பல சம்பவங்கள் பின்னரும் நடக்கின்றன.

உடையார் கட்டுப்பகுதியில் சுமார் ஒருமாதகாலம் நின்றுபிடித்து, அங்கிருந்தும் இடம்பெயரும் நிலை ஏற்படுகின்றது. கொஞ்சம் தள்ளிப்போடுவோம் என்று நினைத்து மாத்தளன் பாடசாலையைத் தெரிவுசெய்கின்றோம். அப்போது முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு.பார்த்தீபன் அவர்கள், மக்களுக்கு பல உதவிகளைச் செய்திருந்தார். மாத்தளன் பாடசாலையில் ஏற்கெனவே இருந்த மக்களுக்கு தற்காலிக கூடாரங்களை வழங்கிவிட்டு எமக்கு வைத்தியசாலை அமைப்பதற்கு ஏற்பாடுசெய்து தந்தார். நாங்கள் தை முதலாம் நாள் அங்கு இரவோடு இரவாக வைத்திய சாலையை அமைத்து, சத்திரசிகிச்சைக் கூடங்களை அமைத்து வைத்தியத்தை ஆரம்பித்தோம். திறந்த வெளியில் கூட சத்திரசிக்கிச்சைகளை மேற்கொள்ளவேண்டிய நிலை இருந்தது. இந்த நிலையில் புதுக்குடியிருப்புப் பகுதியில் கடும் சண்டை இடம்பெறுகின்றது. ஆனால், ஒன்று இரண்டு காயங்கள் தான் வருகின்றது. பெருமளவில் காயங்கள் அங்கிருந்து வரவில்லை. புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் இருந்து ஒரு மருத்துவர் வருகின்றார். அங்கு சரியான எறிகணைத்தாக்குதல் இடம்பெறுவதால், வைத்தியர் கதிர்ச்செல்வன் அனுப்பிவைத்ததாகக் கூறுகின்றார். பின்னர் அதிகாலை 5.30 மணிக்கு நான் எனது வாகனத்தில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குச் சென்று பார்த்தேன். அங்கே கடும் எறிகணைத்தாக்குதலால் சத்திரசிகிச்சைக் கூடம் எல்லாம் கடும் சேதத்திற்குள்ளாகி, அங்கே சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நிலையிலேயே பலரும் இறந்து கிடக்கின்றனர். மாசி மாதம் இரண்டாம் நாள் 2009 அன்றுதான் அந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது. அதுவும் ஒரு இனப்படுகொலைதான். காயப்பட்டவர்கள் பலரும் மேலும் காயமடைகின்றனர். அந்த நேரத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அதன் வாகனங்கள் எல்லாம் புதுக்குடியிருப்பில் இருக்கின்றன. வைத்தியசாலையின் சகல கட்டடங்களிலும் ஐசிஆர்சி எழுத்து பொறிக்கப்பட்டுள்ளது. இரவோடு இரவாக அவர்கள் தாங்கள் இந்த இடத்தில் இருக்கின்றோம். எங்களுக்கு அடிக்கவேண்டாம் என்று அறிவித்துக்கொண்டுதான் இருந்தார்கள். ஆனால், அடியும் விழுந்துகொண்டுதான் இருந்தது. திட்டமிட்ட இனப்படுகொலை என்பது எந்த சர்வதேசம் என்ன எவர் வந்தாலும் அதனை சிறீலங்கா அரசாங்கம் செய்துகாட்டிவிட்டது. தடை செய்யப்பட்ட கொத்துக்குண்டுகள், இரசாயனக்குண்டுகள் அனைத்தும் எமது மக்களின் மீது போடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இதற்கு புதுக்குடியிருப்பு முதலாவது எடுத்துக்காட்டு. புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் வைத்தியர் கதிர்ச்செல்வன், வைத்தியர் வரதராஜா, வைத்தியர் பிறைற்றன் போன்ற பல வைத்தியர்கள் அங்கு இருக்கின்றார்கள். என்னைக் கண்டவுடன், இரவு முழுக்க நித்திரைகொள்ளவில்லை என சலிப்போடு கூறுகின் றார்கள்.

காயமடைந்தவர்கள் எல்லாம் அப்படியே கிடக்கின்றார்கள். நூற்றுக்கணக்கான காயம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றது. எதுவுமே செய்யமுடியாத நிலை இருந்தது. அந்த இடத்தைப் பார்த்ததும் நான் ஒரு முடிவுக்கு வருகின்றேன். இனி இந்த வைத்தியசாலையை இயக்கமுடியாது.



நீங்கள் எல்லோரும் வெளிக்கிடுங்கோ என்று கூறுகின்றேன். எல்லோரும் தமது வாகனங்களை எடுத்துக்கொண்டு வெளிக்கிட ஆயத்தமாகின்றனர். நான் முக்கியமான பொருட்களை எடுத்தேன். அதாவது சத்திரசிகிச்சை செய்யும் உபகரணம். இது இருந்தால் பெரும் உதவியாக இருக்கும். ஒரு வயிற்றைத் திறந்து சத்திரசிகிச்சை செய்யவேண்டும் என்றால், சிலபொருட்கள் இல்லாமல் செய்யமுடியாது. அந்த உபகரணங்கள்

**சிரமப்பட்டு உள்ளே சென்ற நான், ஒரு போர்வையை எடுத்து சத்திரசிகிச்சை உபகரணங்களை கொட்டி அள்ளிக் கட்டிக்கொண்டு ஏனைய அத்தியாவசிய மருந்துகளையும் எடுத்துக்கொண்டு வெளிக்கிட்டோம். நாங்கள் வெளிக்கிட்டதும் அங்கே இருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரும் என்ன செய்வது என்று தெரியாமலே இருந்தார்கள். அவர்களும் தமது பொருட்களை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு கொடியைக் கட்டிக்கொண்டு எமக்குப்பின்னால் வந்தார்கள்.**

சிறிய வைத்தியசாலைகளில் இருக்காது. ஒரு முக்கியமான வைத்தியசாலைக்கு அடி விழுந்துவிட்டது. சத்திரசிகிச்சை கூடத்துக்குள் போகமுடியவில்லை. கூரை எல்லாம் உடைந்து தொங்கிக்கொண்டிருந்தது. கட்டிலில் உடல், தரையில் உடல் என எங்கும் உயிரற்ற உடல்கள் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன. சிரமப்பட்டு உள்ளே சென்ற நான், ஒரு போர்வையை எடுத்து சத்திரசிகிச்சை உபகரணங்களை கொட்டி அள்ளிக்கட்டிக் கொண்டு ஏனைய அத்தியாவசிய மருந்துகளையும் எடுத்துக் கொண்டு வெளிக்கிட்டோம். நாங்கள் வெளிக்கிட்டதும் அங்கே இருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும் என்ன செய்வது என்று தெரியாமலே இருந்தார்கள். அவர்களும் தமது பொருட்களை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு கொடியைக் கட்டிக்கொண்டு எமக்குப்பின்னால் வந்தார்கள். மாத்தளன் வைத்தியசாலையுடன் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையும் இணைந்துகொள்கின்றது. இறுதியில் அது ஒரு பெரிய வைத்தியசாலையாக இயங்குகின்றது. அந்த இரவில் மட்டும் 150 முதல் 200 வரையான காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. அந்த சம்பவத்தில் இரண்டு இரவுகள் நான் நித்திரை கொள்ளவில்லை...

*(மேலும் பல அனுபவங்களுடன் அடுத்த இதழில் நிறைவுறும்)*

## தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு உயிரிழப்புக்களுக்குப் பின்பும் ஆலையை மூட மறுப்பு

தூத்துக்குடி ஸ்டெர்லைட் தாமிர உருக்காலைக்கு எதிரான போராட்டம் 13 உயிர்களைப் பலியெடுத்து 60ற்கும் மேற்பட்டவர்களை படுகாயப்படுத்தியிருக்கின்றது. இந்த உருக்காலைக்கு எதிரான போராட்டம் என்பது இன்று, நேற்று ஏற்பட்டது அல்ல. இதற்கு முன்பும் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக போராட்டங்கள்



நடந்துள்ளன. கால் நூற்றாண்டை எட்டவிருக்கும் இந்தப் போராட்டம் உயிரிழப்பு அளவுக்கு சென்றதில்லை. ஆலையின் கட்டுமானப் பணிகள் நடைபெற்றபோது போராட்டம் தீவிரமடைந்தது. காலப்போக்கில் நீர்த்துவிட்டது. ஆலையும் 1996ல் செயல்படத் தொடங்கியது. அவ்வப்போது சில அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் போராட்டம் நடத்தியதுண்டு. கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக ஆலைக்கு எதிராக பெரிய அளவிலான களப் போராட்டம் எதுவும் நடைபெறவில்லை. ஆனால் சட்டப் போராட்டங்கள் தொடர்ந்து வந்தன. இந்த நிலையில் இப்போது திடீரென போராட்டம் தீவிரமாகி உயிர்ப்பலி வரை சென்றுள்ளது.

ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட வலியுறுத்தி அப்பகுதியிலுள்ள கிராம மக்கள் கடந்த பெப்ரவரி முதல் தொடர்ந்து 100 நாள்களாக போராட்டம் நடத்தினர். நூறாவது நாளில் ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிடப் போவதாக அறிவித்தனர். அந்த நாளில்தான் வன்முறை வெடித்து 13 பேர் பலியாகியுள்ளனர்.

வேண்டுமென்றே அத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. வெளியான காணொளியொன்றின் அடிப்படையில், காவல்துறை வாகனமொன்றுக்கு மேல் ஏறும் இரண்டு காவல்துறையினர், ஆர்ப்பாட்டக்காரர்களை இலக்குவைத்துச் சுடுவது காண்பிக்கப்படுகிறது. அதில், முதலில் ஒருவர் மேலே ஏறி, துப்பாக்கிச் சூட்டை நடத்திய பின்னர், இன்னொருவர் மேலே ஏறுகிறார்.




இரண்டாவதாக ஏறியவரிடம் துப்பாக்கியை அவர் கொடுத்த பின்னர், 'ஒருத்தனாவது சாவணும்டா..' என அவர் சொல்வது, காணொளியில் பதிவாகியுள்ளது. ஏற்கெனவே, இத்தாக்குதல்கள் தொடர்பாக எதிர்ப்புகளைச் சந்தித்த தமிழ்நாட்டு அரசாங்கத்துக்கும் இவர்களுக்கு துணைபோகும் மத்திய பா.ஜ.க. ஆட்சியாளர்களுக்கும் இது பெரும் தலையிடியாக மாறியுள்ளது.

இத் தாக்குதலைக் கடுமையாகக் கண்டித்துள்ள கொங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி, அதனை ஈவிரக்கமற்ற அரச பயங்கரவாதத்திற்கான உதாரணம் என வர்ணித்துள்ளார். அநீதிக்கு எதிராக போராடிய மக்களே தூத்துக்குடியில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என ராகுல்காந்தி தெரிவித்துள்ளார். இதேவேளை, இந்தத் தாக்குதலுக்கு எதிராக உலகெங்கும் வாழும் தமிழர்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். தமிழர் தாயகத்தின் வடக்கு, கிழக்கு பகுதிகள் எங்கும் துப்பாக்கி சூட்டில் கொல்லப்பட்ட மக்களுக்கு நீதிகோரி கவனயீர்ப்பு போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, தூத்துக்குடியில் கடந்த 100 நாள்களாக கிராம மக்களை தூண்டி கொதிநிலைக்கு கொண்டு வந்து இப்போது அவர்களை பொங்கி எழச் செய்தது சில தீவிரவாத இயக்கங்கள் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகின்றது.முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவுக்கு பிறகு தமிழ்நாட்டில் இடதுசாரி தீவிரவாத இயக்கங்களின் செயல்பாடுகள் அதிகரித்து வருகின்றன என்று குற்றம்சாட்டியுள்ள இவர்கள், வலுவான அரசியல் தலைமை இல்லாமை, புரையோடியுள்ள இலஞ்சம், வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்கள் பெருக்கம், பாதுகாப்பு படையினரின் கண்காணிப்புக் குறைபாடு ஆகியவை இந்த அமைப்புகளின் செயல்பாடுகளுக்கு இங்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றன என்றும் கடந்த

தொடர்ச்சி 18ம் பக்கம்

ஒரு கதை

## பட்டியலில் முதல் பெயர்!

முன்னொரு காலத்தில் அபுபென் ஆதம் என்ற பெரியவர் அரபு நாட்டில் வாழ்ந்து வந்தார். அவர் எல்லோரிடமும் இனிமையாகவும் அன்பாகவும் பேசுவார். மற்றவர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வார். ஓய்வு கிடைக்கும் நேரத்திலெல்லாம் அவர் இறைவனைத் தொழுவார். ஒருநாள் இரவு அவர் உறங்கிக் கொண்டிருந்தார். அவர் கனவில் தேவதை ஒன்று தன் கையிலிருந்த புத்தகத்தில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தது. ஆதம் வியப்படைந்தார்.



'என்ன எழுதுகிறீர்கள்?' என்று கேட்டார்.

'கடவுளை விரும்புகிறவர் பெயரை எல்லாம் இந்தப் புத்தகத்தில் பதிவு செய்கிறேன்...' என்றது தேவதை.

'அந்தப் புத்தகத்தில் என் பெயர் உள்ளதா...? இருந்தால் எத்தனையாவது பெயராக உள்ளது?' என்று கேட்டார் ஆதம்.

'உன் பெயர் இடம் பெறவில்லையே...!' என்று பதில் சொன்னது தேவதை.

தூக்கம் கலைந்து எழுந்த ஆதமால் தாம் கண்ட கனவை மறக்க முடியவில்லை. இறைவனை நேசிக்கிறவர் பட்டியலில் தம் பெயர் இடம் பெறவில்லையே என்று மிகவும் மனம் வருந்தினார். ஆனால் எப்போதும்போல் எல்லோரிடமும் அன்புடனும் கனிவுடனும் இருந்தார்.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

ஒரு விதை

## இந்த மாவீரரை இழந்து 30 ஆண்டுகள்...

மணலாற்றுக் காட்டைச் சுற்றி தலை வரை அழிக்கும் நோக்குடன் 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட இந்தியப் படையினர் குவித்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த மணலாற்று முற்றுகையின் பிரதான இந்தியத் தளம் நித்திகைக்குளத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

இந்திய இராணுவத்தை காட்டுக்குள் நுழைய விடாமல் தடுப்பதில் தமிழீழத் தேசியத் தலைவரைக் காப்பதில் முன்னின்று உழைத்த போராளிகளில் கப்டன் சுபேசனும் ஒருவர். இந்திய இராணுவம் கால் வைக்கும் இடமெங்கும் மிதிவெடிகளைப் புதைத்துவைத்து அவர்களைக் காட்டுக்குள் நுழையவிடாமல் தடுத்த சுபேசனை ஒரு மிதி வெடியே காயப் படுத்தியது. தன்னால் ஏனைய போராளிகளுக்கு ஆபத்து வந்துவிடக்கூடாது என்பதற்காக தன்னைக் காவிச்செல்ல அனுமதிக்காமல் சயனைட் உட்கொண்டு வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.



**கப்டன் சுபேசன்**
பேரம்பலம் கிருஷ்ணபிள்ளை புலோலி
யாழ்ப்பாணம்
15.12.1966 - 06.06.1988

ஒரு குறள்

அறத்துப்பால் – அடக்கமுடைமை

ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.



ஒழுக்கம் உடையவராக வாழ்வதுதான் உயர்ந்த குடிப்பிறப்புக்கு எடுத்துக் காட்டாகும். ஒழுக்கம் தவறுகிறவர்கள் யாராயினும் அவர்கள் இழிந்த குடியில் பிறந்தவர்களாகவே கருதப்படுவர்.

ஒரு மருத்துவம்

## விதைகளின் மருத்துவ குணங்கள்

காய்கறி மற்றும் பழங்கள் மட்டுமல்ல அதன் விதைகளும் உடலுக்கு மிகவும் ஆரோக்கியமானவை. அத்தகைய காய்கறி மற்றும் பழங்களின் விதைகளால், நமது உடலில் ஏற்படும் பல நோய்களைத் தடுக்கலாம். எனவே இனிமேல் காய்கறி மற்றும் பழங்களை சாப்பிடும் போது, அதன் விதைகளையும் கண்டிப்பாக சாப்பிடுங்கள்.

### பப்பாளி விதைகள்



அனைவருக்கும் பப்பாளியின் நன்மைகளைப் பற்றி நன்கு தெரியும். ஆனால் அதன் விதைகளில் எத்தனை சத்துக்கள் உள்ளன என்பது தெரியாது. எப்படி பப்பாளியின் சதையில் நிறைய சத்துக்கள் உள்ளதோ, அதேப்போல் அதன் விதைகளிலும் உள்ளது. பப்பாளியின் விதைகளை சாப்பிட்டால், சிறுநீரகத்தில் இருக்கும் டாக்ஸின்கள் எனப்படும் கழிவுகள் அனைத்தும் வெளியேறுவதோடு, செரிமானத்தை அதிகரிக்கிறது. அதிலும் வாயுத் தொல்லையால் பாதிக்கப்பட்டவர்கள், ஒரு கரண்டி பாப்பாளியின் விதையை சாப்பிட்டால் சரியாகி விடும். வேண்டுமென்றால் அதனை காய வைத்து, உணவுப் பொருட்களில் பயன்படுத்தலாம். உடல் நலத்திற்கு மட்டும் இது நல்லதல்ல, அழகிற்கும் தான் நல்லது.

ஒரு தகவல்

## முயல்களின் தீவு!

இரண்டாம் உலகப் போர் நடந்த போது நச்சு வாயு உற்பத்தி செய்யும் தீவாக இருந்தது ஜப்பானில் உள்ள ஒகுனோஷிமா. அந்தத் தீவு இன்று முயல்களின் சரணாலயமாக மாறி இருக்கிறது. அதுமட்டுமல்ல, ஒகுனோஷிமா என்ற தீவின் பெயர் ரேபிட் ஐலண்ட் (முயல் தீவு) என்றும் மாறிவிட்டது. 1929 முதல் 1945ம் ஆண்டு வரை இந்த இடம், நச்சு வாயு தயாரிக்கக்கூடிய இரகசிய இடமாக இருந்தது. இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்துவதற்காக 6 ஆயிரம் தொன் நச்சு வாயு இராணுவத்தினரால் இங்கே உற்பத்தி செய்யப்பட்டது. வாயுவை பரிசோதனை செய்வதற்காக முயல்களை இங்கே கொண்டு வந்து, வளர்த்துள்ளனர். உலகப் போர் முடிந்ததும் எல்லாம் தலை கீழாக மாறியது. இங்குள்ள கட்டடங்கள் இடித்து தரைமட்டமாக்கப் பட்டன. அங்கே இருந்த சில குடும்பங்களையும் வெளியே அனுப்பிவிட்டனர்.



ஜப்பானின் வரைப்படத்தில் இருந்தே ஒகுனோஷியா தீவு மாயமாகியிருந்தது. ஆனால், முயல்கள் மட்டும் தொடர்ந்து அந்தத் தீவிலேயே இருந்தன என்கிறார்கள் சிலர். முயல்கள் இந்தத் தீவுக்கு எப்படி வந்தன என்பதற்கான உண்மையான காரணம் இதுவரை தெரியவில்லை. ஆனால் இன்று முயல்கள் ஒகுனோஷியா தீவை ஆட்சி செய்கின்றன. முயல்களின் அழகை இரசிப்பதற்காகவே ஏராளமான சுற்றுலாப் பயணிகள் அங்கு செல்கின்றார்கள். தீவில் இறங்கி, முயல்கள் இருக்கும் பகுதிக்குள் நுழைந்தால் மனிதர்களை அவை சூழ்ந்துகொண்டு

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

ஒரு பொன்மொழி

நிகழ்காலத்தை நாம் இழப்பதால்
நாம் எல்லா காலத்தையும் இழக்கிறோம்.
-இங்கிலாந்து

ஒரு பழமொழி

காட்டை வெட்டிச் சாய்த்தவனுக்குக்
கம்பு பிடுங்கப் பயமா?

ஒரு வரலாறு

## ஓட்ஸ் உணவு!



ஸ்கொட்லாந்து நாட்டைச் சேர்ந்த மில்லர் என்பவர் சென்னை கிறிஸ்துவக் கல்லூரியின் புகழ்மிக்க முதல்வராக இருந்தவர். சாதாரணமாக ஆங்கிலேயர்களுக்கு ஸ்கொட்லாந்துக் காரர்கள் என்றால் இளக்காரம்.

ஓர் ஆங்கிலேயர் மில்லரிடம் "நாங்கள் குதிரைக்கு உணவாகப் போடும் ஓட்ஸ்தான் உங்கள் நாட்டில் மனிதர்கள் சாப்பிடுகிறார்களாமே?" என்று கேட்டார்.

அதற்கு மில்லர் "ஆமாம்.. அதனால்தான் உங்கள் நாட்டுக் குதிரைகளும் எங்கள் நாட்டு மனிதர்களும் சிறப்பாகச் செயல்பட முடிகிறது" என்றார். ஆங்கிலேயர் தலைகுனிந்தார்.

ஒரு பழமொழியும் விளக்கமும்

## களவும் கற்று மற

'களவும் கவறு மற.' (கவறு மற = கவறும் + அற் அற – தவிர்) என்பதுதான் உண்மையான பழமொழி. அந்தப் பழமொழியைத் தலைகீழாக மாற்றும் அளவிற்கு களவும் கற்று மற என்றாக அது மருவி விட்டது. களவு எடுத்துவிட்டு பின்னர் அதனை மறந்து விடவேண்டும் என்பதுபோல் இதன் அர்த்தம் தலைகீழாக மாறிவிட்டது.

அக்காலத்திலும் சரி இக்காலத்திலும் சரி செய்யக்கூடாத தவறுகள் பட்டியலில் 'திருட்டு, சூது' ஆகியவை அடங்கும். இந்த இரண்டு தவறுகளும் ஒரு மனிதனை எந்த நிலைக்கு வேண்டுமானாலும் கொண்டுசெல்லும். திருட்டு என்பது பிறருக்கு உரிமை உடைய பொருளை அவருக்குத் தெரியாமல் தான் எடுத்துக் கொள்வது ஆகும். சூது என்பது பிறருக்குச் சொந்தமான பொருளை தந்திரத்தால் ஏமாற்றித் தான் கொள்வதாகும். தாயக்கட்டைகளை உருட்டி விளையாடும் இந்த விளையாட்டிற்கு 'சூதாட்டம்' என்று பெயர். இந்த தந்திரமான விளையாட்டின் அடிப்படையில் தானே 'மகாபாரதம்' உருவானது. துரியோதனன் துகில் உரிப்பதற்கும் பாஞ்சாலி சபதம் செய்ததற்கும் அடிப்படையே இந்த விளையாட்டுத் தானே.



இதைப் பற்றி 'சூது' என்னும் தலைப்பில் பத்து குறள்களில் மிக அருமையாக விளக்கியுள்ளார் திருவள்ளுவர். சூது விளையாடியவனின் நிலை பற்றி ஒரு குறளில் வள்ளுவர் இவ்வாறு கூறுகிறார்.

கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார் (குறள் எண்: 935)

இங்கே 'கவறு' என்பது 'சூதாடும் கருவியையும்', 'கழகம்' என்பது 'சூதாடும் இடத்தையும்' குறிக்கும்.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# வடகொரிய தூதரகத்தில்...

2003ஆம் ஆண்டு பங்குனி மாதம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை விட்டு கே.பியைத் தமிழீழத் தேசியத் தலைவர் விலக்கி வைப்பதற்கு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னரே எந்த ஆயுதக் கப்பல்களையும் வன்னிக்கு கே.பி. அனுப்பி வைக்கவில்லை. இது பலருக்குத் தெரியாது. ஆனால் இது பற்றிய தரவுகள் மறுமுனையில் பேசியவருக்கு நன்கு தெரிந்திருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொள்வனவுக்குப் பொறுப்பாகக் கே.பி அவர்கள் விளங்கிய காலப்பகுதியில் அவர் வசித்து வந்த தென்கிழக்காசிய நாட்டில் இயங்கிய வடகொரிய தூதுரகத்தில் பணிபுரிந்த பெண் அதிகாரி ஒருவரின் தொடர்பு அவருக்குக் கிடைத்திருந்தது. இந்தப் பெண்மணி வெளித்தோற்றத்திற்கு வடகொரியத் தூதரகத்தின் நிர்வாகநிலை அதிகாரியாகத் தென்பட்ட பொழுதும், வடகொரியாவின் ஆயுத விற்பனை நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் ஒருவராகவே அவர் விளங்கி வந்தார்.

1999ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை இந்த அதிகாரியின் அனுசரணை ஊடாக வடகொரியாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களையே கே.பி வன்னிக்கு அனுப்பி வந்தார்.

**கையாலாகாத நிலையில் இருந்த கே.பியைப் பற்றி சர்வே கூறிய அம்புலிமாமா கதை மறுமுனையில் இருந்தவரை சீற்றத்தில் ஆழ்த்தியது.**

அரசியலில் எப்பொழுதும் எதுவும் நடக்கலாம் என்று கூறுவது கே.பியின் ஆயுதக் கொள்வனவு விடயத்திலும் நடந்தது. 11.09.2001 அன்று நியூயோர்க் இரட்டைக் கோபுரங்கள் மீதும், பென்ரகன் கூட்டுப் படைத் தலைமையகம் மீதும் அல்கைடா பயங்கரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலை அடுத்து பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற கோதாவில் அனைத்துலக நடவடிக்கை ஒன்றை அன்றைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஸ் அவர்கள் தொடங்கினார். அப்பொழுது அவர் பயங்கரவாதத்திற்கு எதிரான தமது யுத்தம் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்கள், மற்றும் ஆயுதம் தாங்கிய இயக்கங்களுக்கு எதிராக மட்டுமன்றி, இவ்வாறான அமைப்புக்களுக்கு ஆயுதங்களை விற்பனை செய்யும் ஈராக், ஈரான், வடகொரியா ஆகியவற்றிற்கும் விரிவுபடுத்தப்படும் என்றும் எச்சரித்தார்.

இதனால் பதற்றமடைந்த அன்றைய வடகொரிய அதிபர் கிம் ஜொங் இல் (தற்போதைய வடகொரிய அதிபர் கிம் ஜொங் உண் அவர்களின் தந்தை) உடனடியாகவே ஆயுதம் தாங்கிய அமைப்புக்களுக்கான ஆயுத விற்பனைகளை இடைநிறுத்துவதற்கு உத்தரவு பிறப்பித்தார். இதனையடுத்து கே.பி அவர்களுடான தொடர்புகளை வடகொரிய தூதரகத்தின் நிர்வாகநிலை அதிகாரி துண்டிக்க, கே.பியின் ஆயுத விநியோகக் கிணறு வற்றிப் போனது. ஆப்கானிஸ்தான் தொடக்கம் ஆர்ஜன்ரீனா வரை அலைந்து திரிந்து ஆயுதக் கொள்வனவுகளில் கே.பி ஈடுபடுகின்றார் என்றும், பிளாஸ்ரிக் சேர்ஜரி (நெகிழிச் சத்திரச் சிகிச்சை) செய்து அடிக்கடி தனது முகத்தை அவர் மாற்றிக் கொள்கின்றார் என்றும் சிங்கள-இந்திய ஊடகங்கள் கற்பனைக் கதைகளை எழுதிக் கொண்டிருக்க, கே.பியோ வடகொரிய தூதரகத்தை வட்டமிட்ட வண்ணம் இருந்தார். கடைசியில் தூதரக வளாகத்திற்குள் நுழைந்து அங்கு வரவேற்பறையில் பணிபுரிந்து கொண்டிருந்த பெண் அலுவலரிடம் தனது நிலையைக் கூறி மன்றாட்டமாகக் கூட கே.பி பேசிப் பார்த்தார். ஆனால் வடகொரிய தூதுரக அதிகாரியோ இம்மியளவு கூட மசியவில்லை.

கே.பியின் இந்தக் கையாலாகாத்தனம் களமுனையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. தீச்சுவாலை எதிர்ச்சமரின் விளைவாக ஏறத்தாள முதுகெலும்பு முறிந்தது போன்ற நிலையில் காணப்பட்ட சிங்களப் படைகளுக்கு எதிராக எந்தவொரு வலிந்த தாக்குதலையும் மேற்கொள்ள முடியாத நிலையையே கே.பியின் கையாலாகத்தனம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஏற்படுத்தியிருந்தது.

சிங்கள தேசத்தின் பிரதம மந்திரியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற மறுகணமே நல்லெண்ண சமிக்ஞையாக ஒருதலைப்பட்சமான முறையிலான போர்நிறுத்தத்தை இரண்டு மாதங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரகடனம் செய்தமைக்கும், அதனைத் தொடர்ந்து 2002ஆம் ஆண்டு மாசி மாதம் 22ஆம் நாளன்று ரணில் அரசாங்கத்துடன் போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்படுத்திக் கொண்டதற்கும் கே.பியிடம் இருந்து ஆயுதங்கள் எவையும் வந்து சேராததே காரணமாகும்.

இவ்வாறு 11.09.2001 முதல் 2003ஆம் ஆண்டு பங்குனி மாதம் பதவி நீக்கம் செய்யப்படும் வரை வன்னிக்கு ஆயுதங்களை அனுப்பி வைக்க முடியாது கையாலாகாத நிலையில் இருந்த கே.பியைப் பற்றி சர்வே கூறிய அம்புலிமாமா கதை மறுமுனையில் இருந்தவரை சீற்றத்தில் ஆழ்த்தியது.

(மடையுடைப்புத் தொடரும்)

# இலங்கையில் இயங்கிய குழந்தைகள் பண்ணை

## சுவிட்சர்லாந்துக்கு விற்கப்பட்ட 11.000 குழந்தைகள்!

1980களில் இலங்கையில் இயங்கிய குழந்தைகள் பண்ணை குறித்தும் அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட குழந்தைகள் குறித்து தகவலொன்றை சுவிச்சர்லாந்து தொலைக்காட்சி வெளிச்சத்திற்கு கொண்டுவந்துள்ளது.

1980ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் 11 ஆயிரம் குழந்தைகள் இலங்கையிலிருந்து சுவிட்சர்லாந்திற்கு தத்தெடுக்கப்பட்டும் விற்கப்பட்டும் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. குழந்தைகளை வாங்கி அவற்றை போலி கடவுச்சீட்டுக்கள் மற்றும் பெயர்களில் சட்டத்திற்கு உட்பட்டும் சட்டத்திற்குப் புறம்பாகவும் இந்த விற்பனை கொடிகட்டிப் பறந்துள்ளது. சட்டச் சிக்கல்களை எதிர்கொள்ளாமல் குழந்தைகளை வெளிநாடுகளுக்கு கொண்டு செல்வதற்காக குழந்தைகளின் தாயாக பலர் பணம் கொடுத்தும் நடிக்க வைக்கப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக நெதர்லாந்து போன்ற நாடுகளில் இருந்து தத்தெடுத்து வளர்க்கப்பட்ட சிலர் தங்கள் தாய் தந்தையைத் தேடி இலங்கை சென்று அவர்களைக் கண்டுபிடித்திருந்த நிலையில், தற்போது சுமார் 11 ஆயிரம் குழந்தைகள் சுவிச்சர்லாந்தில் கொண்டுவந்து வளர்க்கப்பட்ட தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த காலப்பகுதியில் இலங்கை வந்த மேற்கத்தேய தம்பதியினரால் இந்தக் குழந்தைகள் தத்தெடுக்கப்பட்டு சுவிட்சர்லாந்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக அந்தத் தொலைக்காட்சி ஊடகம் பல்வேறு ஆதாரங்களுடன் தகவல் வெளியிட்டுள்ளது.

குறித்த குழந்தைகள் தற்போது இளமைப்பருவத்தை அடைந்துள்ளனர். இந்த நிலையில், சட்ட விரோதமாக கொண்டு செல்லப்பட்டுள்ளனரா என்பது தொடர்பிலான தேடலை அவர்கள் ஆரம்பித்துள்ளதாகவும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், அவர்கள் தமது உண்மையான இலங்கைப் பெற்றோர் மற்றும் முன்னைய வசிப்பிடம் குறித்த தகவல்களை தேடவும் ஆரம்பித்துள்ளனர். தங்கள் தாய், தந்தை உறவுகள் குறித்து அறியும் இவர்களின் தீவிரமான தேடல்களுக்கு



சிறீலங்கா அரசும் ஒத்துழைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதனால், இவ்வாறு தேடுபவர்களுக்கான தனியான அலுவலகம் ஒன்றை அமைக்கவும் சிறீலங்கா திட்டமிட்டுள்ளதாக சிறீலங்காவின் சுகாதாரத்துறை அமைச்சர் செனவிரட்ண அந்த சுவிச்சர்லாந்து தொலைக்காட்சி ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியில் உறுதி அளித்துள்ளார். பெற்றோர்கள் அவர்கள் தங்கள் பிள்ளைகள் இல்லையென்று மறுத்தாலும் மரபணுப் பரிசோதனை மூலம் அவர்களின் உண்மையான பெற்றோர்களைக் கண்டுபிடிக்க வழிவகை செய்யப்படும் எனவும் கூறியுள்ளார்.

# அவலச் சாவு...

கடந்த 19ம் திகதி சனிக்கிழமை இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 5 பிள்ளைகளின் தந்தையாரான இவர் கடந்த 17ம் திகதி மாலை முதல் காணாமல் போயுள்ளார். காணாமல்போனவரை குடும்பத்தினர் தேடி வந்த நிலையில்,அவரதுமனைவி யமுனா ஏரிக்கு தண்ணீர் எடுக்கச் சென்ற வேளையில், ஏரிப் பகுதியில் துர்நாற்றம் வீசியுள்ளது. இதையடுத்து வழங்கிய தகவலின் பிரகாரம், சடலம் மீட்கப்பட்டபோதே இறந்தவர் தவில் வித்துவான் என்பது தெரியவந்தது.



யமுனா ஏரி தண்ணீரை அப்பிரதேச மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். அந்தப் பகுதியில் பாதுகாப்பு வேலி இல்லாத நிலையில், இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவருகின்றன. யமுனா ஏரி நீரை பாதுகாப்பதற்குரிய பாதுகாப்பு வேலி அமைத்து தருமாறு பல தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் எவரும் பாதுகாப்பு வேலி அமைப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுக்கவில்லை என்றும் கடந்த காலங்களிலும் யமுனா ஏரியில் இருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

### இளம் காதலர்கள் ஒன்றாக தற்கொலை

வாழைச்சேனை திகிலிவெட்டை எனும் ஒதுக்குப் புறமான வயல்வெளிக் கிராமத்தின் முருகன் கோயில் வீதியைச் சேர்ந்த தங்கவடிவேல் தினேஷ்குமார் (வயது 22), மற்றும் நூலகர் வீதியைச் சேர்ந்த நாகராஜா நிரோஜினி (வயது 23) ஆகிய இருவரும் ஒன்றாகத் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது, கோராவெளி – நாவலடி ஊற்று பகுதியில் நீண்ட நேரமாக உந்துருளியொன்று அநாதரவாக நிறுத்தப்பட்டிருந்ததை அவதானித்த அந்தக் காட்டுப் பகுதியில் ஆடு மேய்க்கும் பெண்ணொருவர் அப்பகுதியில் காட்டு யானைகள் நடமாட்டம் உள்ளதால் அங்கு வந்த எவராவது காட்டு யானைத் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பிரதேச சபை உறுப்பினருக்கு அழைப்பை ஏற்படுத்தி விவரத்தைத் தெரிவித்துள்ளார். அதன் பின்னர் பிரதேச சபை உறுப்பினரும் கிராம வாசிகளும் ஆடு மேய்க்கும் பெண்ணுமாக இணைந்து பற்றைக் காடுகளடர்ந்த பகுதிகளில் தேடுதலை மேற்கொண்டுள்ளனர். அப்பொழுது மேற்படி காதல் ஜோடி மரமொன்றில் ஒரே கயிற்றில் சடலமாகத் தொங்கியபடி காணப்பட்டுள்ளனர். காதலர்களாக இவ்விரும் தொடர்புகளைப் பேணி வந்துள்ள அதேவேளை காதலி 5 மாதக் கர்ப்பிணியாக இருந்துள்ளார். எனினும், திருமணம் செய்து கொள்வதற்காக தங்களின் பெற்றோரின் அங்கீகாரம் உடனடியாகக் கிடைக்கப்பெறாது விரக்தியுற்ற நிலையில் இருவரும் தற்கொலை செய்து தமது உயிர்களை மாய்த்துக் கொண்டிருப்பதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

### சிறுவன் ஆற்றில் மூழ்கி பலி

மட்டக்களப்பு மண்டூர் மூங்கில் ஆற்றில் நண்பர்களுடன் நீராடச் சென்ற 15 வயது சிறவன் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. மண்டூர் கணேசபுரத்தைச் சோர்ந்த 15 வயதுடைய உமாபதி கிசான் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த சிறுவன் 6 நண்பர்களுடன் மூங்கிலாற்றில் நீராடச் சென்று நீராடி விளையாடியபோது குறித்த சிறுவன் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளான். பொதுமக்கள் உதவியுடன் ஆற்றில் தேடியபோது ஆற்றில் உள்ள மூங்கில் மரத்துக்குள் சிக்குண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

### இலண்டனில் தமிழ் இளைஞன் வெட்டிக்கொலை

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து தென்மேற்கு இலண்டனில் வசித்து வந்த தமிழ் இளைஞன் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். கடந்த 20ம் திகதி Mitcham பகுதியில் உள்ள வீதியில் அருணேஷ் தங்கராஜா என்ற 28 வயதுடைய இளைஞன் இவ்வாறு இனந்தெரியாத நபர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். அதிகாலை 3.30 மணியளவில் அவசர உதவிப்பிரிவு காவல் துறையினர் அவரை மீட்டு காப்பாற்ற முயற்சித்த போதும், அவர் சிகிச்சை பலனின்றி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்தக் கொலை தொடர்பான தடயவியல் ஆய்வுகளை ஸ்கொட்லன்ட்யார்ட் காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில், 44 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரை கைது செய்துள்ளனர். உயிரிழந்த அருணேசுக்கு, இலண்டனில் குடும்பம் எதுவும் இல்லையெனவும் அவரது தந்தை, கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் காலமானமதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



### தந்தையின் பிறந்த நாளுக்கு வந்த மகன் பலி!

தந்தையின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக வந்த இளைஞன் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். வவுனியா வாரிக்குட்டியூர் பகுதியைச் சேர்ந்த க.மிதுசன் (வயது–22) என்ற இளைஞனே மின்சாரம் தாக்கி கடந்த 23ம் திகதி உயிரிழந்தார். வவுனியா நகரிலிருந்து வாரிக்குட்டியூருக்கு வாகனத்தில் சென்றுள்ளார். வாகனத்தைச் சுத்தம் செய்வதற்காக, சுத்தம் செய்யும் இயந்திரத்தின் ஆளியை அழுத்தியுள்ளார். இதன்போது மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகி அவர் தூக்கி வீசப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

# சீனாவின் 2வது விமானம் தாங்கி கடலில் இறங்கியது

## குண்டு வீச்சு விமானத்தை முதல் முறையாக தரையிறக்கியது

சீனாவிடம் ஒரே ஒரு விமானம் தாங்கி போர்க் கப்பல்தான் இருந்து வந்தது. இந்த நிலையில், இரண்டாவது விமானம் தாங்கி போர்க்கப்பலை முற்றிலும் உள்நாட்டில் வடிவமைத்து கட்டியுள்ளது. ஏற்கனவே, சோவியத் ஒன்றிய காலத்தில் கட்டப்பட்ட விமானம் தாங்கிக் கப்பலை உக்ரேனிடமிருந்து வாங்கி மறுகட்டமைப்பை மேற்கொண்ட சீனா, லியோனிங் என்ற பெயரில் அந்தக் கப்பலை 2012ம் ஆண்டு தனது கடற்படையில் சேர்த்துக் கொண்டது. எனினும், தற்போதுதான் முதல் முறையாக முழுவதும் சீனாவிலேயே உருவாக்கப்பட்ட விமானம் தாங்கிக் கப்பல் வெள்ளோட்டத்துக்கு விடப்படுவது குறிப்பிடத்தக்கது.



இந்த கப்பல் கடந்த 13ம் திகதி லயோனிங் மாகாணத்தில் உள்ள டாலியன் கப்பல் கட்டும் தளத்தில் இருந்து கடல் சோதனைகளுக்காக புறப்பட்டது. 50,000 மெட்ரிக்தொன் நிறை கொண்ட, இன்னும் பெயரிடப்படாத அந்தக் கப்பல் கடல் சோதனை, பயிற்சிகளுக்கு பின்னர், 2020ம் ஆண்டுக்கு முன்பாக அந்த நாட்டின் கடற்படையில் சேர்த்துக் கொள்ளப்படும்.

இதேவேளை, சீனா 3வதாக ஒரு விமானம் தாங்கி போர்க்கப்பலை ஷெங்காயில் வடிவமைத்து கட்டி வருவதாகவும் தகவல்கள் கூறுகின்றன. 2030ம் ஆண்டுக்குள் 4 விமானம் தாங்கி போர்க்கப்பல்களை பெற்றிருக்க வேண்டும் என்று சீனா திட்டமிட்டு செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, சர்ச்சைக்குரிய தென் சீனக் கடல் பகுதியிலுள்ள தீவில், தனது குண்டு வீச்சு விமானத்தை சீனா முதல் முறையாக தரையிறக்கியுள்ளது. தெற்கு மற்றும் கிழக்கு சீனக் கடலில், சர்ச்சைக்குரிய பல்வேறு பகுதிகளுக்கு சீனா உரிமை கொண்டாடி வருகிறது. குறிப்பாக, தென் சீனக் கடலில் ஏறத்தாழ அனைத்து பகுதிகளும் சீனாவுக்குத்தான் சொந்தம் என்று அந்த நாடு கூறி வருகிறது.

இதன் காரணமாக, அந்தப் பகுதிகளில் சொந்தம் கொண்டாடி வரும் வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, புரூனே, தாய்வான் ஆகிய அயல் நாடுகளுக்கும், சீனாவுக்கும் இடையே பிரச்சனை நீடித்து வருகிறது.

இந்தச் சூழலில், தென் சீனக் கடல் பகுதியில் சீனா அமைத்துள்ள 3 தொலைதூர மையங்களில் கப்பல்களை அழிக்க வல்ல குரூஸ் ரக ஏவுகணைகள், தரையிலிருந்து தரை இலக்குகளைத் தாக்கக் கூடிய ஏவுகணை ரகங்கள் மற்றும் அவற்றை ஏவுவதற்கான தளவாடங்கள் குவிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகின.

இந்தச் சூழலில், தனது குண்டு வீச்சு விமானத்தையும் சீனா அந்தப் பகுதியில் தரையிறக்கியுள்ளது.

இதுகுறித்து சீன இராணுவ நிபுணர் வாங் மின்லியாங் கூறுகையில், போர் விமானங்களை தரையிறக்கும் இந்த பயிற்சி, தென் சீன கடல் பகுதியில் நிலவும் அனைத்துவிதமான அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள பயனுள்ளதாக இருக்கும் என கூறியுள்ளார்.

சீனாவின் இந்நடவடிக்கைக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து இரு வாரங்களுக்கு முன் கருத்து தெரிவித்த அமெரிக்கா, தென் சீன கடல் பகுதி இராணுவ மயமாக்குவதற்கு எதிரான நடவடிக்கைகளை அமெரிக்கா தயார்படுத்திவருகிறது என தெரிவித்தது. தற்போது யாங்சிங் தீவில் சீனா போர் விமானங்களை தரையிறக்கியது குறித்து கருத்து தெரிவித்த அமெரிக்கா, சீனாவின் இந்த நடவடிக்கை தென் சீன கடல் பகுதியில் பதட்டத்தையும், நிலையற்ற தன்மையையும் ஏற்படுத்தும் என எச்சரித்துள்ளது.

# அமெரிக்க உளவு அமைப்புத் தலைவராகும் முதற் பெண்!

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன் கடந்த மார்ச் மாதம் அதிரடியாக நீக்கப்பட்டார். ரெக்ஸ் டில்லர்சன்க்கு பதிலாக அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ.யின் இயக்குனர் மைக் போம்பியோவை புதிய வெளியுறவு அமைச்சராக டிரம்ப் நியமித்தார். அவரது நியமனத்தை நாடாளுமன்ற செனட் சபை ஏற்று, அவர் பதவியும் ஏற்றுக்கொண்டார். சி.ஐ.ஏ.யில் அவர் வகித்து வந்த பதவிக்கு சினா ஹஸ்பெல் Gina-haspel (61) என்ற பெண் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். அவரது நியமனம் தொடர்பான வாக்கெடுப்பு, செனட் சபையில் கடந்த வாரம் நடந்தது. இதில் நியமனத்துக்கு ஆதரவாக 54 வாக்குகள் கிடைத்தன. எதிராக 45 வாக்குகள் விழுந்தன. இதனால் அவரது நியமனத்துக்கு செனட் சபையின் ஒப்புதல் கிடைத்துவிட்டது. 70 ஆண்டு கால பாரம்பரியமிக்க சி.ஐ.ஏ.வின் முதல் பெண் இயக்குனர் என்ற சிறப்பை கினா ஹஸ்பெல் பெற்றுள்ளார்.



இதுஇவ்வாறிருக்க, அமெரிக்க முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் ரெக்ஸ் டிலெர்ஸன், ஜனாதிபதி ட்ரம்ப் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார். கல்வி நிறுவனமொன்றின் பட்டமளிப்பு விழாவில் உரை நிகழ்த்திய டிலெர்ஸன், அமெரிக்க பொது வாழ்வில், நன்னெறிகள் தொடர்பாகவும் நேர்மை தொடர்பாகவும், அதிகரித்துவரும் நெருக்கடி நிலவுகிறது என்று குறிப்பிட்டார். ஓராண்டுக்கு மேலாக, இராஜாங்கச் செயலாளராகப் பதவி வகித்திருந்த டிலெர்ஸன், இவ்வாண்டு மார்ச்சில், அவரது பதவியிலிருந்து விலக்கப்பட்டிருந்தார். அதன் பின்னர், அமெரிக்க அரசியல் நிலைமை தொடர்பாக, பகிரங்க விமர்சனத்தை அவர் முன்வைத்த முதற்சந்தர்ப்பமாக இது கருதப்படுகிறது.

எங்களது சமூகத்திலும் பொது, தனியார் அமைப்புகளின் தலைவர்களிடத்திலும், நன்னெறிகள் தொடர்பாகவும் நேர்மை தொடர்பாகவும் காணப்படும் நெருக்கடியை நாங்கள் எதிர்கொள்ளாவிட்டால், நாங்கள் அனைவரும் அறிந்த அமெரிக்க ஜனநாயகம், அதன் இறுதிக்கட்டத்தை அடைந்துவிடும் என அவர் டிரம்பின் பெயரைக் குறிப்பிடாமல் தற்போதுள்ள டிரம்பின் அபாயகரமான ஆட்சி குறித்து எச்சரித்துள்ளார்.

அவரது உரையில்,,அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் பெயரை அவர் குறிப்பிட்டு உரையாற்றியிருக்கவில்லை என்றாலும், அவர் மீதே விமர்சனத்தை முன்வைத்தார் என்று கருதப்படுகிறது. குறிப்பாக, உண்மையற்ற விடயங்களை வெளிப்படுத்துகிறார் என ஜனாதிபதி ட்ரம்ப் மீது தொடர்ச்சியான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இரத்த தானம் செய்து சாதனை!

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரைச் சேர்ந்த ஜேம்ஸ் ஹாரிசன் (81) தனது வாழ்நாளில் 1,173 முறை இரத்த தானம் செய்து சாதனைப் படைத்துள்ளார். ஜேம்ஸ் தனது 14 வயதில் சிறிய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அப்போது அவரது இரத்தத்தை



சோதனை செய்த மருத்துவர்கள் இரத்தத்தில் வித்தியாசமான நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் திறன் இருப்பதை கண்டறிந்தனர். அவரது இரத்த பிரிவின் மூலம் வயிற்றில் இருக்கும் குழந்தைகளை கிமோலைட்டிக் என்ற நோயிலிருந்து தடுக்க முடியும். இந்த நோயினால் பிறக்கும் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, இரத்த சிவப்பு அணுக்கள் சிதைவிலிருந்து பாதுகாக்க ஜேம்சின் இரத்தம் உதவுகிறது.

ஜேம்சிடமிருந்து 1964ம் ஆண்டிலிருந்து இரத்தம் எடுக்கப்பட்டு கர்பமாக உள்ள பெண்களுக்கு அளிக்கப்படுகிறது. இதன்மூலம் இதுவரை 2.4 மில்லியன் குழந்தைகள் பாதுகாக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், ஜேம்ஸ் 70 வயதை கடந்து விட்டதால் அவர் தனது கடைசி இரத்த தானத்தை வழங்கினார். ஜேம்சின் செயலுக்கு அனைவரும் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளனர். அவுஸ்திரேலியாவில் இது போன்ற சிகிச்சைக்கு உதவும் வகையிலான இரத்தம் கொண்டவர்கள் 160 பேர் உள்ளனர்.

# நிலத்தடி நீர்மட்டம் சரிகிறது – நாசா ஆய்வில் தகவல்

பூமியின் நிலத்தடி நீர்மட்டத்தை அமெரிக்காவின் நாசா அனுப்பிய செயற்கைக்கோள்கள் மூலம் விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர். உலக அளவில் 34 மண்டலங்களை சுமார் 14 ஆண்டுகளாக ஆய்வு செய்த விஞ்ஞானிகள் அதன் முதற்கட்ட தகவல்களை தற்போது வெளியிட்டுள்ளனர். இதில் பூமியின் ஈரப்பதம் மிகுந்த பகுதிகள் மேலும் ஈரமாகவும், உலர்ந்த பகுதிகள் மேலும் உலர்ந்து கொண்டே போவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு மோசமான நீர் மேலாண்மை, பருவநிலை மாற்றம் மற்றும் இயற்கை சுழற்சி உள்ளிட்ட பல காரணங்கள் இருப்பதாக கூறப்படுகிறது.

இந்தியாவின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகள், மத்திய கிழக்கு நாடுகள், கலிபோர்னியா மற்றும் அவுஸ்திரேலியாவில் நிலத்தடி நீர்மட்டம் வேகமாக குறைந்து வருவதாகவும், இதனால் ஏற்கனவே பிரச்சினைகள் உருவாகி இருப்பதாகவும் அந்த ஆய்வு கூறுகிறது. இந்த ஆய்வுக்காலத்தில் வட இந்தியாவில் போதுமான மழை இருந்தபிறகும் அரிசி, கோதுமை போன்ற பயிர்களுக்காக நிலத்தடி நீரை அதிக அளவில் உறிஞ்சியதாக அந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இது எதிர்கால வறட்சிக்கு நல்லதல்ல என்று கூறியுள்ள விஞ்ஞானிகள், பூமியை பொறுத்தவரை நிலத்தடி நீரே மிகவும் அத்தியாவசிய வளமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

# கிரிமியா ரஷ்யா இணைப்புப் பாலம் புட்டினின் திறப்புக்கு அமெரிக்கா எதிர்ப்பு

உக்ரேன் – ரஷ்யா முறுகலின் உச்சக்கட்டமாக கிரிமியா பிரிந்தது. உக்ரைனில் இருந்து பிரிந்த கிரிமியாவை ரஷ்யா தன்னுடன் சேர்த்துக் கொண்டது. இப்போது கிரிமியாவுடன் ரஷ்யா பாலம் அமைத்

### பிரித்தானியா பரிசீலனை

ஆப்கானிஸ்தானில், தலிபான்களுக்கு எதிரான போரில் ஈடுபட்டு வரும் ஆப்கான் இராணுவத்துக்கு ஆலோசனையும், பயிற்சியும் அளித்து வரும் தங்கள் நாட்டு இராணுவ அதிகாரிகளின் எண்ணிக்கையை 600–லிருந்து 1,000 ஆக அதிகரிப்பது குறித்து பிரித்தானியா பரிசீலித்து வருகிறது.

### துருக்கியில் 104 பேருக்கு ஆயுள் தண்டனை

துருக்கியில் 2016ம் ஆண்டு அதிபர் எர்டோகன் தலைமையிலான ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக நடைபெற்ற சதி முயற்சியில் பங்கேற்றதாக, 104 முன்னாள் இராணுவ அதிகாரிகளுக்கு ஆயுள் தண்டனை விதித்து அந்த நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஒரே நேரத்தில் துருக்கியில் 104 முன்னாள் இராணுவ அதிகாரிகளுக்கு வாழ்நாள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு இருப்பது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### 10 ரஷ்யபோர் விமானங்கள் விரைவில் சீனாவுக்கு!

ரஷ்யாவில் அரசுக்கு சொந்தமுடைய ரோஸ்டெக் நிறுவனம் போர் விமானங்கள் உள்ளிட்ட பாதுகாப்பு கருவிகளை உற்பத்தி செய்து வருகிறது. இந்நிறுவனம் உலகம் முழுவதும் 70 நாடுகளுக்கு தனது தயாரிப்புகளை விற்பனை செய்கிறது. இந்நிலையில் அந்நிறுவனத்திடம் இருந்து 250 கோடி அமெரிக்க டொலர் மதிப்பில் ஒப்பந்தம் ஒன்றின்படி மொத்தம் 24 போர் விமானங்களை சீன அரசு விலைக்கு வாங்குகிறது. அதன்படி கடந்த 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் என இதுவரை 14 போர் விமானங்களை சீனாவுக்கு அந்நிறுவனம் வழங்கி உள்ளது. மீதமுள்ள 10 போர் விமானங்களை இந்த வருடத்திற்குள் வழங்க முடிவு செய்துள்ளது.

### 13 கோடி பேருக்கு மனிதநேய உதவிகள் தேவை

உலகமெங்கும் வன்முறையால் பாதிக்கப்பட்டு உள்ள 12 கோடியே 80 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு மனிதநேய உதவிகள் தேவைப்படுவதாக ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டரெஸ் தெரிவித்து உள்ளார்.

### செவ்வாயில் துளையிட்டு நாசா சாதனை!

செவ்வாய்க் கோளில் உயிரினங்கள் வாழ்வது குறித்து ஆராய நாசா சார்பில் கியூரியாசிட்டி ரோவர் விண்கலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு வருடமாக கியூரியாசிட்டி ரோவர் செவ்வாய்க் கோளின் மேற்பகுதியில் சுற்றி திரிந்து வெற்றிகரமாக ஒரு பாறையை குடைந்து மண் மாதிரியை



சேமித்துள்ளது. பாறைகள் துளையிட நவீன முறை பின்பற்றப்பட்டு மற்றும் அதில் இருந்து மாதிரி துகள்கள் சேகரிக்கப்பட்டுள்ளது. 60 மில்லியன்

16

மைல் தொலைவில் 2 அங்குலம் துளையிடுவது சாதனை என நாசா அதிகாரி தெரிவித்துள்ளார். ரோவர் விண்கலத்தில் பாறை மற்றும் மண் மாதிரிகள் இரசாயன மற்றும் கனிம பகுப்பாய்வு நடத்த என இரண்டு ஆய்வகங்கள் உள்ளன குறிப்பிடத்தக்கது.

## எத்தியோப்பியர்களை விடுவிக்க சவுதி சம்மதம்

சவுதி அரேபியாவில் சட்டவிரோதமாக தங்கியிருந்ததால் சிறையில் அடைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான எத்தியோப்பியர்களை விடுவிக்க சவுதி அரசு ஒப்புக்கொண்டுள்ளதாக எத்தியோப்பிய அரசு கூறியுள்ளது. இந்த வாரம் சவுதி அரேபியாவிற்குச் சென்ற எத்தியோப்பிய பிரதமர் அபீ அகமதின் வேண்டுகோள் விடுத்ததையடுத்து இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## பிச்சைக்காரியாக இறந்த கோடீஸ்வரி!

லெபனான் நாட்டிலுள்ள தலைநகர் பெய்ரூட் வீதியில் பல ஆண்டுகளாக பிச்சையெடுத்து வந்த, கால்களை இழந்த பெண் பாத்திமா ஆத்மன் (வயது 52) என்பவர் பிச்சைக்காரியல்ல, கோடீஸ்வரி என்பது அவர் இறந்த பின்னரே தெரியவந்துள்ளது.

கடந்த வாரம் அப்பெண் சாலையோரம் இறந்துகிடந்தார். இறந்து கிடந்த பிச்சைக்கார பெண்ணின் பையில் காவல்துறையினர் சோதனையிட்ட



போது 5 மில்லியன் லெபனான் நாணயமும் (3300 டொலர்) அவரது பையில் இருந்த வங்கிக் கணக்குப் புத்தகம் மூலம் வங்கிக் கணக்கில் 1.7 பில்லியன் லெபனான் நாணயமும் (1.1 மில்லியன் டொலர்) சேமிப்புக் கணக்கில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. அவர் கொலை செய்யப்படவில்லை மாரடைப்புக் காரணமாக மரணமடைந்தார் என்பது பிரேத பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

## 25 மில்லியன் பெண்கள் முறையற்ற கருக்கலைப்பு


சர்வதேச அளவில் பெண்களின் வாழ்க்கை நிலை, உடல் நலம் மற்றும் அவர்களை பாதிக்கும் நோய்கள் குறித்த ஆய்வு சமீபத்தில் நடத்தப்பட்டது. அதன்படி 18 மில்லியன் (ஒரு கோடியே 80 இலட்சம்) தம்பதிகள் குழந்தை பேறு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆண்டுக்கு 20 இலட்சம் பெண்கள் எச்.ஐ.வி. எனப்படும் எய்ட்ஸ் கிருமி தாக்குதலுக்கு ஆளாகின்றனர். 2 இலட்சத்து 66 ஆயிரம் பெண்கள் கழுத்து புற்று நோய் பாதிப்புக்கு ஆளாகின்றனர் என தெரிய வந்துள்ளது.

சர்வதேச அளவில் மூன்றில் ஒரு பெண்கள் தங்களது கணவன்மார்களின் கொடூர தாக்குதலுக்கு ஆளாகின்றனர்.

→ 19



துள்ளது. ரஷ்யாவிற்கும் கிரிமியாவிற்கும் இடையில் பாலம் அமைக்கும் திட்டம் 1903 ஆண்டிலேயே போடப்பட்டாலும் இப்போதுதான் அது சாத்தியமாகியுள்ளது.இரண்டாம் உலகப்போரில் ஆறு மாதங்களுக்குள் பாலம் கட்டி முடிக்கவேண்டும் என்ற கிட்லரின் கட்டளையை அடுத்து வேகமாக ஒரு பாலம் ஜேர்மனியப் படையினரால் அமைக்கப்பட்டது. ஆனால் அது கட்டி




முடிப்பதற்கிடையில் சோவியத் ஒன்றியத்தின் தாக்குதலில் பாலம் கட்டும் பணி தடைப்பட்டுப்போய், பின்னர் கைவிடவும் பட்டது.

தற்போது கிரிமியா ரஷ்யாவுடன் இணைத்துக் கொள்ளப்பட்டதும் உடனடியாக பாலம் அமைக்குப் பணிக்கு ரஷ்ய அதிபர் புட்டின் உத்தரவிட்டார். மிகவும் வேகமாக அந்தப் பணியை முன்னெடுக்குமாறும் புட்டின் உத்தரவிட்டிருந்தார். இந்தப் பணிக்காக 3.7 பில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டிருந்தது. நான்கு ஆண்டு பணிகளில் சுமார் 18 கிலோ மீற்றர் நீளமான பாலம் அமைக்கப்பட்டது. அத்துடன் தொடருந்துப் பாதைக்கான பாலமும் அமைக்கப்பட்டது. நாளொன்றுக்கு சுமார் 40 ஆயிரம் வாகனங்களும் வருடத்திற்கு 13 மில்லியன் மக்களும் இந்தப் பாலத்தின் வழியாகப் பயணம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தப் பாலத்தை ரஷ்ய அதிபர் புட்டின் கடந்த 16ம் திகதி திறந்து வைத்தார். இதன்போது முதல் வந்த பாரவண்டியை புட்டினே செலுத்தி வந்தார்.

இதேவேளை, கிரிமியாவை ரஷ்யா இணைத்துக் கொண்டது சட்டவிரோதம் எனக் குற்றம்சாட்டிவரும் அமெரிக்கா,பாலதிறப்புக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அமெரிக்கா ரஷ்யா மீது விதித்துள்ள பொருளாதாரத் தடைகளுக்கு பதிலடியாக, அந்த நாட்டுடனான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய பல்வேறு மசோதாக்களை ரஷ்ய நாடாளுமன்றம் கடந்த வாரம் நிறைவேற்றியுள்ளது.

## சிரியாவில் இரசாயனத் தாக்குதல் சர்வதேச அமைப்பு உறுதி செய்தது

சிரியாவின் சாராகேப் நகரில் கடந்த பெப்ரவரி மாதம் இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டதை, இரசாயன ஆயுதங்களுக்கு எதிரான சர்வதேச அமைப்பு (Organisation for the Prohibition of Chemical Weapons) உறுதி செய்துள்ளது.

சிரியாவில் கடந்த 7 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நீடித்து வரும் நிலையில், அங்குள்ள சாராகேப் நகரில் எதிரணியினரைக் குறிவைத்து அரசுப் படைகள் கடந்த பெப்ரவரி மாதம் இரசாயனத் தாக்குதல் நடத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதேபோல், டோமா நகரில் கடந்த ஏப்ரலில் நடத்தப்பட்ட இரசாயனத் தாக்குதலில் 40 பேர் பலியானதாக தகவல்கள் வெளியாகின. இதுதொடர்பான காணொளிக் காட்சிகளும் வெளியாகி சர்வதேச அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தின.

இதனிடையே, சிரியாவின் பல்வேறு பகுதிகள் மீது அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் கூட்டுப் படை அண்மையில் தாக்குதல் நடத்தியது. இரசாயன ஆயுத தயாரிப்புக் கூடங்களை குறிவைத்து, இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக அப்போது தெரிவிக்

# உலகின் இராணுவ பலம் வாய்ந்த நாடுகள்

**உலகில் இராணுவ பலம் வாய்ந்த முதல் 50 நாடுகளின் பட்டியலை சர்வதேச ஊடகமான 'ரொய்டர்ஸ்' வெளியிட்டுள்ளது. அந்தப் பட்டியலில் பாதுகாப்பு செலவினம் (ஆண்டொன்றிக்கு), மொத்தப் படை பலம் (முப்படைகள்), மற்றும் போர்த் தளவாடங்களின் எண்ணிக்கை என்பவை பட்டியலிடப்பட்டு அதன் அடிப்படையில் இந்தப் பலம் குறித்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் முதல் நாடாக எது இருக்கும் என்பது நீங்கள் அனைவரும் ஊகிக்கக்கூடியதே. எனினும், முதல் 50 நாடுகள் கொண்ட அந்தப் பட்டியலை மேலிருந்து கீழாக இங்கே தொடர்ந்து தருகின்றோம்.**

**20வது இடத்தில்**
### தாய்லாந்து
பாதுகாப்புச் செலவு –
5.39 பில்லியன் டொலர் (5,390,000,000)
இராணுவப் பலம் – 627,425 படையினர்
போர் விமானங்கள் – 555
டாங்கிகள் – 737
இராணுவப் போர் வாகனங்கள் – 2,614
கடற்படைக் கப்பல்கள் – 81
விமானம் தாங்கிக் கப்பல் – 1
நீர்மூழ்கிக் கப்பல் – 0



**19வது இடத்தில்**
### போலந்து
பாதுகாப்புச் செலவு –
9.36 பில்லியன் டொலர் (9,360,000,000)
இராணுவப் பலம் – 184,650 படையினர்
போர் விமானங்கள் – 465
டாங்கிகள் – 1,065
இராணுவப் போர் வாகனங்கள் – 2,608
கடற்படைக் கப்பல்கள் – 83
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 5

**18வது இடத்தில்**
### தாய்வான்
பாதுகாப்புச் செலவு –
10.72 பில்லியன் டொலர் (10,725,000,000)
இராணுவப் பலம் – 1,932,500 படையினர்
போர் விமானங்கள் – 850
டாங்கிகள் – 2,005
இராணுவப் போர் வாகனங்கள் – 4,350
கடற்படைக் கப்பல்கள் – 87
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 4

**17வது இடத்தில்**
### பிரேசில்
பாதுகாப்புச் செலவு – 24.5 பில்லியன் டொலர் (24,500,000,000)
இராணுவப் பலம் –1,987,000 படையினர்
போர் விமானங்கள் – 697
டாங்கிகள் – 469
இராணுவப் போர் வாகனங்கள் – 1,707
கடற்படைக் கப்பல்கள் – 110
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 5



**16வது இடத்தில்**
### வியட்நாம்
பாதுகாப்புச் செலவு –
3.36 பில்லியன் டொலர் (3,365,000,000)
இராணுவப் பலம் – 5,448,500 படையினர்
போர் விமானங்கள் – 278
டாங்கிகள் – 1,545
இராணுவப் போர் வாகனங்கள் – 3,150
கடற்படைக் கப்பல்கள் – 65
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 6

**15வது இடத்தில்**
### இஸ்ரேல்
பாதுகாப்புச் செலவு –
15.5 பில்லியன் டொலர் (6,300,000,000)
இராணுவப் பலம் – 718,250 படையினர்
போர் விமானங்கள் – 652
டாங்கிகள் – 2,620
இராணுவப் போர் வாகனங்கள் – 10,185
கடற்படைக் கப்பல்கள் – 65
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 6

**14வது இடத்தில்**
### இந்தோனேசியா
பாதுகாப்புச் செலவு –
6.9 பில்லியன் டொலர் (6,300,000,000)
இராணுவப் பலம் – 975,750 படையினர்
போர் விமானங்கள் – 441
டாங்கிகள் – 418
இராணுவப் போர் வாகனங்கள் – 1,089
கடற்படைக் கப்பல்கள் – 65
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 6



**13வது இடத்தில்**
### பாகிஸ்தான்
பாதுகாப்புச் செலவு –
7 பில்லியன் டொலர் (7,000,000,000)
இராணுவப் பலம் – 919,000 படையினர்
போர் விமானங்கள் – 951
டாங்கிகள் – 2,924
இராணுவப் போர் வாகனங்கள் – 2,828
கடற்படைக் கப்பல்கள் – 197
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 8

**12வது இடத்தில்**
### தென் கொரியா
பாதுகாப்புச் செலவு –
43.8 பில்லியன் டொலர் (43,800,000,000)
இராணுவப் பலம் – 5,829,750 படையினர்
போர் விமானங்கள் – 1,477
டாங்கிகள் – 2,654
இராணுவப் போர் வாகனங்கள் – 2,660
கடற்படைக் கப்பல்கள் – 166
விமானம் தாங்கிக் கப்பல் – 1
நீர்மூழ்கிக் கப்பல் – 15

**11வது இடத்தில்**
### இத்தாலி
பாதுகாப்புச் செலவு –
34 பில்லியன் டொலர் (34,000,000,000)
இராணுவப் பலம் – 267,500 படையினர்
போர் விமானங்கள் – 822
டாங்கிகள் – 200
இராணுவப் போர் வாகனங்கள் – 6,972
கடற்படைக் கப்பல்கள் – 143
விமானம் தாங்கிக் கப்பல் – 2
நீர்மூழ்கிக் கப்பல் – 7

# மலேசிய முன்னாள் பிரதமர் ரசாக் சிறைக் கம்பிகளை விரைவில் எண்ணுவாரா?

மலேசியாவில் சமீபத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் 60 ஆண்டுகளாக ஆட்சி அதிகாரத்தில் இருந்து வந்த பேரிசன் நேசனல் கூட்டணி (பி.என்.)



தோல்வியைத் தழுவியது. எதிர்க்கட்சி கூட்டணி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து நஜிப் ரசாக், பிரதமர் பதவியை இழந்தார். மேலும், 92 வயது மகாதீர் முகமது பிரதமர் ஆனார். அதைத் தொடர்ந்து அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி பல மில்லியன் பணத்தை ஊழல் புரிந்து உள்ளதாக நஜிப் ரசாக் மீது எழுந்த குற்றச்சாட்டு சூடு பிடிக்கத்தொடங்கியது. அவர் நாட்டை விட்டு வெளியேறக்கூடாது என தடை விதிக்கப்பட்டது.

அவரது வீட்டிலும் அவருக்கு சொந்தமான இடங்களிலும் காவல்துறையினர் அதிரடி சோதனைகள் நடத்தினர். அங்கு இருந்து பணக் கட்டுகள், நகைகள் வைத்து நிரப்பப்பட்ட ஏராளமான கைப்பைகள் என பல கோடி சிக்கியுள்ளது. 2.87 மில்லியன் ரூபா இலங்கை நாணயத் தாள்களும் இதில் அடங்கியுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் அவர் ஊழல் தடுப்பு அமைப்பினரால் விசாரணைக்கு நேரில் அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அவரிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. விசாரணை முடிவில் அவர் கைதாவார் என எதிர்பார்க்கப்பட்டபோதும் அவர் கைதாகவில்லை. விசாரணைகளுக்கு அவர் ஒத்துழைப்பு வழங்குவதால் கைதாகவில்லை என்று காவல்துறைதரப்பில்கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு மேலாக அவர் மீது படுகொலைக் குற்றச்சாட்டொன்றும் வைக்கப்பட்டுள்ளது. மலேசியா நாட்டில் 2006ம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட மங்கோலியா நாட்டு மொடல் அழகி கொலை வழக்கில் முன்னாள் பிரதமர் நசிப் ரசாக்கை தொடர்புபடுத்தி மறு விசாரணை நடத்தப்படலாம் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மங்கோலியா நாட்டை சேர்ந்தவர் அல்டன்ட்டுயா ஷொரிபு. பிரபல மொடல் அழகி. இரு குழந்தைகளுக்கு தாயான இவருக்கும் முன்னாள் பிரதமர் நசிப் ரசாக்கின் நண்பரும் அரசியல் ஆலோசகருமான அப்துல் ரசாக் பகின்டா என்பவருக்கும் இடையே காதல் இருந்ததாக முன்னர் தகவல் வெளியாகின.



இந்நிலையில் 18.10.2006 அன்று மலேசியாவில் அல்டன்ட்டுயா ஷொரிபு (28) கொடூரமான முறையில் குண்டு வைத்துப் படுகொலை செய்யப்பட்டார். அப்போது நஜிப் ரசாக் பாதுகாப்புத் துறை அமைச்சராகவும் துணை பிரதமராகவும் பதவி வகித்து வந்தார்.

2002ம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் இருந்து மலேசியாவுக்கு

தொடர்ச்சி 18ம் பக்கம்

## அன்வர் இப்ராஹிம் விடுதலை

பாலியல் வழக்கில் சிறை தண்டனை பெற்றிருந்த மலேசிய முன்னாள் பிரதமர் அன்வர் இப்ராஹிமுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருந்ததையடுத்து, அவர் கடந்த 16ம் திகதி விடுதலை செய்யப்பட்டார். கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பாக தனது முன்னாள் அந்தரங்க உதவியாளரோடு இயற்கைக்கு மாறாக ஓரின சேர்க்கையில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பான வழக்கை விசாரித்த நீதிமன்றம், அவருக்கு 5 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து 2014ம் ஆண்டு தீர்ப்பு அளித்தது. அன்வர் மீதான குற்றச்சாட்டுகள், அரசியல் காரணமாகச் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் என்றே கருதப்பட்டன. அவரது தண்டனைக்காலம் யூன் 8ம் திகதி நிறைவடைய இருந்தது. இதற்கிடையே, கடந்த வாரம் நடைபெற்ற மலேசிய தேர்தலில், அன்வர் இப்ராஹிமின் கட்சி இடம்பெற்றிருந்த கூட்டணி வெற்றி பெற்றதையடுத்து, அவரை உடனடியாக விடுதலை செய்தாக வேண்டிய சூழல் ஏற்பட்டது.



முன்னதாக, தனது தோள்பட்டையில் அறுவை சிகிச்சை செய்து கொண்டதால் அன்வர் மருத்துவமனையில் தங்கியிருந்தார். அங்கிருந்து விடுதலையாகி அன்வர் வெளியே வந்தபோது, ஏராளமான தொண்டர்களும், செய்தியாளர்களும் அவரை சூழ்ந்துகொண்டனர்.

பின்னர், தனது இல்லத்தில் செய்தியாளர்களிடம் அவர் பேசியதாவது: தற்போது மலேசியாவுக்கு ஒரு புதிய தலைவர் கிடைத்துள்ளார். மதம், இன பாகுபாடின்றி ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்துக்கு ஆதரவாக வாக்களித்த மலேசிய மக்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதையே தேர்தல் முடிவு உணர்த்துகிறது. மக்கள் அளித்துள்ள தேர்தல் முடிவுகளுக்கு மதிப்பு அளிக்கப்பட வேண்டியது புதிய அரசின் கடமையாகும் என்றார் அன்வர்.

விடுதலையான பிறகு அன்வர் பிரதமராக பொறுப்பேற்பார் என்றும், தற்போதைய புதிய பிரதமர் மகாதீர் மொஹமது, தமது பதவியை அன்வருக்கு விட்டுக் கொடுப்பார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. 2015ம் ஆண்டு சிறையிலடைக்கப்பட்ட போது, அன்வரின் அரசியல் வாழ்வு முடிந்துவிட்டது எனக் கருதப்பட்ட நிலையில், இன்னும் ஓரிரு ஆண்டுகளில், நாட்டின் பிரதமராக அவர் பதவியேற்பார் என்பது, எதிர்பார்க்கப்படாத திருப்பமாக அமைந்துள்ளது. ஆனால், தான் இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகள் பிரதமர் பதவியில் நீடிக்கப் போவதாக மகாதீர் கூறியிருந்தார்.

இந்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினராகும் வகையில் ஏதேனும் இடைத்தேர்தலில் அன்வர் போட்டியிடுவாரா என்ற கேள்வி எழுந்தது. ஆனால், தற்போதைய சூழ்நிலையில் தாம் எந்தப் பதவியையும் ஏற்கப் போவதில்லை என்றும், தற்போது குடும்பத்தினருடன் நேரத்தை செலவிட விரும்புவதாகவும் அன்வர் கூறியுள்ளார். அதேவேளையில், மஹாதீர் அரசுக்கு தமது முழுமையான ஆதரவைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அன்வர் கூறினார்.

மஹாதீர் தலைமையிலான அரசில், அன்வரின் மனைவி வான் அசியா வான் இஸ்மாயில் துணை பிரதமராக பதவி வகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கப்பட்டது.

இந்நிலையில், நெதர்லாந்தின் தி ஹேக் நகரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் இரசாயன ஆயுதங்களுக்கு எதிரான சர்வதேச அமைப்பின் உண்மை கண்டறியும் குழுக்கள் சிரியாவில் ஆய்வு மேற்கொண்டன. சாராகேப், டோமா ஆகிய நகரங்களில் இருந்து ஏராளமான மாதிரிகளை சேகரித்த அந்த குழுவினர், ரசாயனத் தாக்குதல் தொடர்பாக அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருவோரிடமும் விசாரணை மேற்கொண்டனர். பின்னர், அந்த மாதிரிகள் ஓபிசிடபிள்யூ-வின் ஆய்வகங்களில் சோதனையிடப்பட்டதில், சாரகேப் நகரில் குளோரின் நச்சு வாயு தாக்குதல் நடத்தப்பட்டது உறுதியாகியுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அதேவேளையில், டோமா நகரில் சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் சோதனை முடிவுகள் இன்னும் வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியது யார் என்பதை அந்த அமைப்பு தெரிவிக்கவில்லை.

## ஜேர்மனி ஹாம்பேர்க் நகரில் டீசல் வாகனங்களுக்குத் தடை

ஜேர்மனியின் ஹாம்பர்க் நகரில் வரும் 31ம் திகதி முதல் டீசல் வாகனங்களுக்கு தடை விதிப்பதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. புகையால் ஏற்படும் மாசுபாட்டைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜேர்மனியில் டீசல் வாகனங்களை இயக்க தடை விதிக்கப்பட்ட முதல் நகரம் ஹாம்பர்க் என்பது குறிப்பிடத்தக்கது. துறைமுக நகரமான ஹாம்பர்க்கில் ஏராளமான கொன்டெய்னர் பாரவண்டிகள் சரக்கு எடுத்துச் செல்லப்படுவது வழக்கமாக உள்ளது.

துறைமுகத்துக்கு அதிக அளவில் வந்து செல்லும் டீசல் வாகனங்களால் நகரில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு காற்று மாசுபாடு அதிகரித்தது. இதையடுத்து, மாசுபாட்டை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஜேர்மனி அரசு தீவிரமாகப் பரிசீலித்தது. அதன்படி வரும் 31ம் திகதிக்குப் பிறகு ஈரோ-6 புகைத் தரச்சான்று இல்லாத டீசல் வாகனங்கள் எதையும் நகரில் இயக்கக் கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால், இப்போது புழக்கத்தில் உள்ள 90 சதவீத டீசல் வாகனங்களை ஹாம்பர்க் நகருக்குள் இயக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், ஹாம்பர்க் நகரில் வசிப்பவர்கள், அவசர (அம்புலன்ஸ்) வாகனங்கள் உள்ளிட்டவற்றுக்கு சிறிதுகாலம் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. நகர மக்களின் உடல்நலத்தையும், சுற்றுச் சூழலையும் கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கைக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று ஜேர்மனி அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

## நேபாள கொம்யூனிஸ்ட் கட்சிகள் ஒருங்கிணைப்பு

### - சீனா வரவேற்பு -

நேபாளத்தில் இரு பெரிய கொம்யூனிஸ்ட் கட்சிகளும் ஒருங்கிணைக்கப்பட்டதை சீனா வரவேற்றுள்ளது. இதுகுறித்து சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் லூ காங் பெய்ஜிங்கில் கூறியதாவது: சீனாவின் மிகச் சிறந்த அண்டை நாடு என்ற முறையில், நேபாளத்தின் சமூக அமைப்பையும், வளர்ச்சியையும் நல்ல பாதைக்கு இட்டுச் செல்லும் வகையில் இரு கொம்யூனிஸ்ட் கட்சிகளும் ஒருங்கிணைக்கப்பட்டதை வரவேற்கிறோம். இந்த முடிவை, நேபாளம் தன்னிச்சையாக எடுத்துள்ளது என்றார் அவர்.

நேபாளத்தின் பிரதமர் கே.பி. சர்மா ஒலி தலைமையிலான ஐக்கிய மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கொம்யூனிஸ்ட் (சிபிஎன்-யுஎம்எல்), முன்னாள் பிரதமர் பிரசண்டா தலைமையிலான நேபாள மாவோயிஸ்ட் கொம்யூனிஸ்ட் ஆகிய இரு கட்சிகளும் ஒருங்கிணைப்பதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டது. இரு கொம்யூனிஸ்ட் கட்சிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு 'நேபாள கொம்யூனிஸ்ட் கட்சி' (சிபிஎன்) என்ற புதிய கட்சி உருவாக்கப்பட்டது. புதிதாக உருவாகியுள்ள கட்சி தற்போது நேபாளத்தின் மிகப் பெரிய கட்சியாக உருவெடுத்துள்ளது.

அதே நேரத்தில் பாதுகாப்பு இல்லாத முறையற்ற கருக்கலைப்புகள் அதிக அளவில் நடைபெறுகின்றன. குழந்தை பிறப்பை தடுப்பதற்காக இதுபோன்று 25 மில்லியன் கருக்கலைப்புகள் நடக்கின்றன. இவை தவிர 30 மில்லியன் பெண்கள் மருத்துவமனைக்குச் செல்லாமல் சுகாதாரமற்ற முறையில் குழந்தைகளை பெற்றெடுக்கின்றனர். இதுபோன்ற குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும். பாதுகாப்பான முறையான கருக்கலைப்புகள் நடத்தப்பட வேண்டும். அதற்கு சர்வதேச நாடுகள் சட்ட திட்டங்களை உருவாக்க வேண்டும். மருத்துவ வசதிகளை மேம்படுத்த வேண்டும் என ஆபிரிக்க மக்கள் தொகை மற்றும் சுகாதார ஆய்வு மைய இணை சேர்மன் கலெஸ் இசப் தெரிவித்துள்ளார்.

## உலகின் முதல் இரட்டைத் தலை மான்!

அமெரிக்காவில் இரண்டு தலைகளை கொண்ட மான் முழுமையாக பிரசவம் ஆகியுள்ளது விஞ்ஞானிகளிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதுகுறித்து அந்த நாட்டு ஆய்வாளர்கள் கூறுகையில், மான்களிடையே இரு தலைகளுடன் கருத்தரிப்பது மிகவும் அபூர்வமானது என்று கூறினர். பிறந்த பிறகு அந்தக் குட்டி இறந்துவிட்டது. எனினும், இரட்டைத் தலையுடன் மான் குட்டி உயிருடன் முழுமையாகப் பிறந்தது உலகில் இதுவே முதல் முறை என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.



## ஓவியத்தின் விலை 157 மில்லியன் டொலர்!

புகழ்பெற்ற நிர்வாண ஓவியம் ஒன்று 157 மில்லியன் டொலர் தொகைக்கு விற்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள சொதேபி (Sotheby) நிறுவனம் Nu couché (sur le côté gauche என்ற ஓவியத்தை விற்பனைக்கு வைத்தது. அந்த ஓவியமானது புகழ்பெற்ற இத்தாலிய ஓவியரான அமேதியோ மோதிக்லியானியால் உருவாக்கப்பட்ட 22 நிர்வாண ஓவியத் தொகுப்பில் ஒன்றாகும்.

1917ம் ஆண்டு காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட இந்த ஓவியமானது




அப்போதைய மக்களால் ஆபாசம் என ஒதுக்கப்பட்டது. ஏலத்திற்கு வைத்த சொதேபி நிறுவனமானது ஆரம்ப விலையாக 150 மில்லியன்டொலர் என குறிப்பிட்டது. இதுவரை ஏலத்தில் வைக்கப்பட்டுள்ள ஓவியங்களில் ஆரம்ப விலையாக அதிக தொகை நிச்சயிக்கப்பட்ட ஓவியமும் இதுவே. பின்னர் நடந்த ஆவேசமான விவாதத்தில் குறித்த ஓவியத்தை பெயர் வெளிப்படுத்த விரும்பாத நபர் ஒருவர் 157 மில்லியன் டொலருக்கு வாங்கியுள்ளார்.

# முள்ளிவாய்க்காலில் படை...

யுத்தம் முடிவுக்கு வந்து ஒன்பது ஆண்டுகள் நிறைவடைந்த போதிலும் யுத்தத்தின்போது சிறீலங்கா படைகள் இழைத்த போர்க்குற்றம் தொடர்பான விசாரணைக் கோரிக்கை இதுவரை கைவிடப்படவில்லை. போர்க்குற்றங்களில் ஈடுபட்ட படையினர் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என உலகம் பூராகவும் உள்ள தமிழ் மக்கள் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஆண்டுதோறும் நடைபெறுகின்ற ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுகளைச் சமாளிப்பதற்கு சிறீலங்கா அரசு பெரும் பிரயத்தனங்களில் ஈடுபடவேண்டி உள்ளது. அதிலும் வருடாந்தம் சிறீலங்கா அரசுக்கான அழுத்தம் அதிகரிக்கின்றதே தவிர குறையும் சாத்தியப்பாட்டைக் காணமுடியவில்லை.

இவ்வாறான நிலையில், தாங்கள் தமிழ் மக்களுடன் நட்புரிமையுடன் பழகுகின்றனர் என்ற தோற்றப்பாட்டைக் காட்டவேண்டிய தேவை சிறீலங்கா அரசுக்கும் படைத்தரப்புக்கும் ஏற்பட்டுள்ளது. இதற்காகவே, படையினர் இம்முறை புதிய உத்தியைக் கையாண்டிருக்கின்றனர்.

அதுவும் தங்களால் கொல்லப்பட்டவர்கள் எனக் கூறப்படும் மக்களின் நினைவேந்தலுக்குச் சென்றவர்களுக்கே குளிர்பானம் வழங்குவது என்பது தங்கள் மீதான களங்கத்தைக் குறைக்கும் என அவர்கள் எண்ணினர். அதன் வெளிப்பாடாகவே குளிர்பானம் வழங்கப்பட்டது.

இறுதி யுத்தத்தின்போது படையினர் ஒரு சில குழந்தைகளையும் வயோதிபர்களையும் தூக்கிச் சென்ற காட்சி அடங்கிய நிழற்படங்கள் இன்று வரை படையினருக்கு ஆதரவான பிரச்சாரமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

இலட்சக்கணக்கான மக்களை ஈவிரக்கம் இன்றிக் கொன்றொழித்த படையினர், நிழற்படத்திற்காக மட்டும் ஒருசிலரை தூக்கிச் சென்ற காட்சியை சர்வதேசம் வாய்பிளந்து பார்க்கின்றது. அதேபோலவே, குளிர்பானம் வழங்கி சர்வதேசத்தின் அனுதாபத்தைப் பெற படைத்தரப்பு முயன்றிருக்கின்றது.

எது எப்படி இருந்தபோதிலும், சிறீலங்காவில் உள்ள ஒட்டுமொத்தப் படையினரும் போர்க்-குற்றவாளிகள்தாம். இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதற்காக உலகம் பூராகவும் உள்ள தமிழ் மக்கள்தான் குரல்கொடுக்க வேண்டும்.

உலகில் வேறெந்த இனத்தின் மீதும் இனவாதத் தாக்குதல் நடத்தப்படுமாயின் கேட்பதற்கு அவர்களுக்கான நாடுகள் இருக்கின்றன. ஆனால், தமிழன் மீது தாக்குதல் நடத்தப்படுமாயின் உலகில் எந்தவொரு நாடும் கேட்காது. ஏனெனில், உலகில் தமிழனுக்கு என்றொரு நாடில்லை.

இந்தக் குறையைப் போக்கவே நானிலம் போற்றும் தலைவன் எழுந்தான். ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அந்த உன்னத தலைவனுக்குப் பின்புலமாக நின்றிருந்தால் இன்று தமிழீழம் கிடைத்திருக்கும். தமிழினம் விட்ட சில தவறுகளால் இன்று ஏதிலிகளாக நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

எனினும், அன்று நாம் விட்ட தவறுகளை உணர்ந்து ஒட்டுமொத்த தமிழர்களும் உரத்துக் குரல் கொடுத்தால் எங்கள் குரலுக்கு சர்வதேசம் காதுகொடுக்கும். தேசியத் தலைவர் கூறியதைப் போன்று, எழுச்சியடைந்த எந்தவொரு இனமும் வீழ்ச்சி அடைந்ததாக வரலாறு இல்லை என்பதைப் போல தமிழினம் இனியாவது ஒன்றுபட்டு நிற்கவேண்டும்.

தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் உள்ள தமிழர் நலன்பேணும் அமைப்புக்கள், தமிழீழ விடுதலையின் பெயரால் உருவாக்கப்பட்டிருக்கின்ற அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். விட்டுக்கொடுப்புக்கள் அவசியம். எழுச்சியின் மூலமே, மக்களின் ஒன்றிணைந்த புரட்சியின் மூலமே எமது உரிமைகளை மீட்டெடுக்க முடியும்.

# மலேசிய முன்னாள் பிர...

இரு நீர்மூழ்கி கப்பல்களை வாங்கிய பேரத்தில் நடைபெற்ற ஊழலில் அப்துல் ரசாக் பகின்டாவுக்கும், அல்டன்ட்டுயா ஷொரிபுவுக்கும் பங்கிரு ததாகவும் இந்த விவகாரம் வெளியே கசியாமல் இருப்பதற்காக அல்டன்ட்டுயா கொல்லப்பட்டதாகவும் அப்போது தகவல்கள் வெளியாகின. இந்த கொலை தொடர்பாக அப்துல் ரசாக் பகின்டா மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது. ஆனால், கொலை செய்ய தூண்டியதான வழக்கில் இருந்து 2008ம் ஆண்டில் அவர் விடுவிக்கப்பட்டார்.

இவ்வழக்கில் கைதாகி மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ள இரு காவல்துறையினரில் ஒருவர் மரண தண்டனைக்கு எதிரான மேன்முறையீட்டு வழக்கில் பிணையில் வெளியே வந்து வெளிநாட்டுக்கு தப்பிச் சென்று விட்டார். இவர்கள் இருவருமே நஜிப் ரசாக்கின் பாதுகாப்பு படையில் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

மலேசியாவில் இருந்து தப்பியோடி ஒஸ்ரியா நாட்டுக்கு சென்ற காவல்துறையினன் சிருல் அசார் உமர் என்பவர்





அந்நாட்டு குடியுரிமைத்துறை அதிகாரிகளிடம் 2015ம் ஆண்டு பிடிபட்டு, தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

மலேசிய அரசு தனக்கு பொது மன்னிப்பு அளித்தால் அல்டன்ட்டுயா 'ாரிபுவை கொல்லுமாறு தனக்கு கட்டளை பிறப்பித்த பெரும்புள்ளி யார்? என்பதை வெளிப்படையாக அறிவிக்கவும் நீதிமன்றில் வந்து வாக்குமூலம் அளிக்கவும் தான் தயாராக இருக்கிறேன் என சமீபத்தில் சிருல் அசார் உமர் குறிப்பிட்டிருந்தார்.

தற்போது மலேசியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் பல்வேறு நாட்டு தலைவர்களும் புதிய பிரதமரும் மலேசியா நாட்டின் மிக மூத்த அரசியல் தலைவருமான மஹதிர் முகம்மதுவுக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

அவ்வகையில், அவருக்கு நல்வாழ்த்துகளை தெரிவித்து வாழ்த்து கடிதம் அனுப்பிய மங்கோலியா நாட்டு அதிபர் பட்டுல்கா கல்ட்மா, இரு குழந்தைகளுக்கு தாயான தங்கள் நாட்டுப் பெண்ணும் மொடல் அழகியுமான அல்டன்ட்டுயா ஷொரிபு மலேசியாவில் கொல்லப்பட்ட விவகாரத்தை உங்களது கவனத்துக்கு கொண்டு வருவதன் மூலம் இதற்கான நீதி கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன் என குறிப்பிட்டுள்ளார். இந்த கடிதம் மங்கோலியா நாட்டு அரசு இணையதளத்திலும் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், மலேசியா மன்னரின் பொது மன்னிப்பின்படி சிறையில் இருந்து விடுதலையான அன்வர் இப்ராகிம் அல்டன்ட்டுயா ஷொரிபு கொலை வழக்கில் முன்னர் முறையான நியாயமான விசாரணை நடத்தப்படவில்லை. எனவே, தற்போது நஜிப் ரசாக் மற்றும் அவரது நண்பர் அப்துல் ரசாக் பகின்டா ஆகியோரையும் இணைத்து மறுவிசாரணையை தொடங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

ஒஸ்ரியா நாட்டில் சிறைபட்டிருக்கும் சிருல் அசார் உமருக்கு பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு, அவரை மலேசியாவுக்கு அழைத்து வந்தால் மங்கோலியா மாடல் அழகி கொலை தொடர்பான மறுவிசாரணை சூடு பிடிக்கலாம். அப்போது, குற்றம்சாட்டப்படுபவர்கள் பட்டியலில் அப்துல் ரசாக் பகின்டா, நஜிப் ரசாக் ஆகியோரும் இணைக்கப்படலாம் என மலேசிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

இதனால், ஏற்கனவே ஊழல் வழக்கில் விசாரணையை எதிர்நோக்கி காத்திருக்கும் மலேசியா முன்னாள் பிரதமர் நஜிப் ரசாக் மங்கோலியா நாட்டு மொடல் அழகி கொலை வழக்கிலும் சிக்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே, மலேசிய அபிவிருத்தி நிதியத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும், பல பில்லியன் டொலர்கள் தொடர்பான மோசடி காரணமாகச் சிக்கலை எதிர்கொண்டுள்ள நஜீப், இவ்விசாரணையும் ஆரம்பிக்கப்பட்டால் கடுமையாகப் பாதிக்கப்படுவார் எனக் கருதப்படுகிறது. இதனால் மலேசியப் பிரதமர் சிறைக் கம்பிகளை விரைவில் எண்ணவேண்டி வரும் என்றும் கூறப்படுகின்றது.

# தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு...

ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு ஆதரவு போராட்டத்தில் இவர்களின் செயல்பாடுகளை யாவரும் அறிவர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பே இடதுசாரி தீவிரவாத இயக்கங்களைச் சேர்ந்த சிலர் தூத்துக்குடி மாவட்டத்தில் ஊடுருவிவிட்டதாகவும், ஸ்டெர்லைட் ஆலையைச் சுற்றியுள்ள சுமார் 10 கிராமங்களில் முகாமிட்டு மக்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு போராட்டத்துக்கான ஆயத்தங்களை மறைமுகமாக செய்து வந்ததாகவும் கூறப்படுகிறது. அதன் வெளிப்பாடுதான் நூறு நாள் போராட்டம் என்றும் குற்றம்சாட்டப்படுகின்றது.



இதற்கிடையே, ஸ்டெர்லைட் ஆலையை நிர்வகிக்கும் வேதாந்தா குழும நிறுவனங்களை இலண்டன் பங்குச் சந்தையிலிருந்து விலக்கிவைக்க வேண்டும் என்று பிரித்தானிய எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. தூத்துக்குடியில் செயல்பட்டு வரும் வேதாந்தா குழுமத்திற்கு சொந்தமான ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் 13 பேர் பலியாகியுள்ளனர். இந்த நிலையில், லண்டன் பங்குச் சந்தையில், வேதாந்தா பங்கு விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகிறது. சூழலியலுக்கு எதிரான தொழிற்சாலைக்கு எதிராக போராடியதற்காக பொதுமக்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று, பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ள நிலையில், இலண்டன் பங்கு சந்தையில் இருந்து வேதாந்தா குழும பங்குகளை விலக்க வேண்டும் என்று அந்த நாட்டு எதிர்க்கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதற்கிடையே, தூத்துக்குடி படுகொலையைக் கண்டித்து இலண்டனில் வேதாந்தா குழுமத்தின் தலைவர் அனில் அகர்வால் வீடு முன்பாக தமிழர்கள் போராட்டம் நடத்தினர். கொலைகார அனில் அகர்வால் இந்த வீட்டில்தான் இருக்கிறார் என முழக்கங்கள் எழுப்பினர். இந்நிலையில், தூத்துக்குடியில் நடைபெற்ற சம்பவங்கள் வருத்தமளிக்கின்றன எனத் தெரிவித்து அனில் அகர்வால் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளார். கலவரத்தில் காயமடைந்த அனைவருக்கும் தனது அனுதாபங்களை தெரிவித்துள்ளார். ஆண்டு பராமரிப்பு பணிக்காக ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டுள்ளதாகவும், நீதிமன்றம், மத்திய மாநில அரசுகளின் சட்டங்களுக்கு உட்பட்டு ஆலை இயக்கப்படும் என்றும் சுற்றுசூழல் பாதிக்காத வகையில் ஆலையை தொடர்ந்து நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அனில் அகர்வால் வெளியிட்டுள்ள அந்தக் காணொளில் மேலும் தெரிவித்துள்ளார்.

## களவும் கற்று...

' சூதாடும் கருவியையும் சூதாடும் இடத்தையும் தம் கைகளையும் நம்பி மேல்சென்றவர்கள் ஒன்றும் இல்லாதவராய் ஆவர்.' என்பதே இக்குறளின் பொருள் ஆகும். சூதாடும் கருவியைக் குறிக்கும் இந்த 'கவறு' என்னும் சொல்லை 'கற்று' என்று பழமொழியில் பிழையாக எழுதியதால் தான் தவறான பொருள் கோளுக்கு வழிவகுத்து விட்டது. களவுத்தொழிலைக் கையால் தான் செய்ய வேண்டும். அதேபோல சூது விளையாட்டையும் முழுக்க முழுக்க கைகளால் தான் ஆடவேண்டும். 'இந்த இரண்டையும் கையில் தொடாமல் இரு' என்பதே இப்பழமொழியில் பெரியவர்கள் கூற வரும் அறிவுரை ஆகும். ஆகவே சரியான பழமொழி 'களவும் கவறு மற' என்பது தான்.

## பட்டியலில் முதல் பெய...

கிடைத்த நேரத்தில் இறைவனைத் தொழுவதிலும் கவனம் செலுத்தினார். சில நாட்கள் சென்றன. ஒரு நாள் அவர் தூங்கிக் கொண்டிருந்தபோது கனவில் அதே தேவதை அவர் முன்பு தோன்றியது. அப்போதும் அதன் கையில் ஒரு புத்தகம் இருந்தது. முன் போலவே அது எழுதிக்கொண்டிருந்தது!

'இன்று என்ன எழுதுகிறீர்கள்?' என்று கேட்டார் ஆதம்.

'கடவுளால் விரும்பப்படுபவர்களின் பெயர்களைப் பட்டியலிட்டுக் கொண்டிருக்கிறேன்' என்றது அந்த தேவதை.

'கடவுளை விரும்புகிறவர் பட்டியலிலேயே என் பெயர் இல்லை. கடவுளால் விரும்பப்படுகிறவர் பட்டியலிலா என் பெயர் இருக்கப் போகிறது... இந்தப் பட்டியலிலும் என் பெயர் இல்லை அல்லவா? இருக்காது...' என்று வருத்தம் தோய்ந்த முகத்துடன் தேவதையைப் பார்த்துச் சொன்னார் ஆதம்.

'உமது பெயர்தான் இதில் முதலில் உள்ளது. கடவுளிடம் பக்தி செலுத்துவதோடு இருந்து விடாமல் மற்ற உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் உம்மைவிடக் கடவுளால் விரும்பப்படுபவர் வேறு யாராக இருக்க முடியும்?' என்று சொல்லிவிட்டு அந்த தேவதை மறைந்தது.

## முயல்களின் தீவு...

அவர்கள் கொண்டு வரும் உணவுப் பொருள்களை போட்டி போட்டுக்கொண்டு சாப்பிடுமாம். சுற்றுலாப் பயணிகள் தரையில் உட்கார்ந்தால் மடி, தலை மீது ஏறி சேட்டைகள் செய்யுமாம். சிலரை அப்படியே படுக்க வைத்து, அவர்கள் மீது ஏறி விளையாடி மகிழுமாம். குறைந்த காலத்திலேயே ஏராளமான சுற்றுலாப் பயணிகளை தீவை நோக்கி வரவழைத்துவிட்டன இந்த அழகிய முயல்கள்.





பரிசில்...

# பிரான்சில் முள்ளிவாய்க்கால் 9ம் ஆண்டு நினைவேந்தல்கள்!


கிளிச்சியில்...


செவ்ரோனில்...


அல்போவிலில்...


ஸ்ராஸ்போர்க்கில்...


திரான்சியில்...


சொய்சி லூறுவாவில்...

## மேஜர் காந்தரூபன் நினைவுசுமந்த உதைபந்தாட்டம் மற்றும் துடுப்பெடுத்தாட்டப் போட்டிகள்!

பிரான்சில் மேஜர் காந்தரூபன் நினைவுசுமந்த உதைபந்தாட்டம் மற்றும் துடுப்பெடுத்தாட்டப் போட்டிகள் பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் தமிழ்ப் பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த (20-05-2018) ஞாயிற்றுக்கிழமை பரிஸ் வன்சன் பகுதியில் இடம்பெற்றது.





## வில்நெவ் சென்ஜோர்ஜ் தமிழ்ச்சங்க இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி 2018

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பிரான்சு, தமிழர் விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் பரிசின் புறநகர்ப் பகுதியில் ஒன்றான வில்நெவ் சென்ஜோர்ஜ் தமிழ்ச் சங்கம் நடாத்திய இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி 2018 கடந்த சனிக்கிழமை (12) காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது.



## குசன்வில் பிரெஞ்சுத் தமிழ்ச்சங்கத்தின் 19 ஆவது அகவை நிறைவு விழா!

பரிசின் புறநகர்ப் பகுதிகளில் ஒன்றான Goussainville பகுதியில், குசான்வில் பிரெஞ்சுத் தமிழ்ச்சங்கத்தின் 19 ஆவது அகவை நிறைவு விழா கடந்த (20.05.2018) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 16.00 மணியளவில் இடம்பெற்றது.



பரம் திருமண சேவை
யாழ்ப்பாணம், பிரான்சு போன்ற நாடுகளிலிருந்து மணமகன், மணமகளை தெரிவு செய்ய தொடர்புகொள்ள வேண்டிய சேவை
தொடர்புகளுக்கு: 0695498519
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

Baira Universal Services
TEMPO
Ria
•Devenir agent de RIA et TEMPO.
•To become agent of RIA and TEMPO.
நீங்கள் உங்கள் வர்த்தக நிறுவனங்களில் RIA மற்றும் TEMPO பணமாற்று சேவையை எடுத்து செய்து உங்கள் வருமானத்தை அதிகரித்து கொள்வதற்க்கு Bbaira நிறுவனத்தை தொடர்புகொள்ளுங்கள்!
Téléphone: Chargeurs, écouteur, etc.....
Ordinateur: Claviers, Souris, Cartes mémoire, etc...
Contactez : Mobile : 07 82 37 51 43
Email: bbairauniversalservices@gmail.com

Aubervilliers Quatre chemins ல் ஒரு தமிழ்க்கடை
Anna Marché
அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...
மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
V.I.P Sarl 4 rue Ernest Prévost, 93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65

பாரீஸ் அறிவாலயம்
Paris Arivalayam
7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34
இலங்கை இந்திய புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள், மேலும் நவீன தேடலுக்கான அனைத்து வெளியீடுகள் பாடசாலை அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள், சமயம்சார்ந்த நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் வாங்கிட இன்றே செல்ல வேண்டிய இடம்.

Baby Baloon
பேபி பலூன் டெக்கரேஷன்
Port : 06 13 06 20 29
Tél : 01 39 80 85 23

மாங்கல்யம் நகை மாடம்
தரம் – நேரம் – விலை – டிசைன் – உத்தரவாதம்
பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!
ஓடர் நகைகள் எதுவாயினும் ஒரு கிழமைத் தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!
122 Av Paul Vaillant Couturier - 93120 La Courneuve
Tél & Fax: 01 48 36 40 75
email: mangalyam93120@gmail.com
www.mangalyam-jewels.com

பிரெஞ்சு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!
திரு.சகாதேவன்
☛ எமது மொழிபெயர்ப்புக்கள் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.
☛ நேரில் வரமுடியாதவர்களுக்கு தபால் மூலம் மொழிபெயர்ப்புக்கள் அனுப்பி வைக்கப்படும்.
தொடர்பு கொள்ள
SAGADEVAN Pierre
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

ரஜீன்தரா CASH AND CARRY
BOBIGNY வாழ் மக்களுக்காக...
இலங்கை, இந்திய, ஆசிய மளிகைப்பொருட்கள், மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், இன்னும் பல ...
Tel. : 09 87 03 70 07
1 Ave. Edouard Vaillant - 93000 Bobigny

வீட்டு திருத்தவேலைகள்
உங்கள் வீட்டு திருத்த வேலைகள் அனைத்தும் நீண்டகால அனுபவம் வாய்ந்தவர்களால் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு : 07 51 20 27 28

Neuilly sur marne, Meaux, Torcy, Lagny வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே
EURO SAGEN
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள் மற்றும் கடலுணவு வகைகள்
Ria
MoneyGram money transfer
WESTERN UNION MONEY TRANSFER
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000

தரமான கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
Ocean Indien
30 ஈரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

பாலன்ஸ் சலூன்
தமிழர்களால் நடத்தப்படும் ஆண்கள் அழகு நிலையம்
29 rue Philippe de Girard, 75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80

பாரிஸ் லா சப்பலில்
AMBAAL STORE
பல் பொருள் அங்காடி
Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.st.Denis 75010 Paris

VICHNESH SHOP
அனைத்து வகையான மளிகைப் பொருட்கள் மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலைபேசி அட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்
8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான சிகையலங்கார நிலையம்.
COIFFURE VITHUSA
TÉL: 06 52 44 89 27
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS
M° : Aubervillers 4 chemmins
Bus : 170,150,249,152

ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!
உணவகங்கள் – கடைகள் – தொழிற்சாலைகள் போன்றவற்றில்
STOP !
DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107
● எலிகள் – சுண்டெலிகள்
● கரப்பான் பூச்சிகள்
● தொல்லைகொடுக்கும் பூச்சிகள்
Tél.: 01 60 07 34 29
அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம் ஒரே தடவையில் பயன்பெற்றிட நாடுங்கள்
14 Rue Charles V, 75004 Paris.
சுதா / விமல் : 06 34 18 80 04